ISSN 1391-7501

# உண்மை உதயம் طلوع الحق

உண்மை – 59 ஜூன் - 2013 UNMAI UDHAYAM ரஜப் - 1434 உதயம் – 184

தமிழ் பேசும் முஸ்லிம்களின் இஸ்லாமிய மாத இதழ் - ISLAMIC TAMIL MONTHLY





வருட சிறைத் தண்டனை அனுபவிக்கும் சகோதரி



## குடும்ப உறவைப் பேணுவோம்

40/-

ஜமாஅத் அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா (JASM)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகவதையை இஸ்லாம் கண்டிக்கின்றது

இஸ்லாம் மிருகவதையை ஆதரிப்பதாக சிலர் தவறாக எண்ணுகின்றனர். இஸ்லாம் மிருகவதையை வன்மையாகக் கண்டிக்கிறது. பூனையைக் கட்டிப்போட்டு சாகடித்த முஸ்லிம் பெண்மணி குறித்து நபி(ஸல்) அவர்கள் கூறும்போது, 'அவள் நரகம் நுழைவாள்' எனக் கூறினார்கள்.

தாயையும் குட்டியையும் பிரிப்பது, அவற்றுக்கு உரிய முறையில் உணவளிக்காமல் விடுவது, அவற்றிக்கு மேல் சக்திக்கு மீறிய சுமையை ஏற்றுவது, அவற்றுக்கு ஓய்வு அளிக்காமல் அவற்றிடம் வேலை வாங்குவது அனைத்தையும் இஸ்லாம் கண்டிக்கின்றது.

மனிதனின் தேவைக்காகப் படைக்கப்பட்ட அவற்றில் சிலவற்றை உணவுக்காக அறுத்து உண்பதை அனுமதித்துள்ளது. இது ஜீவகாருண்யத்துக்கு எதிரானதல்ல. மாட்டிலிருந்து பாலும் பெறப்படுகின்றது; மாமிசமும் பெறப்படுகின்றது. பால் மட்டும் தான் பெறவேண்டும் என்றால் காளை மாட்டை வைத்து என்ன பெறுவது? முன்புபோல் வண்டிலுக்குப் பயன்படுத்த முடியாது. விவசாயத்துக்கு இன்று இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதால் காளை மாட்டைப் பயன்படுத்த முடியாத போது அவற்றை வீணே விட்டுவிடுவதா? என்பதை சிந்திக்க வேண்டும்.

மாடு அறுக்கப்படுவது என்பது மிருகவதை இல்லை. எனவே, நாமும் மிருகவதை, பாலியல் தொழில், மது போன்றவற்றை அரசு தடுக்க வேண்டும் என்றே கூறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை உதயம் طلوع الحق

UNMAI UDAYAM

Islamic Tamil Monthly தமிழ் பேசும் முஸ்லிம்களின் இஸ்லாமிய மாத இதழ்

உண்மை - 59, உதயம் - 184

ஜூன்

ரஜப் - 1434

ISSN 1391-7501



ஆசிரியர் S.H.M. இஸ்மாயில் ஸலபி B.A. (Hons)

துணை ஆசிரியர் S.S. ரமழான் ஸலபி B.A. (Hons) M.A. (Cey)



வெளியீட்டு ஆலோசனைக் குழு

- அஷ்ஷெய்க் N.P.M. அபூபக்கர் சித்தீக் (மதனி)
- A.L. கலீலுர் ரஹ்மான் M.A. (Cey)
- M.M. ஹிழ்மதுல்லாஹ் M.Sc. (Cey)
- மௌலவி செய்னுதீன் S. பரீட்
- அஷ்ஷெய்க் N.P. ஜுனைத் (காஸிமி) B.A. (Hons) (Madeena)



வெளியீடு

Jamaath Ansaris Sunnathil Mohammadiyya
Head Office:
Paragahadeniya (60071)
Sri Lanka.



Tel: 037 2229412 Fax: 037 2299244
Web: www.jasm.lk
E-mail: jasm@sltnet.lk
unmaiudayam@gmail.com


சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| தனிப்பிரதி | - 40/- | தெற்காசிய நாடுகள் | - 1100/- |
| தபால் மூலம் | - 50/- | ஐரோப்பிய நாடுகள் | - 1500/- |
| ஆண்டு சந்தா | - 600/- | மத்தியகிழக்கு நாடுகள் | - 1400/- |

ஐக்கிய அமெரிக்க நாடுகள் - 1800/-

## இந்த இதழில்...


ஆசிரியர் பக்கம்:

- சமத்துவம் பேணப்பட வேண்டும் 2
- அல்குர்ஆன் விளக்கக் குறிப்புக்கள் 4
- ஷஃபான் - அடியார்களின் அமல்கள் அல்லாஹ்விடம்... 6
- பிக்ஹுல் இஸ்லாம் - குளிப்பு 10
- குடும்ப உறவைப் பேணுவோம் 11
- சோதனைகளின் போது எமது துலங்கள் 13
- அழைப்புப் பணியின் போது... 21
- IC க.பொ.த. (உ.த) - பிக்ஹ் கலையின் தோற்றமும் வளர்ச்சியும் 25
- தொலைக்காட்சி பார்ப்பது ஏன் கூடாது? 29
- ஆசிரியர் சேவை ஒரு சமூக நலன் 34
- சுலைமான் நபியும் இன்ஷா அல்லாஹ்வும் 38
- 86 வருட சிறைத்தண்டனை அனுபவிக்கும் சகோதரி... 41
- குர்ஆன் சுன்னாவைப் பின்பற்றுவதில் ஸலபுகளின் வழிகாட்டல் 43
- அடாவடித்தனம் மிக்க பொதுபலசேனா அமைப்பு... 46
- உதயத்துடன் ஒரு IT வலம் 46
- கேள்வி - பதில் 49
- கேள்வி - பதில் 50



هذه مجلة شهرية إسلامية باللغة التاملية ، وتصدر من مركز نشر العلوم الإسلامية بجماعة أنصار السنة المحمدية بسريلانكا ، وتحمل بين طياتها الأفكار الإسلامية الصافية في ضوء الكتاب والسنة ، وقد تقتبس من الكتب العربية بعض النصوص الباطلة للإستدلال على بطلانها والنقد عليها



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமத்துவம் பேணப்பட வேண்டும்

இலங்கைத் திருநாட்டில் வாழும் சகல இனங்களும் சமத்துவத்துடனும் சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும். இன்று சில இனவாத சக்திகள் சமூக சமத்துவத்தின் சாவு மணி அடிக்கவெனத் துடிக்கின்றன. மக்களின் பக்கமும் அவர்கள் பக்கமே குவிந்துள்ளது.

முஸ்லிம் தேசத்திற்குள் ஏற்பட்டுவரும் ஒரு ஏற்றத் தாழ்வை சமூக சமத்துவமின்மையை இங்கே தொட்டுக் காட்டலாம் என நான் நினைக்கின்றேன். அண்மையில் ஒரு பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவு புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. கலந்து கொண்ட மாணவர்களில் சுமார் 60 மாணவியர்களும் 10 மாணவர்களும் இருந்தனர். பொதுவாக இலங்கைப் பல்கலைக்கழக நுழைவில் ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் எண்ணிக்கை சற்று கூடுதலாகவே உள்ளது. ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது இதற்கொரு காரணமாக இருக்கலாம்.

ஆனால் முஸ்லிம் சமூகத்தில் பல்கலைக்கழக நுழைவில் ஆண்-பெண் வேறுபாடு என்பது மலைக்கும் மடுவுக்குமிடையிலான வித்தியாசமாக உருவெடுத்துள்ளது.

பெண்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டுகின்றனர் என்ற மகிழ்ச்சியை மழுங்கடிக்கச் செய்யும் அளவுக்கு ஆண்களது கற்கும் ஆர்வம் குன்றிக் குறைந்து போயுள்ளது. சாதாரண தரம் மற்றும் உயர் தரத்திலிருந்தே இந்த வேறுபாடு வெளிப்பட ஆரம்பிக்கின்றது.

மாணவர்கள் சாதாரண தரம், உயர் தரம் முடிந்ததும் உழைக்கும் மனநிலைக்குச் சென்றுவிடுகின்றனர். சிலரது குடும்ப நிலை அந்த நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திவிடுகின்றது. அடுத்து முஸ்லிம்களில் அதிகமானவர்களிடம் உடனடியாக கையில் காசு புரள வேண்டும் என்ற எண்ணமே அதிகம் உள்ளது.

கற்றுத் தேறி ஒரு அரசாங்க உத்தியோகத்தைப் பெற வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாக இருப்பதில்லை. 20, 25 சம்பளம் தருவார்கள். அதை விட வெளிநாடு சென்றால் இப்போதே அதைவிட அதிகமாக உழைத்துக் கொள்ளலாம் என்று கணக்குப் போடுகின்றனர். முஸ்லிம் சமூகம் குறித்த நல்லெண்ணத்தையும் உயர்ந்த எண்ணத்தையும் நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் எழவில்லை. காசுதான் அனைத்தையும் தீர்மானிக்கும் என்று நினைக்கின்றனர்.

இந்த சிந்தனையின் விளைவால் 1300 வருட வரலாற்றைக் கொண்ட இலங்கை முஸ்லிம்கள் ஒரு வர்த்தக சமூகமாகவே பார்க்கப்படுகின்றனர். வர்த்தகம் என்பது கேவலமானது அல்ல. இருப்பினும் எம்மை வர்த்தக சமூகம் என்ற இடத்திலிருந்து கல்விச் சமூகம் என்ற இடத்திற்கு நகர்த்த வேண்டியுள்ளது. இதை வளரும் இளம் சமூகம்தான் இலட்சியமாகவும், இலக்காகவும் கொண்டு எழுச்சியுடன் செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பக்கம்

இன்று எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள ஆண்-பெண் கல்வியில் உள்ள ஏற்றத் தாழ்வு பாரிய சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஆபத்துள்ளது.

பெண்கள் பொதுவாக தம்மை விட அதிகம் படித்த ஆண்களை மணக்க விரும்புவர். ஆண்கள் தம்மை விட கொஞ்சம் குறைவாகப் படித்த பெண்ணைக் கரம் பிடிக்க விரும்பும்புவர். ஒரு சிலர் இதற்கு மாற்றமான மனநிலையில் இருந்தாலும் பெரும்பாலானவர்களின் மனநிலை இதுதான். எதிர்காலத்தில் படித்த முஸ்லிம் பெண்களுக்கு எமது சமூகத்தில் பொருத்தமான மாப்பிள்ளை இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

இது போன்ற சூழ்நிலையில் மார்க்கப் பற்றும் ஈடுபாடும் இல்லாத முஸ்லிம் பெண்கள் சிலர் அந்நிய ஆண்களுடன் வாழ்க்கை நடாத்தும் நிலை ஏற்படலாம். இதனால் மார்க்கத்துடன் ஈடுபாடு இல்லாத ஒரு புதிய தலைமுறை உருவாகும் ஆபத்து உள்ளது.

மனைவி படித்தவளாகவும், கணவன் படிக்காதவனாகவும் இருக்கும் போது குடும்ப வாழ்வில் பலத்த சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மனைவி சொல்லும் சில நல்ல அறிவுரைகளைக் கூட படித்தவள் என்ற திமிரில் பேசுகின்றாள் என கணவன் எடுத்துக் கொள்ளும் நிலை ஏற்படலாம்.

கணவன்-மனைவியருக்கிடையே தேவையற்ற "ஈகோ" பிரச்சினைகள் உருவாகவும், மனைவி சொல்லும் நல்ல விடயத்திற்குக் கட்டுப்பட்டால் கூட நான் என்னை முட்டாளாக எடுத்துக் கொண்டதாக ஆகிவிடுமோ என கணவன் அச்சப்படலாம்.

படிக்காத கணவன் பெண்ணின் தொழில் ரீதியான தொடர்புகள் விடயத்தில் சந்தேகப்படலாம். தேவையில்லாத மனக்கசப்புக்கள் அதிகரிக்கலாம்.

படித்திருக்கின்றேன், தொழிலும் இருக்கின்றது. படிக்காத கணவனுடன் வாழ்ந்து எதற்காக வதைப்பட வேண்டும்? தனித்திருப்போம் என்ற எண்ணம் பெண்ணிடம் மேலோங்கி நின்றால் தேவையற்ற விவாகரத்துக்கள் அதிகமாகலாம்.

மனைவி கணவனை விட அதிக சம்பளம் பெறுபவளாக மாறும் போது அது சில குடும்பங்களில் கௌரவப் பிரச்சினைகளை உருவாக்கி கணவன்-மனைவி உறவைக் கசக்க வைக்கும். இப்படி இதைச் சூழ எண்ணற்ற பிரச்சினைகள் தலைதூக்கும் ஆபத்து உள்ளது.

படித்தாலேனும் பெருத்த சீதனம் இல்லாத மாப்பிள்ளை கிடைக்கலாம் என்ற எண்ணம், பெண் கல்வியில் வளர்ச்சியை உண்டுபண்ணியுள்ளது. இந்த வளர்ச்சி வரவேற்கத்தக்கது என்றால் பெண்களுக்கு இணையாக ஆண்களும் கற்கும் போதுதான் அதன் உண்மையான பலாபலனை சமூகம் அடைய முடியும். "அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு" என்று ஆரம்பத்தில் பெண்களின் கல்வியில் பின்னடைவை ஏற்படுத்தினர். இப்போது ஆட்டோ இருக்க, வெளிநாட்டு வேலைவாய்ப்பிருக்க ஆணுக்கு எதற்குப் படிப்பு என்ற மனநிலை ஆண்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெருத்த தடையாக அமைந்துள்ளது. இந்த மனநிலை மாற வேண்டும். ஆண் பிள்ளைகளையும் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் முதலில் பெற்றோருக்கு ஏற்பட வேண்டும்.

தொலைக்காட்சி, சினிமா, நாகரீக மோகம், கூடாத நட்பு என இன்னும் பல அம்சங்கள் ஆண்களின் கல்வியில் வீழ்ச்சியை உண்டுபண்ணி வருகின்றது. இதற்கான உண்மையான காரணங்கள் கண்டறியப்பட்டு களையப்பட வேண்டும்.

ஏற்றத்தாழ்வு ஆண்-பெண் கல்வி விடயத்தில் ஏற்பட்டுள்ளது. இந்த ஏற்றத்தாழ்வு நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் ஏராளமான சமூகப் பிரச்சினைகளை நாம் சந்திக்க நேரிடும். இது குறித்து சிந்தித்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆன் விளக்கக் குறிப்புக்கள்



# சூறதுல் பகரா

## திருக்குர்ஆன் வழிகெடுக்குமா?

"நிச்சயமாக அல்லாஹ், கொசுவையோ (அற்பத்தில்) அதை விட மேலானதையோ உதாரணமாகக் கூற வெட்கப்படமாட்டான். நம்பிக்கை கொண்டோர், அது தம்முடைய இரட்சகனிடமிருந்து வந்த உண்மை என்பதை அறிந்து கொள்வார்கள். (ஆனால்) நிராகரித்தோரோ, 'இதன் மூலம் அல்லாஹ் என்ன உதாரணத்தை நாடுகின்றான்?' என்று கேட்கின்றனர். (உதாரணமாகக் கூறப்பட்ட) இதன் மூலம் (அல்லாஹ்) பலரை வழிகேட்டில் விட்டு விடுகிறான். இதன்மூலம் அதிகமானோரை நேர்வழியில் நடத்துகின்றான். இதன் மூலம் பாவிகளைத் தவிர வேறு எவரையும் அவன் வழிகேட்டில் விடுவதில்லை." *(2:26)*

இந்த வசனத்தில் "இதன் மூலம் சிலரை வழிகெடுக்கின்றான்" என்ற வாசகத்தை வைத்து சிலர் குர்ஆனைப் படிக்கக் கூடாது; அது வழிகேட்டை உருவாக்கும் எனப் பிரச்சாரம் செய்கின்றனர். இது தவறாகும். மனிதர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காகத்தான் அல்குர்ஆன் அருளப்பட்டது.

இந்த வாதத்தை வைப்போர் சில விடயங்களைக் கவனிக்காமல் விட்டு விடுகின்றார்கள். "இதன் மூலம் அதிகமானவர்கள் நேர்வழியில் செலுத்தப்படுகின்றார்கள்" என அல்லாஹ் கூறுவதைக் கண்டுகொள்ளாமல் விட்டு விடுகின்றனர்.

சிலர் வழிகெடுகின்றார்கள் எனக் கூறும் போது பாவிகள்தான் இதன் மூலம் வழிகெடுவார்கள் என்று கூறப்படுவதையும் கண்டு கொள்ளாமல் பேசுகின்றனர். தப்பான நோக்கத்தில் நல்லதைப் பார்த்தாலும் அது தப்பாகத்தான் தெரியும். குறை, பார்ப்பவனிடம் தான் இருக்கின்றதே தவிர பார்க்கப்படும் பொருளில் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சிலர் இந்தத் தவறான வாதத்திற்கு மறுப்புக் கூறுவதாக நினைத்துக் கொண்டு "இதன் மூலம்" என்ற வார்த்தை அது குர்ஆனைக் குறிக்காது. அல்லாஹ் கூறும் உதாரணத்தைத் தான் குறிக்கும். இங்கு உதாரணம் பற்றித்தான் பேசப்படுகின்றது. குர்ஆன் மூலம் சில பாவிகள் வழிகெடுவார்கள் எனப் பொருள் கொள்வது கடும் குற்றமும் குர்ஆனுக்கு களங்கம் கற்பிப்பதுமாகும் என்று கூறுகின்றனர். இதுவும் தவறான வாதமாகும்.

குர்ஆன் மூலம் சிலர் அதுவும் பாவிகள் வழிகெடுவார்கள் என்று பொருள் கொள்வது குர்ஆனில் களங்கம் கற்பிப்பதாகும் என்றால் அல்லாஹ் கூறும் உதாரணத்தின் மூலம் சிலரை வழிகெடுக்கின்றான் என்பது அல்லாஹ்வின் மீது களங்கம் கற்பிப்பதாகாதா? என்று சிந்தித்தால் இந்த வாதத்தின் வலிமையற்ற தன்மை புரியும்.

அடுத்து குர்ஆனும் அல்லாஹ்வுடைய வார்த்தை, அல்லாஹ் கூறும் உதாரணமும் அல்லாஹ்வுடைய வார்த்தைதான். இரண்டையும் பிரித்துப் பார்க்க முடியாது.

அடுத்து அல்லாஹ் கூறிய சில உதாரணங்கள் குர்ஆனில் இடம் பெற்றுள்ள சில உதாரணங்கள் குறித்து கேள்வி எழுப்பப் பட்ட போதுதான் இந்த வசனமே அருளப்படுகின்றது. அதாவது, குர்ஆனில் கூறப்பட்ட உதாரணம் குறித்துத்தான் இந்த வசனம் பேசுகின்றது. உதாரணம் என்றாலும் அது குர்ஆனில் வந்தால் அது குர்ஆன்தான் என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

எனவே, குர்ஆனையும் தன் மனம் போன போக்கில் ஒருவன் அணுகினால் அவன் வழிகெடுவதற்கு வாய்ப்புள்ளது. இது குர்ஆனின் குறைபாடு அல்ல. குர்ஆனைத் தவறாக அணுகியவனின் குறைபாடாகும் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

## மலக்குகள் ஆட்சேபித்தனரா?

"(நபியே!) இன்னும் உமது இரட்சகன் வானவர்களிடம், 'நிச்சயமாக பூமியில் நான் ஒரு தலைமுறையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவிக்கப் போகின்றேன்' என்று கூறியபோது, நாங்கள் உன் புகழைத் துதித்துக் கொண்டும் உன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டுமிருக்க, அதில் குழப்பத்தை விளைவித்து, இரத்தங்களை சிந்துவோரையா தோற்றுவிக்கப் போகின்றாய்?' என்று கூறினார்கள். அ(தற்க)வன், 'நீங்கள் அறியாதவற்றை யெல்லாம் நிச்சயமாக நான் நன்கறிவேன்' எனக் கூறினான்." (2:30)

மனிதனைப் படைக்கப் போவது குறித்து மலக்குகளிடம் அல்லாஹ் கூறிய போது மேற்குறித்தவாறு அவர்கள் பேசினார்கள். இதனை அல்குர்ஆனுக்கு தமிழில் மொழியாக்கம் வெளியிட்ட ஒருவர், "மலக்குகள் ஆட்சேபனை தெரிவித்தார்கள். அப்போது அவர்களுடன் ஷைத்தான் கூட இருந்தான். அவன் அவர்களைத் தூண்டிவிட்டிருக்க முடியும்" என்றெல்லாம் இஸ்லாமிய அகீதாவுக்கு முரணமாக எழுதியுள்ளார்.

மலக்குகள் செய்தது ஆட்சேபனை அல்ல. அல்லாஹ் சொன்ன போது கருத்துச் சொன்னார்கள். அவ்வளவுதான்! அது ஆட்சேபனை அல்ல. அடுத்து, மலக்குகள் தவறு செய்யமாட்டார்கள் எனும் போது இது பற்றி எழுதும் போது அது மட்டுமன்றி மனிதர்களுக்காக அவர்கள் ஸஜ்தாவும் செய்து தங்கள் தவறுக்குப் பரிகாரமும் தேடிக் கொண்டனர் என எழுதி தாம் செய்த தவறுக்குப் பரிகாரம் காண்பதற்காகத் தான் அவர்கள் ஆதம் நபிக்கு ஸஜ்தா செய்தார்கள் என்ற கருத்தும் சோடிக்கப் பட்டுள்ளது. அவர்கள் மனிதனுக்காகவோ செய்த குற்றத்துக்குப் பரிகாரம் காண்ப தற்காகவோ ஸஜ்தா செய்ய வில்லை. அல்லாஹ்வின் ஏவலுக்காகத்தான் ஸஜ்தா செய்தார்கள்.

## மலக்குகளுக்கு எப்படித் தெரியும்?

மனிதர்கள் இரத்தம் சிந்துவார்கள் என்பது மலக்குகளுக்கு எப்படித் தெரியும் என்றும் சில பாமர மக்கள் சிந்திக்கின்றனர்.

**"அவர்கள், (இரட்சகனே!) 'நீ தூய்மையானவன்; நீ எங்களுக்குக் கற்றுத் தந்ததைத் தவிர வேறறிவு எங்களுக்கில்லை. நிச்சயமாக நீயே நன்கறிந்தவனும்; ஞானமிக்கவனுமாவாய்' எனக் கூறினார்கள்."** (2:32)

இவ்வாறு மலக்குகள் கூறுவதால் மனிதன் பற்றிய விபரத்தை அல்லாஹ்வே மலக்குகளுக்குக் கற்றுக் கொடுத்தான் என்றே புரிந்து கொள்ள வேண்டும்.

## படைக்கப்பட்ட ஒன்றுக்கு ஸஜ்தா செய்யலாமா?

**"பின்னர் நாம் வானவர்களிடம், 'ஆதமுக்கு சுஜூது செய்யுங்கள்' என்று கூறிய போது, இப்லீஸைத் தவிர அவர்கள் (அனைவரும்) சுஜூது செய்தனர். அவன் மறுத்தான், பெருமையும் கொண்டான். அவன் நிராகரிப்பாளர்களில் ஆகிவிட்டான்."** (2:34)

மனிதக்கு ஸஜ்தா செய்யுமாறு அல்லாஹ் மலக்குகளுக்கு ஏவியுள்ளான். இது எப்படி சாத்தியம்? அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் சுஜூது செய்வது ஆகுமா? என்ற தொணியில் கேள்வி எழுப்புகின்றனர் சிலர்.

மற்றும் சிலர் இதை வைத்து வலிமார்கள், ஷெய்குமார்கள், நாதாக்கள் காலில் விழுவதை ஆகுமாக்கிக் கொள்ள முனைகின்றனர். இந்தக் குழப்பத்தை நீக்கப் போகின்றோம் என்ற போர்வையில் சிலர், "ஸஜ்தா என்றால் ஸஜ்தா அல்ல; பணிதல், கட்டுப்படுதல் என்பதுதான் அர்த்தம்" என புது விளக்கம் கொடுத்து புது வழியில் பயணிக்கின்றனர்.

அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் சுஜூது செய்யக் கூடாது. இதுதான் இஸ்லாத்தின் அடிப்படைச் சட்டமாகும். அப்படியென்றால் ஆதம் நபிக்கு சுஜூது செய்யுமாறு மலக்குகளுக்கு எப்படி அல்லாஹ் கட்டளை இடலாம் என்று கேள்வி எழலாம்.

இபாதத் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டால் இந்தக்குழப்பம் நீங்கிவிடும். "அபத" என்றால் அடிபணிந்தான், கீழ்ப்படிந்தான், கட்டுப்பட்டான் என்பது அர்த்தமாகும். "இபாதத்" என்றால் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதல் என்பது அர்த்தமாகும். அல்லாஹ் சுஜூது செய்யச் சொன்னால் சுஜூது செய்வதுதான் இபாதத் - அவனுக்குக் கட்டுப்படுவதாகும். சுஜூது செய்யாமல் இருந்தால் அவனுக்குக் கட்டுப்பட மறுப்பதாக அமைந்துவிடும். ஆதம் நபிக்கு சுஜூது செய்யுமாறு அல்லாஹ் மலக்குகளுக்குச் சொன்னால் அவர்கள் சுஜூது செய்தார்கள். இது அல்லாஹ்வுக்கு அவர்கள் செய்த இபாதத் - கட்டுப்படுதலாகும். அல்லாஹ் செய்! என்று கூறிய போது ஆதமுக்காக செய்யப்பட்ட சஜூது ஷிர்க் அல்ல; அது இபாதத்தாகும்.

அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் சுஜூது செய்யக் கூடாது என இஸ்லாம் கூறும் போது சுஜூது செய்தால் அது இபாதத் - கட்டுப்படுதல் அல்ல. மாறுசெய்தல், இணை

12 ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷஃபான்

## அடியார்களின் அமல்கள் அல்லாஹ்விடம் முன்வைக்கப்படும் மாதம்!

-அஷ்ஷெய்க் N.P. ஜுனைத் காஸிமி மதனி

"நான் நபி(ﷺ) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! ஷஃபான் மாதத்தில் நீங்கள் நோன்பு நோற்பதைப் போன்று ஏனைய மாதங்களில் நீங்கள் நோன்பு நோற்பதைக் காணவில்லையே! என்று கேட்டேன். அதற்கு நபியவர்கள், அது ரஜபுக்கும் ரமழானுக்குமிடையில் வரும் மாதமாகும். இம்மாதம் பற்றி மக்கள் அலட்சியமாகவே இருக்கிறார்கள். இம்மாதத்தில் அடியார்களுடைய அமல்கள் அல்லாஹ்விடம் எடுத்துக் காட்டப்படுகின்றன. இம்மாதத்தில் நோன்பு இருக்கும் நிலையில் எனது அமலும் அல்லாஹ்விடம் எடுத்துக் காட்டப்பட வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்" எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : உஸாமா பின் ஸைத்(ரழி)
நூற்கள் : நஸாஈ(2357), ஸஹீஹ் அத்தர்ஙீப் வத்தர்ஹீப்(1022), முஸ்னத் அஹ்மத்

மனிதனின் ஆன்மீக மற்றும் லௌகீக வெற்றிக்கு இஸ்லாம் பல்வேறு வழிகாட்டல்களைக் காட்டித் தருகின்றது. இஸ்லாம் காட்டும் இத்தகைய வழிகாட்டல்களையும் இனிய போதனைகளையும் கடைப்பிடித் தொழுகும் போது பல பயன்களையும் மனிதன் பெற்றுக் கொள்கின்றான். ஏக இறைவனால் விதிக்கப்பட்ட அனைத்து கடமைகளும் மனித வெற்றிக்கான உயர்ந்த தத்துவங்களையும் தாற்பரியங்களையும் குறிக்கோள்களையுமே உள்ளடக்கியிருக்கின்றன. நோன்பு எனும் கடமையும் இதில் முக்கியமானதாகும்.

இறையச்சம், இறைவனுக்கு அடி பணியும் சீரிய பண்பு, தியாகம், இரக்க சிந்தனை, எதையும் தாங்கும் மனப்பக்குவம், பொறுமை, உளக்கட்டுப்பாடு, திடவுறுதி, ஏழை எளியோரின் கஷ்ட நிலை உணர்தல் போன்றவை பொதுவாக நோன்பு கற்றுத்தரும் பாடங்களாகும். சுருங்கக் கூறின் நோன்பு ஒரு முஸ்லிமைப் பூரண மனிதனாக்குகின்றது.

மனிதனிடம் ஆர்ப்பரித்து எழும் மிருக உணர்வுகளையெல்லாம் அடக்கி, அவனை உன்னத நிலைக்குக் கொண்டு செல்லும் வலுக்கட்டாயப் பயிற்சியே ரமழான் நோன்பாகும். இப்பயிற்சி ரமழானோடு மட்டும் நின்று விடாமல் அது படிமுறை ரீதியாக சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக வலியுறுத்தப்பட்டவைகளே சுன்னத்தான நோன்புகள். இந்த அடிப்படையில் ரமழான் நோன்பு, ஷவ்வால் மாத ஆறு நோன்புகள், வியாழன் திங்கள் ஆகிய வார நோன்பு, ஒரு நாள் விட்டு ஒரு நாள் பிடிக்கும் நோன்பு, ஆஷூரா, அரபா, துல் ஹஜ் ஆரம்பப் பத்து மற்றும் ஷ'பான் மாத சுன்னத்தான நோன்புகள் அனைத்தும் மேற்கூறப்பட்ட உயரிய குறிக்கோள்களின் அடிப்படையில் எப்பொழுதும் வாழவே முஸ்லிம்களைப் பயிற்றுவிக்கின்றன. இத்தகைய நோன்புகளை வெறும் போதனைகளாக மட்டுமன்றி தமது வாழ்விலும் செயல்படுத்திக் காட்டியவர்கள் தான் காருண்ய நபி முஹம்மத்(ﷺ) அவர்கள்.

இந்த வகையில் நபி(ﷺ) அவர்கள் ரமழானைத் தவிரவுள்ள ஏனைய மாதங்களில் அதிகமான நோன்பு நோற்ற மாதமென்றால் அது ஷ'பான் மாதம்தான் என்பதை நாம் விளக்க முற்பட்டிருக்கும் ஹதீஸும் இன்னும் பல ஹதீஸ்களும் தெளிவாகப் போதிக்கின்றன. இதன் மூலம் ஷ'பான் மாத நோன்புகளின் சிறப்பையும் அம்மாதத்தின் முக்கியத்துவத்தையும் நாம் விளங்கிக் கொள்ளலாம். இதைக் கீழ்க்காணும் ஹதீஸ்களும் தெளிவுபடுத்துகின்றன.

**"நபி(ﷺ) அவர்கள் நோன்பு நோற்பதை விட்டுவிடமாட்டார்கள் என்று நாம் நினைக்கின்ற அளவிற்கு நோன்பு நோற்றுக் கொண்டு இருப்பார்கள். நோன்பு நோற்பதை விட்டு விட்டார்கள் என்று நாம் நினைக்கின்ற அளவிற்கு அவர்கள் நோன்பு நோற்பதை விட்டு விடுவார்கள். நபி(ﷺ) அவர்கள் ரமழான் மாதத்தைத் தவிர வேறு ஒரு மாதத்தில் பரிபூரணமாக நோன்பு நோற்றதை நான் கண்டதில்லை. ஷஃபான் மாதத்தைத் தவிர**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஒரு மாதத்தில் அதிகமாக அவர்கள் நோன்பு நோற்றதையும் நான் கண்டதில்லை." (அறிவிப்பவர்: அன்னை ஆயிஷா(ரழி), நூல் : புகாரி)

**"ஷஃபான் மாதத்தில் நோன்பு நோற்பதால் அம்மாதம் நபி(ஸல்) அவர்களுக்கு மிக விருப்புக்குரிய மாதங்களில் ஒன்றாக இருந்தது. மிகச் சில நாட்கள் தவிர மீதமுள்ள அனைத்து நாட்களிலும் அம்மாதத்தில் அவர்கள் நோன்பு நோற்றவர்களாகவே காணப்பட்டார்கள்."** (நூல்: நஸாஈ)

**"நபி(ஸல்) அவர்கள் ஷஃபான் மாதம் முழுவதும் நோன்பு நோற்பவர்களாகவே இருந்தார்கள்."** (அறிவிப்பவர் : ஆயிஷா(ரழி), நூற்கள் : முஸ்லிம், நஸாஈ)

## ஷ∴பானில் நோன்பு நோற்பது எதற்காக?

நபி(ஸல்) அவர்கள் ஷ∴பான் மாதத்தில் அதிகம் நோன்பு நோற்றதன் இரகசியம், உயர் நோக்கம் என்பன குறித்து இமாம்கள் பலரும் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர்.

"ஒவ்வொரு மாதமும் நோற்கப்பட வேண்டிய மூன்று நோன்புகள் பயணம் போன்ற காரணங்களால் விடுபடும்போது ஷ∴பானில் எல்லாவற்றையும் சேர்த்து நபி(ஸல்) அவர்கள் நோற்றுள்ளார்கள்" என்று இமாம் இப்னு பத்தால்(ரஹ்) அவர்களும், "ரமழான் மாதத்தில் விடுபட்ட நோன்புகள் அனைத்தையும் நபிகளாரின் மனைவியர் ஷ∴பானில் கழாச் செய்யும் போது அவர்களுடன் சேர்ந்து நபி(ஸல்) அவர்களும் நோன்பு நோற்பார்கள்" என்று சில அறிஞர்களும், "ரமழான் மாதத்தைக் கண்ணியப்படுத்தும் நோக்கிலேயே ஷ∴பானில் நபியவர்கள் அதிக நோன்பு நோற்றார்கள்" என்று வேறு சிலரும் விளக்கமளிக்கின்றனர்.

பெருமானார்(ஸல்) அவர்கள் ஷ∴பானில் அதிகம் நோன்பு நோற்றதன் இரகசியம் குறித்து இப்படியான பல்வேறு கருத்துக்கள் இருப்பினும் நாம் விளக்கத்துக்குக்காக எடுத்துக் கொண்ட ஹதீஸில் **"ஹிப்பு ரஸூலில்லாஹ்"** (நபிகளாரின் நேசத்துக்குரியவர்) என்ற சிறப்புப் பட்டம் பெற்ற உஸாமா பின் ஸைத்(ரழி) அவர்கள் இது பற்றி நபியவர்களிடம் வினவியதற்கு அவர்கள் அளித்த நேரடி பதிலே அதன் இரகசியத்தையும் உயர் நோக்கத்தையும் அறிந்து கொள்ளப் போதுமானதாகும். அதுதான், "மனிதர்கள் ஷ∴பான் குறித்து அலட்சியப் போக்குடன் நடந்து கொள்கின்றனர். எனவே, அதனை முக்கியப்படுத்துமுகமாகவும் ஷ∴பானில் மனிதர்கள் புரியும் அமல்கள் அனைத்தும் அல்லாஹ்விடம் முன்வைக்கப்படுவதால் நோன்பு நோற்றுள்ள நிலையில் அவ்வமல்கள் அவனிடம் முன்வைக்கப்படுவதை நபியவர்கள் விரும்பியதாலுமே அம்மாதத்தில் அவர்கள் அதிகம் நோன்பு நோற்றார்கள்."

எனவே, மக்கள் அசிரத்தை காட்டும் ஷ∴பான் மாதம் சிறப்பு வாய்ந்தது. முடியுமானவரை நோன்புகள் நோற்று அதை நாம் சங்கைப்படுத்த வேண்டும். அடியார்கள் செய்யும் அமல்கள் அம்மாதத்தில் அல்லாஹ்விடம் எடுத்துக்காட்டப்படுவதால் நோன்புடன் இன்னும்பல நற்காரியங்களும் செய்து இறையன்பைப் பெற முயல வேண்டும். இதுவே, ஷ∴பானை நாம் சங்கைப்படுத்தியதாக அமையும்.

அடுத்து ஷ∴பான் மாத நோன்பு ரமழான் மாத நோன்புக்கான சிறந்ததோர் பயிற்சியாகவும் அமைகின்றது. இயல்பிலேயே திடீரென ஏற்படும் உடல், உள ரீதியான கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ளும் பக்குவம் மனித மனங்களுக்கு இல்லை. ஆனால், அதை முன் கூட்டியே ஒரு பயிற்சியாகக் கொண்டு வரும்போது சோர்வடையாது ஏற்றுக்கொள்ளும் பக்குவம் உண்டாகிறது. எனவேதான் பசி, தாகம், இச்சை போன்றவற்றை அடக்கி ஷ∴பான் மாத நோன்பு நோற்கும் ஒருவர் ரமழான் நோன்பை கஷ்டமாகவும் பாரமாகவும் கருதாது இலகுவாக நோற்று விடுவார். இந்த வகையில் ஷ∴பான் நோன்பு ரமழான் நோன்பிற்கான சிறந்ததோர் பயிற்சியாகவே அமைகிறது எனலாம்.

## அமல்கள் அல்லாஹ்விடம் முன்வைக்கப் படுவது ஷ∴பானில் மட்டுமா?

**"அமல்கள் அனைத்தும் ஷஃபான் மாதத்தில் அல்லாஹ்விடம் முன்வைக்கப்படுகின்றன"** என்ற நாம் தெளிவுரைக்காக எடுத்துக் கொண்ட இந்த வாசகம் புகாரி முஸ்லிமில் வரக்கூடிய "இரவில் செய்த அமல் பகல் வருவதற்கு முன்னரும், பகலில் செய்த அமல் இரவு வருவதற்கு முன்னரும் அல்லாஹ்விடம் முன்வைக்கப் படுகின்றன" என்ற ஹதீஸுக்கும் சுனன் நஸாஈ இல் வரக்கூடிய "திங்கள், வியாழன் ஆகிய இரு நாட்களும் அமல்கள் அல்லாஹ்விடம் முன்வைக்கப்படும் தினங்களாகும். நான் நோன்பு நோற்றுள்ள நிலையில் எனது அமலும் இத்தினங்களில் அல்லாஹ்விடம் முன்வைக்கப் படுவதை விரும்புகின்றேன்" என்ற ஹதீஸுக்கும் முரணாக இருக்கின்றனவே என்ற கேள்வி எழலாம். இதை ஆய்வு செய்யும் ஹதீஸ் துறை அறிஞர்கள் இவற்றில் ஒன்றையொன்று நிராகரித்து விடாமல் பொது இணக்கப் பாடொன்றுக்கு வருகின்றார்கள். அதுவே ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்துமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, இரவு அமல் பகல் வருவதற்கு முன்னரும், பகல் அமல் இரவு வருவதற்கு முன்னரும் அல்லாஹ்விடம் முன்வைக்கப்படுகின்றன என்பது ஒரு தினத்துடைய அமல்கள் மட்டுமாகும். திங்கள், வியாழன் தினங்களில் அல்லாஹ்விடம் முன்வைக்கப்படும் அமல்கள் ஒரு வாரத்தினுடைய அமல்களாகும். நாள், வாரம் எனச் சேர்த்து ஒரு வருடத்தினுடைய ஒட்டு மொத்த அமல்களும் ஷ.்பான் மாதத்தில் அல்லாஹ்விடம் முன்வைக்கப்படுகின்றன. **(பார்க்க: சுனன் அந்நஸாஈ பீ ஹாஷியத்திஸ் ஸின்தீ : 3/516, 517)**

தினம், வாரம், வருடம் என அடியார்களின் செயல்கள் அல்லாஹ்விடம் முன் வைக்கப்படுவதால் அவனுக்கு என்ன லாபம் இருக்கின்றது? அவன்தான் சகலவற்றின் செயல் பாடுகளையும் நுணுக்கமாக அறிந்தவனாக இருக்கின்றானே? இதற்குப் பல இரகசியங்கள் இருக்கலாம். அவை எமக்குத் தெளிவு படுத்தப்பட வில்லையாயினும் தினமும் வாரமும் வருடமும் அமல்களின் அறிக்கைகள் அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கப்படுவதால் ஒரு மு.்மினை தீமைகளிலிருந்து காத்து தண்டனை களுக்குப் பயப்படுவதன் மூலம் நன்மைகளைச் செய்யத் தூண்டவும், சுயபரிசோதனை செய்து கொள்ளும் உணர்வை ஏற்படுத்தி விடவும் உதவும் என்பது மட்டும் நிச்சயம்.

## ஷ.்பான் நடுப்பகுதிக்குப் பின்னர் நோன்பு நோற்கத் தடையேதுமில்லை.

ஷ.்பானின் சரி அரைவாசிக்குப் பின்னால் நோன்பு நோற்பது கூடாது என்ற தடை உத்தரவு சில ஹதீஸ் நூற்களில் வந்திருக்கின்றது. இதை வைத்து சிலர் ஷ.்பான் 15 இற்குப் பிறகு நோன்பு நோற்கவே கூடாது என்கின்றனர்.

**“ஷ.்பானின் அரைவாசிப் பகுதி வந்துவிட்டால் நீங்கள் நோன்பு நோற்காதீர்கள்”**
அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரழி)
நூற்கள் அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, அஹ்மத்

இந்த ஹதீஸ் பற்றி விளக்கம் கூறும் அறிஞர்கள், “உடல் பலவீனம் ஏற்பட்டு ரமழான் மாதத்தில் நோன்பு நோற்க முடியாமல் போகும் என்பதற்காகவே நபியவர்கள் இவ்வாறு தடையுத்தரவு பிறப்பித்தார்கள்” என்றும் “ஷ.்பானில் தொடர்ந்து நோன்பு நோற்பதால் உடல் பலம் குன்றிவிடும் என்று அஞ்சுபவர்களுக்குத்தான் இந்தத் தடையே தவிர உடல் பலம் குன்றாது என்றுள்ளவர்களுக்கு இத்தடை கிடையாது” என்று வேறு சிலரும் பற்பல விளக்கங்களைக் கொடுக்கின்றனர். எனினும் இந்த ஹதீஸின் தரம் பற்றி ஹதீஸ் திறனாய்வுக் கலை அறிஞர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. இமாம்களான திர்மிதி, இப்னு ஹிப்பான், ஹாக்கிம்(ரஹ்) போன்றோர் இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதுதான் என சரிகாணும் அதேவேளை, ஹதீஸ் துறையில் இவர்களை விட பேரறிஞர் களாக மதிக்கப்படும் இமாம்களான அஹ்மத் இப்னு ஹன்பல், அபூஸுர்அதர் ராஸீ, அப்துர்றஹ்மான் இப்னு மஹ்தீ, அல் அத்ரம் (ரஹ்) போன்றோர் இந்த ஹதீஸ் ‘முன்கர்’ என்ற பலவீனமான வகையைச் சார்ந்தது என்று கூறி மறுக்கின்றனர்.

ஹதீஸ்துறை அறிஞரான இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல்(ரஹ்) அவர்கள்: “இந்த ஹதீஸை அபூஹுரைரா(ரழி) அவர்கள் மூலம் தனது தகப்பனார் வாயிலாக அறிவிக்கும், ‘அலா.். இப்னு அப்திர்ரஹ்மான்’ என்பவர் இந்த ஹதீஸை விட மிகவும் வேறு ஒரு ‘முன்கரான’ ஹதீஸை அறிவிக்கவில்லை யெனக் கூறிவிட்டு, புகாரி முஸ்லிமில் இடம்பெறும் பின்வரும் ஹதீஸை வைத்து அதை மறுக்கின்றார். “உங்களில் ஒருவர் ரமழானுக்கு ஒரு நாள் அல்லது இரு நாட்களுக்கு முன்னால் நோன்பு நோற்க வேண்டாம். எனினும் ஒருவர் (வழமையாக) தனது நோன்பை நோற்று வருபவராக இருந்தால் அன்றைய தினமும் அவர் நோன்பு நோற்கட்டும்”. ரமழானுக்கு இரு நாட்களை விட அதிமான நாட்கள் இருக்கும் முன் ஷ.்பான் நோன்பு நோற்கலாம் என்று இதன் மூலம் விளங்குகின்றது” என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

இமாம் அத்ரம்(ரஹ்) அவர்கள்: “நபி(ஸல்) அவர்கள் ஷ.்பான் மாதம் முழுதும் நோன்பு நோற்றார்கள். “ஷ.்பானில் அதிகமாக நோன்பு நோற்றார்கள்” என்பன போன்ற ஆதார பூர்வமான அனைத்து ஹதீஸ்களுக்கும் இது முற்றிலும் மாற்றமாக இருப்பதால் ஸஹீஹான ஹதீஸ்களுக்கெல்லாம் முரண்படும் “ஷாத்” என்ற பலவீன வகையைச் சார்ந்ததாக இந்த ஹதீஸ் ஆகிவிடுகின்றது” என்று கூறுகின்றார்கள்.

இமாம் தஹாவீ(ரஹ்) அவர்கள் இதுபற்றிக் கூறும் போது “இந்த ஹதீஸ் ஸஹீஹான ஹதீஸ்கள் மூலம் மாற்றப்பட்டு விட்டது எனக்கூறி அநேகமான அறிஞர்கள் இந்த ஹதீஸை வைத்து அமல் செய்ய முடியாது எனக் கூறியுள்ளனர் என்பதாகவும் குறிப்பிட்டு அதுபற்றிய “இஜ்மா.்” (ஏகோபித்த) கருத்தையும் அந்த அறிஞர்கள் தெரிவிக்கின்றார்கள்” என்று கூறுகிறார். **(பார்க்க: அல்பிதஉல் ஹவ்லிய்யா- லிஷ்ஷெய்க் அப்துல்லாஹ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அப்துல் அஸீஸ் பின் அஹ்மத் அத்துவைஜிரீ, பக்கம் 286-287)

எனவே, ஷ∴பான் மாதத்தில் எந்தளவு நோன்பு நோற்க முடியுமோ அந்தளவு நோற்பது நபிவழியாக இருக்கின்றது. மாறாக, 15 ஆம் நாள்தான் சிறப்பான நாள்; அதுவே 'பராஅத்'துடைய நாள்; அன்று நோற்கும் நோன்பு மட்டுமே சிறப்பானது என்று கூறுவது நபி(ﷺ) அவர்களின் வழிமுறைக்கும், ஸலபுஸ் ஸாலிஹீன்களின் வழிகாட்டல் களுக்கும் முற்றிலும் முரணானதாகும்.

## பராஅத் இரவும், பராஅத் நோன்பும்:

நபிகள் நாயகம்(ﷺ) அவர்கள் அதிகம் அழுத்தம் கொடுத்து போதித்துச் சென்ற ஷ∴பான் மாத நோன்புகள் இன்று புறக் கணிக்கப்பட்டு நபியவர்கள் காட்டித் தராத 'பராஅத்' நோன்பும், அதில் புரியப்படும் சில வணக்கங்களும் ஷ∴பானின் சிறப்புக்களை எடுத்தியம்புவதற்காக சுன்னாவின் பெயரால் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது கவலை தரும் விடயமாகும்.

ஷ∴பான் மாதத்தின் 15 ஆம் நாள் இரவே "பராஅத்" என்ற பெயரில் அழைக்கப்பட்டு இனிப்புப் பண்டங்கள், தீன் பண்டங்கள் தயாரித்து பயபக்தியுடன், பாத்திஹாக்கள் ஓதப்பட்டு இன்று கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த நாளுக்கு இப்படியொரு பெயரை அல்லாஹ்வோ, அவன் தூதரோ சூட்டியதற்கு சரியான சான்றெதுவும் இல்லை. அவ்விரவுக்கு சிறப்பிருப்பதாகக் கருதிச் செய்யப்படும் தொழுகை, பிரார்த்தனை போன்ற வணக்கங்கள் கண்ணியத்திற்குரிய இமாம்களாலும், இஸ்லாமிய அறிஞர்களாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளன.

**"ஷ∴பான் மாதத்தின் 15 ஆம் இரவு வந்தால் அவ்விரவில் நீங்கள் நின்று வணங்கி, அன்றைய பகலில் நீங்கள் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்"** (நூல்: இப்னுமாஜா) என்ற செய்தியே பராஅத் இரவுக்கும் பராஅத் நோன்புக்கும் சிலர் முன்வைக்கும் ஆதாரமாகும்.

"இப்னு அபீ சப்ரா" என்பவர் இதன் அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறுவதால் இந்த ஹதீஸ் பலவீனமானதாகும். இமாம்களான புகாரி(ரஹ்), அஹ்மத்(ரஹ்), இப்னு ஹஜர் அஸ்கலானீ(ரஹ்) இப்னு முஈன்(ரஹ்) போன்றோர் இவர் ஹதீஸ்களை இட்டுக் கட்டக்கூடியவர் எனக் கூறியுள்ளனர். மேலும், பராஅத் இரவுத் தொழுகை பற்றி வந்துள்ள ஹதீஸ் "பாத்திலானது" என இமாம் ஹாபிழ் அல்இராக்கீ(ரஹ்) தனது "அல்மௌழூஆத்" (இட்டுக்கட்டப்பட்டவைகள்) எனும் நூலில் குறிப்பிடுகின்றார்கள். 'ரஜப் மாதத்தில் மி∴ராஜுக்கென உருவாக்கப்பட்ட தொழு கையும், ஷ∴பானின் பராஅத் தொழுகையும் மிக மோசமான வெறுக்கத்தக்க இரு பித்அத்துக்களாகும்' என இமாம் நவவீ(ரஹ்) அவர்களும் குறிப்பிடுகின்றார்கள். **(இது பற்றி மேலதிகமாக அறிய அஷ்ஷெய்க் முஹம்மது அப்துஸ்ஸலாம் ஹிழ்ர் அத்துகைரீ அவர்களது 'அஸ்ஸுனன் வல்முப்ததஆத் அல்முதஅல்லகா பில் அத்காரி வஸ்ஸலவாத்' எனும் நூலை பார்க்கவும்)**

**"ஷவ்வால் மாத ஆறு நோன்புகள் நோற்பவன் அந்த வருடம் முழுவதும் நோன்பு நோற்றவனைப் போலாவான்"** (நூல்: முஸ்லிம்)

**"வியாழன், திங்கள் ஆகிய இரு தினங்களிலும் அடியார்களின் அமல்கள் அல்லாஹ் விடம் காட்டப்படுகின்றன. நோன்பிருக்கும் நிலையில் தனது அமலும் அல்லாஹ்விடம் காட்டப்பட வேண்டும் என நபியவர்கள் விரும்பினார்கள்"** (நூல்: திர்மிதி)

**"ஆஷூரா நோன்பு நோற்பவனுக்கு கடந்த வருடம், எதிர்வரும் வருடம் (என இரண்டு வருடங் களில்) பாவங்கள் மன்னிக்கப்படும்"** (முஸ்லிம்)

இத்தகைய உத்தரவாதங்கள் கூறப்பட்ட நோன்புகளை எமது முஸ்லிம்களில் அதிகமானோர் அலட்சியம் செய்கிறார்கள். ஆனால் சரியான சான்றுகளெதுவும் இல்லாத, எந்த விதமான உத்திரவாதமும் கூறப்படாத "பராஅத்" நோன்பை நோற்க ஆர்வம் கொள்கின்றார்கள். இது கவலைப்பட வேண்டிய விடயமாகும்.

ஆகவே ஷ∴பானின் 15 ஆம் நாளுக்கு தனிப்பட்ட சிறப்புக்கள் எதுவும் இல்லை என்பதை விளங்குவதுடன் முன்னர் பைத்துல் முகத்தஸாக இருந்த கிப்லா பின்னர் மஸ்ஜிதுல் ஹராமாக மாற்றப்பட்ட நிகழ்வும், அபீசீனி யாவுக்கு முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்த நிகழ்வும், அப்துல்லாஹ் இப்னு ஜஹ்ஷ்(ரழி) அவர்களது தலைமையில் சிறிய படையொன்று அனுப்பப்பட்ட வரலாறும் "ஷஹ்ருல் ஜிஹாத்" (ஜிஹாதின் மாதம்) என அழைக்கப்பட்டும் ரமழானில் உலக வரலாற்றையே மாற்றி யமைத்த பத்ர் யுத்த நிகழ்வுக்கு முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்ட மாதமாகவும் திகழும் புனித ஷ∴பானில் அதிகமதிகம் நோன்பும், ஏனைய நற்காரியங்களும் செய்து புனித ரமழானை வரவேற்கத் தயாராவோமாக! ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்ஹ்

# பிக்ஹுல் இஸ்லாம் - சுத்தம்

# குளிப்பு

III

தொடர் : 11

S.H.M. ஸலபி

## மாதவிடாய், பிள்ளைப் பேற்று இரத்தம், தொடர் உதிரப் போக்கு பற்றிய சட்டங்கள்.

**ஹைழ்:**

மாதவிடாய், மாதத்தீட்டு என்று கூறப்படும் இதற்கு அரபியில் "ஹைழ்" என்று கூறப்படும். இந்தக் காலங்களில் பெண் ஒதுக்கி வைக்கப்பட்டதால் மாதத்தீட்டு என்று கூறப்படுகின்றது. இஸ்லாம் இந்த நம்பிக்கைக்கு எதிரானதாகும்.

ஹைழ் என்றால் எவ்வித நோயோ, காயமோ இல்லாமல் பெண்ணின் கருவரையிலிருந்து இயற்கையாக மாதாந்தம் வெளிவரும் இரத்தத்தைக் குறிக்கும்.

இந்த இரத்தத்தின் நிறங்கள் குறித்தும் ஹதீஸ்களில் பேசப்பட்டுள்ளது.

1. சாதாரண இரத்தத்தின் நிறம்
2. கருப்பு நிறம்

**"பாத்திமா பின்து ஹுபைஸ் என்ற பெண்மணி தொடர் உதிரப் போக்குடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் நபியவர்களிடம் இது குறித்துக் கேட்ட போது ஹைழுடைய இரத்தமாக இருந்தால் அது கருப்பாக அறியத்தக்கதாக இருக்கும். தொழுகையை விட்டுவிடு. அப்படியில்லாமல் (இரத்தம்) இருந்தால் (ஒவ்வொரு தொழுகைக்கும்) வுழூச் செய்து தொழுதுகொள்.... என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்."**

அறிவிப்பவர்: பாத்திமா பின்து அபூஹுபைஸ்
ஆதாரம்: அபூதாவுத்- 286, 304, நஸாஈ- 215, 362, இப்னு ஹிப்பான்- 1348

(அல்பானி ஸஹீஹ், ஹஸன் என்று கூறுகின்றார்.)

3. மஞ்சள் நிறம்:
4. கருப்புக்கும், வெள்ளைக்கும் இடைப்பட்ட அசுத்தமான நீரைப்போன்ற நிறம்:

ஸஹாபிப் பெண்மணிகள் சிறிய போத்தல்களில் ஹைழுடைய மஞ்சல் கலர் பட்ட பஞ்சை வைத்து ஆயிஷா(ரழி) அவர்களிடம் அனுப்பி நான் தொழ வேண்டுமா? எனக் கேட்டார்கள். பஞ்சு வெள்ளையாக வரும்வரை அவசரப்பட வேண்டாம் என ஆயிஷா(ரழி) அவர்கள் பதில் கூறினார்கள்.

ஒரு பெண்ணின் வழமையான ஹைழுடைய நாட்களுக்குப் பின்னர் மஞ்சள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற அல்லது கருப்புக்கும், வெள்ளைக்கும் இடைப்பட்ட நிறத்தில் இரத்தம் வந்தால் அது ஹைழாகக் கணிக்கப்படமாட்டாது. அவ்வாறு வந்தால் வுழூ முறியும். குளிப்பு கடமையாக மட்டாது.

**"மாதவிடாய் அல்லாத நாட்களில் வெளிப்படும் மஞ்சள் நிற இரத்தத்தையும், ஒருவகை மண்நிற இரத்தத்தையும் மாதவிடாயாக நாங்கள் கருதுவதில்லை என உம்மு அதிய்யா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்."**

(புஹாரி: 326)

### ஹைழின் கால அளவு

ஒரு பெண்ணின் ஹைழுடைய கால அளவு எது என்பது குறித்துத் தீர்க்கமான முடிவு கூறமுடியாது. பெரும்பாலும் மூன்று நாட்கள் என்றிருந்தாலும் ஆளுக்கு ஆள் அதில் வித்தியாசம் வர வாய்ப்புள்ளது. இது குறித்து ஷைக் இப்னுபாஸ்(ரஹ்) அவர்கள் கூறும் போது,

"பெண்களின் ஹைழ் 15 நாட்களை விட அதிகமாக நீடிக்காது. அப்படி நீடித்தால் அது ஹைழுடைய இரத்தம் அல்ல" என்று குறிப்பிடுகின்றார்கள்.

### நிபாஸ்:

பிள்ளைப் பேற்றின் காரணமாக வெளியாகும் இரத்தத்திற்கே "நிபாஸ்" என்று அரபியில் கூறப்படும். இதனுடைய ஆகக் கூடிய கால அளவு நாற்பது நாட்கள் ஆகும்.

நிபாஸுடைய பெண்கள் நபியவர்களுடைய காலத்தில் நாற்பது நாட்கள் (தொழுகையை விட்டும்) அமர்ந்திருப்பார்கள் என உம்மு ஸலமா(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஒரு பெண்ணுடைய நிபாஸ் நாற்பது நாட்களுக்குள் நின்றுவிட்டால் அவள் குளித்துக் கொண்டு தொழ வேண்டும். ரமழானுடைய காலமென்றால் நோன்பு நோற்க வேண்டும். அவள் இத்தாவில் இருக்கவில்லை என்றால் நிபாஸ் நின்றதும் மறுமணம் புரியலாம். நாற்பது நாள் என்பது உச்சக்கட்ட அளவைக் குறிக்கும்.

ஒரு பெண்ணுடைய நிபாஸுடைய இரத்தம் நாற்பது நாட்களையும் தாண்டி வந்து கொண்டிருந்தால் அவள் குளித்துவிட்டுத் தொழ வேண்டும். நாற்பது நாட்கள் தாண்டிய பின்னர் வரும் இரத்தம் நிபாஸுடைய இரத்தமாக இருக்காது. இது குறித்து ஷெய்க் இப்னுபாஸின் பதாவா 29/128 இல் பேசப்பட்டுள்ளது.

நாற்பது நாட்கள் கழிந்த பின்னர் அவளைக் குளிப்பாட்டுவதற்கென நாற்பது குளிக்க வைத்தல் என்ற பெயரில் சடங்குகள் நடை பெறுகின்றன. இவை இஸ்லாமிய நடைமுறைக்கு அப்பாற்பட்டதாகும்.

## ஹைழ், நிபாஸுடைய பெண்கள் செய்யக்கூடாதவை:

மாதவிடாய் மற்றும் நிபாஸுடைய பெண்கள சில விடயங்களைக் கட்டாயம் தவிர்ந்து கொள்ள வேண்டும். நமது பெண்கள் மற்றும் பல விடயங்களைத் தாமாக உருவாக்கித் தமக்குத் தாமே தடைகளை உண்டாக்கியுள்ளனர்.

### 1., 2. தொழுகை, நோன்பு:

ஹைழ் மற்றும் நிபாஸுடைய பெண்கள் தொழுகை, நோன்பு ஆகிய இரண்டையும் கட்டாயம் விட வேண்டும். இந்தக் காலத்தில் விடுபட்ட தொழுகைகளைக் கழாச் செய்யத் தேவையில்லை. ஆனாலும் நோன்பைக் கழாச் செய்ய வேண்டும்.

**"ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் அவள் தொழுகையையும், நோன்பையும் விட்டுவிடுவதில்லையா? என நபி(ﷺ) அவர்கள் பெண்களிடம் கேட்ட போது அவர்கள் ஆம் என்று கூறினார்கள்....."**

அறிவிப்பவர்: அபூஸயீதுல் குத்ரி(ரழி) ஆதாரம்: புஹாரி- 304)

மாதவிடாயுடைய பெண் தொழுகை, நோன்பு இரண்டையும் விட வேண்டும் என்பதற்கு இது ஆதாரமாகும்.

**"மாதவிடாய் ஏற்பட்ட பெண் விடுபட்ட நோன்பைக் கழாச் செய்கிறார். ஆனால் தொழுகையை திருப்பித் தொழுவதில்லையே என நான் ஆயிஷா (ரழி) அவர்களிடம் கேட்டேன். அதற்கு ஆயிஷா (ரழி) அவர்கள் நீ ஹரூரிய்யா (எனும் ஹவாரிஜிய்ய) பிரிவைச் சேர்ந்தவளா? எனக் கேட்டார்கள். அதற்கு இல்லை, நான் தெளிவுபெறக் கேட்டேன் என்று கூறினேன். அதற்கு அவர்கள்,**

**மாதவிடாய் எங்களுக்கு ஏற்படும் போது விடுபட்ட நோன்புகளை நோற்க வேண்டும் என நாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவப்பட்டோம். ஆனால் விடுபட்ட தொழுகைகளை நாம் தொழவேண்டும் என ஏவப்படவில்லை எனக் கூறினார்கள்."

அறிவிப்பவர்: முஆதா(ரழி)

ஆதாரம்: (முஸ்லிம்- 180, 335-69, 789), அபூதாவுத்: 263, நஸாஈ: 382)

### 3. கஃபாவைத் தவாப் செய்தல்:

"ஆயிஷா (ரழி) அவர்கள் ஹஜ்ஜின் போது மாதவிடாய்க்குள்ளான போது கஃபாவை வலம் வருவதைத் தவிர ஹாஜிகள் செய்யக்கூடிய அனைத்தையும் செய்துகொள்! என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்."

அறிவிப்பவர்: ஆயிஷா(ரழி),

ஆதாரம்: புஹாரி- 305, முஸ்லிம்- 1211-120, 2977)

### 04. உடலுறவில் ஈடுபடல்:

மாதவிடாய்ப் பெண்ணுடன் உடலுறவில் ஈடுபடக் கூடாது. அவளும் இது விடயத்தில் கணவனுக்கு ஒத்துழைக்கக் கூடாது.

"மாதவிடாய் பற்றியும் உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். 'அது ஒரு அசௌகரியமாகும். எனவே, மாதவிடாயின் போது பெண்களை (உறவு கொள்வதை) விட்டும் ஒதுங்கிக்கொள்ளுங்கள். அவர்கள் தூய்மையடையும் வரை அவர்களிடம் (உறவுக்காக) நெருங்காதீர்கள். அவர்கள் தூய்மையடைந்துவிட்டால் அல்லாஹ் உங்களுக்கு ஏவியவாறு அவர்களிடம் செல்லுங்கள்' என்று (நபியே!) நீர் கூறுவீராக! நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்புத் தேடுபவர்களை நேசிக்கின்றான். மேலும் தூய்மையானவர்களையும் நேசிக்கின்றான்."

(2:222)

பெண்களை விட்டும் ஒதுங்கிக் கொள்ளுங்கள் என்பதன் மூலம் உடலுறவு கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்ற கட்டளையே இடப்படுகின்றது. மாதவிடாய் காலத்தில் பெண்களை முழுமையாக ஒதுக்கி வைப்பதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

"மாதவிடாய் பெண்ணுடன் அல்லது மனைவியின் மலவாயிலில் யார் உறவு கொள்கின்றானோ அல்லது சாத்திரக்காரனிடம் செல்கின்றானோ அவன் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்டதை நிராகரித்து விட்டான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்."

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி)

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

05 ஆம் பக்கத் தொடர்ச்சி... (சூறதுல் பகறா)

வைத்தலில் சேரும். எனவே, மலக்குகள் ஆதம் நபிக்கு அல்லாஹ்வின் கட்டளைக்காகவே சுஜூது செய்தனர். அது சரியானதுதான்.

இதை ஆதாரமாக வைத்து நாதாக்கள்(?), பெரியார்கள் காலில் விழ முடியாது. மிகப் பெரிய பெரியாரான அல்லாஹ்வின் தூதரின் காலில் யாரும் விழுந்ததும் இல்லை. அவருக்காக ஸஜ்தா செய்ததுமில்லை. காலில் விழுவதும் அல்லாஹ் அல்லாதவர்களுக்கு சாஸ்டாங்கம் செய்வதும் இணை வைத்தலை உண்டுபண்ணும் பெரிய குற்றங்களாகும்.

"சுஜூத்" என்பதற்கு அடிபணிதல், கட்டுப்படுதல் என்ற அர்த்தம் இருந்தாலும் இந்த இடத்தில் உண்மையான சுஜூத் செய்வதுதான் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

"நான் அவரை ஒழுங்குற அமைத்து, அதில் என் "ரூஹை" ஊதினால் நீங்கள் அவருக்கு சுஜூது செய்தவர்களாக விழுங்கள். (என்று கூறினான்)"

*(15:29), (38:72)*

இங்கே சுஜூது செய்தவர்களாக விழுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. உண்மையாக ஸஜ்தா செய்யுமாறுதான் அல்லாஹ் ஏவினான் என்பதை இந்த வசனங்கள் மிகத் தெளிவாக உணர்த்துகின்றது.

"ஆதமுக்கு சுஜூது செய்யுங்கள்" என்பதற்கு "ஆதத்திற்கு பணிந்து நடவுங்கள்" என அர்த்தம் செய்தால் உடனே எல்லா மலக்குகளும் எப்படிப் பணிந்து நடந்தார்கள்? ஷைத்தான் எப்படிப் பணிந்து நடக்காமல் இருந்தான்? ஆதம் நபி மலக்குகள் பணியும்படி என்ன கட்டளையிட்டார்கள்? என்பதற்கெல்லாம் பதில் இல்லாமல் போய்விடும்.

ஆதமுக்கு சுஜூது செய்யுமாறுதான் அல்லாஹ் கட்டளையிட்டான். அதை விழுந்து செய்யுமாறும் கட்டளையிட்டான். இது உண்மையான சுஜூதைத்தான் குறிக்கின்றது. அதன் அர்த்தத்தை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இதை வைத்து பெரியார்கள் காலில் விழுவதை சரி காண முடியாது. ஆதமுக்கு சுஜூது செய்யுமாறு மலக்குகளுக்கு அல்லாஹ் கட்டளையிட்டான். அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் சுஜூது செய்யக் கூடாது என இஸ்லாம் எமக்குக் கட்டளையிட்டுள்ளது. நாம் நமக்கிடப்பட்ட கட்டளைப்படிதான் வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குடும்பவியல்

# குடும்ப உறவைப் பேணுவோம்



எம்.எஸ்.எம் இம்தியாஸ் யூசுப் ஸலபி

இரத்த பந்தத்தை அறபியில் "ரஹிம்" என கூறப்படும். "ரஹிம்" என்பது அளவிலா அருளாளனாகிய (ரஹ்மானி)டமிருந்து வந்தவை (அருட்கொடை)யாகும்.

இரத்த பந்தத்தை நேசிப்பதும், நெருங்கி நடப்பதும், நல்லவைகளை, நன்மைகளை மட்டும் செய்வதும், இந்த இரத்த பந்த உறவை முறிக்காமல் ஒட்டி நடப்பதுமே அரபியில் "சிலதுர் ரஹிம்" எனப்படுகிறது.

## உறவை பேணுவதன் அவசியம்:

**"இந்த இரத்த உறவை அல்லாஹ் படைத்த போது 'அல்லாஹ் (அதனை நோக்கி) உன்னோடு ஒட்டி வாழ்பவனுடன் நானும் சேர்ந்து கொள்வேன். உன்னை முறித்துக் கொள்பவனை நானும் முறித்துக் கொள் வேன் என்று கூறினான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்."**

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரழி)
நூல்: புகாரி

மற்றுமொரு அறிவிப்பில்,

**"அல்லாஹ் படைப்புகளைப் படைத்து முடித்த போது, உறவானது எழுந்து அன்பாளன் அல்லாஹ்வின் அரியாசனத்தின் கால்களில் ஒன்றைப் பற்றி(க் கொண்டு மன்றாடி)யது. இரத்த உறவை துண்டித்து விட்டு வாழ்பவன் வந்து நிற்கும் இடமல்லவா இது என உறவு கேட்டது. அப்போது அல்லாஹ், 'உன்னைப் பேணி நல்ல முறையில் நடந்து கொள்பவருடன் நானும் நல்லமுறையில் நடந்து கொள்வேன் என்பதும், உன்னைத் துண்டித்துவிடுகின்றவரை நானும் துண்டித்து விடுவேன் என்பதும் உனக்குத் திருப்தியளிக்க வில்லையா?' என்று கேட்டான். அதற்கு உறவு, 'ஆம் (திருப்தியே) என் இறைவா!' என்று கூறியது. அல்லாஹ் 'இது (அவ்வாறுதான்) நடக்கும்' என்று கூறினான்."**

அறிவிப்பாளர் அபூ ஹுரைரா(ரழி)

"நீங்கள் விரும்பினால் '(நயவஞ்சகர்களே!) நீங்கள் (போருக்கு வராமல்) பின்வாங்கிக் கொண்டு பூமியில் குழப்பம் விளைவிக்கவும், உங்கள் உறவுகளைத் துண்டிக்கவும் முனைகிறீர்களா?" எனும் (திருக்குர்ஆன் 47:22 வது) **வசனத்தை ஓதிக்கொள்ளுங்கள்' என்று கூறினார்கள்."**

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி)
நூல் புகாரி

மற்றொரு அறிவிப்பில்,

**"இரத்த உறவு அல்லாஹ்வுடைய அர்ஷைப்பிடித்துக் கொண்டு என்னைச் சேர்ந்து நடப்பவனை அல்லாஹ்வும் சேர்த்துக் கொண்டான். என்னை துண்டித்து நடப்பவனை அல்லாஹ்வும் துண்டித்துக் கொண்டான் என கூறியது. என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்பவர் அப்துல்லாஹ் இப்னு அம்ரு(ரலி)
நூல்: முஸ்லிம்

உறவு முறை பிரிக்கப்படாத வகையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என அல்லாஹ் படைப்பின் ஆரம்பத்திலேயே இட்ட கட்டளையாகும். உறவைச் சேர்ந்து வாழ்பவனுடன் அல்லாஹ் சேர்ந்து கொள்கிறான் என்றால், அல்லாஹ்வுடைய அருள், அன்பு என்பன உறவைப் பேணுபவனுக்குக் கிடைக்கிறது என்று அர்த்தமாகும். உறவை எவர் துண்டித்து வாழ்கிறாரோ அவருக்கு அல்லாஹ்வுடைய ரஹ்மத் கிடைக்காது. அல்லாஹ்வுடைய ரஹ்மத்தை விட்டும் தூரமாகுபவன் நிச்சயம் நஷ்டமடைந்து விடுவான்.

இந்த உறவு பேணப்பட வேண்டும் என்ற செய்தி எல்லா சமூகத்திற்கும் சொல்லப்பட்ட இறைச் செய்திகளில் ஒன்றாகும்.

**"மனிதர்களே! உங்களை ஒரே ஆத்தமாவிலிருந்து படைத்த உங்கள் இரட்சகனை அஞ்சிக் கொள்ளுங்கள். அவன் அந்த ஆத்மாவிலிருந்து அவரது துணையை படைத்தான். அவ்விரண்டு ஆத்மாக்களிலிருந்து அனேக ஆண்களையும் பெண்களையம் பரவச் செய்தான். எவரைக் கொண்டு நீங்கள்ஒருவர் மற்றவரிடம் (உரிமைகளைக்) கேட்டுக் (உதவி பெற்றுக்) கொள்வீர்களோ அந்த அல்லாஹ்வையும் மேலும் இரத்த உறவுகளை(த்துண்டித்து நடப்பதை)யும் அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்."** *(4:1)*

அல்லாஹ்வை முன்னிறுத்தி ஒருவருக் கொருவர் உதவிகேட்டுக் கொள்வது போல் உறவுகளைப் பேணி அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுமாறு அல்லாஹ் கட்டயிடுகிறான்.

**"அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் வணங்கக் கூடாது பெற்றோருக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் நன்மை செய்யுங்கள். மனிதர்களிடம் அழகானவையே பேசுங்கள் தொழுகையை நிலை நாட்டி ஸகாத்தும் கொடுங்கள் என ,ஸ்ராஈலின் மக்களிடம் நாம் உறுதிமொழி எடுத்ததை (எண்ணிப் பாருங்கள்.). அதன் பின்னரும் உங்களில் சொற்பமானோரைத் தவிர (மற்றையோர் அதனை) புறக்கணித்தீர்கள். ,ன்னும் நீங்கள் உதாசீனபடுத்தியவர்களாகவே ,ருக்கின்றீர்கள்"** *(2:83)*

அல்லாஹ்விடம் கொடுத்த உறுதி மொழிகளில் ஒன்று உறவு முறைகளை பேணிக் கொள்வது என்பதை இவ்வசனத்தில் அல்லாஹ் கூறுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் த.'.வா பணியில் தவ்ஹீத் போதிக்கப்பட்ட அதே அமைப்பில் உறவு முறைகளைப் பேணுவது பற்றிய பிரச்சாரமும் இருந்ததைக் காணமுடிகிறது.

**"ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து என்னை சுவனத்தில் நுழையச் செய்கின்ற ஒரு காரியத்தைச் சொல்லித் தாருங்கள் என்றார். அப்போது நபித்தோழர்கள் (வியப்புற்று) 'இவருக்கென்ன (ஆயிற்று)? இவருக்கென்ன (ஆயிற்று)?' என்றனர். நபி(ஸல்) அவர்கள் 'இவருக்கு ஏதோ தேவையிருக்கிறது (போலும்)!' (என்று கூறிவிட்டு அவரிடம்.) நீர் அல்லாஹ்வை மட்டும் வணங்கு; அவனுக்கு எதையும் இணையாக்காதே. தொழுகையை நிலை நாட்டி ஸகாத்தையும் கொடுத்து உறவு முறைகளையும் பேணிக்கொள் என கூறினார்கள்."**

அறிவிப்பவர்: அபூஅய்யூப் அல் அன்சார்(ரலி)
நூல்: புஹாரி

இபாதத்கள் மூலம் சுவனம் நுழைவது போலவே இரத்த உறவுகளைப் பேணுவதன் மூலமும் சுவனம் நுழைய முடியும் என்பதை நபியவர்கள் விபரிக்கிறார்கள்.

**"எவர் அல்லாஹ்வையும் மறுமையையும் நம்பிக்கை கொள்கிறாரோ அவர் தனது விருந்தாளியை கண்ணியப்படுத்தட்டும். எவர் அல்லாஹ்வையும் மறுமையையும் நம்பிக்கை கொள்கிறாரோ அவர் தனது குடும்ப உறவைப் பேணிக் கொள்ளட்டும். எவர் அல்லாஹ்வையும் மறுமையையும் நம்பிக்கை கொள்கிறாரோ அவர் நல்லதைப் பேசட்டும் அல்லது வாய்மூடி இருக்கட்டும் என நபி(ஸல்) கூறினார்கள்."**

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி)
நூல்: புகாரி

ஈமானிய நம்பிக்கையை உறுதிப் படுத்தும் அம்சங்களில் ஒன்றாக இரத்த உறவு முறையை நபியவர்கள் வலியுறுத்திக் கூறுவதிலிருந்து இதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

எனவே, உறவுகளைத் துண்டித்து வாழ்வதன் விபரீதத் தன்மையாக கண்டிக்கிறார்கள்.

**"உறவை முறித்து வாழ்பவன் சுவனம் நுழைய மாட்டான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்."** (அறிவிப்பவர்: ஜுபைர் இப்னு முத்இம்(ரலி) நூல்: புகாரி, முஸ்லிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்சில காரியங்களுக்கு சிலர் உறவுகளைத் துண்டித்துக் கொண்டு வாழ்நாள் முழுவதும் பேசாமல் ஒதுங்கி விடுகிறார்கள். அல்லாஹ்வுக்காகவும், அல்லாஹ்வுடைய தூதருக்காகவும், மார்க்க விடயங்களுக்காகவும் எவரும் உறவுகளைப் பேணுவதுமில்லை; துண்டிப்பதுமில்லை. உலக விவகாரங்களில் ஏற்பட்ட சில்லறைப் பிரச்சினைகளுக்காகவே உறவைத் துண்டித்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த எச்சரிக்கையைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த உலகில் மிக சீக்கிரமாக அல்லாஹ்வுடைய தண்டனையைப் பெறக் கூடியவர்களாக இனபந்த உறவை துண்டிப்பவர்களும் அதன் பின்பு அநியாயம் செய்பவர்களும் இருக்கிறார்கள். என குர்ஆன் விபரிக்கின்றது.

பாவிகளின் பண்பாடுகளைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.

**"நீங்கள் புறக்கணித்து பூமியில் குழப்பம் ஏற்படுத்தவும் உங்கள் உறவுகளை முறிக்கவும் முயல்வீர்களா? அவர்களையே அல்லாஹ் சபித்தான். அவர்களைச் செவிடாக்கினான். அவர்களின் பார்வைகளைக் குருடாக்கினான்."**

*(47:22-23)*

பூமியில் குழப்பத்தை உண்டுபண்ணி உறவுமுறைகளைத் துண்டித்து வாழ்பவர்களுக்கு அல்லாஹ்வுடைய சாபம் உண்டு என்று அல்லாஹ் எச்சரிக்கிறான். அல்லாஹ்வுடைய சாபத்தை பெற்றவன் நிச்சயமாக இந்த பூமியில் நிம்மதியாக வாழமாட்டான்.

**"அவர்கள் அல்லாஹ்வின் உடன்படிக்கையை உறுதிப்படுத்திய பின் முறிக்கின்றனர். (உறவுகள்) இணைக்கப்பட வேண்டுமென அல்லாஹ் கட்டளையிட்டதை முறிக்கின்றனர். பூமியில் குழப்பம் விளைவிக்கின்றனர். அவர்களே நஷ்டமடைந்தவர்கள்."** (2:27)

உறவு முறைகளைப் பாழ்ப்படுத்தி வாழ்பவன் நஷ்டவாளி என்று அல்லாஹ் கூறுகிறான்.

**"உன்னைத் துண்டித்து வாழ்பவனுடன் நீ சேர்ந்து நட என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்."**

(புகாரி)

உறவுக்காரர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக கோபப்பட்டு பேசாமல் ஒதுங்கிப் போனாலும் உறவைத் துண்டித்துக் கொண்டாலும் அவர்களுடன் சேர்ந்து கொள்ளுமாறு உறவைப் பேணிக் கொள்ளுமாறு அல்லாஹ்வுடைய தூதர்(ﷺ) அவர்கள் நற்போதனை செய்கிறார்கள்.

**"தமது வாழ்வாதாரம் (ரிஸ்க்) விசாலமாக்கப்படுவதும் வாழ்நாள் நீடிக்கப்படுவதும் யாருக்கு மகிழ்ச்சியளிக்குமோ அவர் தமது உறவைப் பேணி வாழட்டும் என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்."**

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி),
நூல்: புகாரி

இரத்த உறவைப் பேணி வாழ்வதால் ஒருவனுடைய உணவு (வாழ்வாதாரம்) விசாலமாக்கப்படுகிறது; பரகத் வழங்கப்படுகிறது; வாழ்நாளும் நீடிக்கப்படுகிறது.

வீட்டில் கஷ்டம், பஞ்சம், முஸீபத்து என்று எப்போதுமே சிலர் பேசிக்கொள்வார்கள். எவ்வளவு சம்பாதித்தாலும் "பரகத்" இல்லை என்பார்கள். இத்தனை துன்பங்களும் எதனால் வருகிறது என்று சிந்தித்துப் பார்க்க மாட்டார்கள். உறவை பேணாதவனுக்கு ஏழ்மை தொடர்கிறது என்பதைத்தான் அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் இந்த நபிமொழி மூலம் விளக்கப்படுத்துகிறார்கள்.

மகிழ்ச்சிகரமான வாழ்வின் ஒரு அம்சம் இரத்த உறவை சொந்த பந்தத்தை உறவுகளை பேணிப் பாதுகாப்பதில் உள்ளது என்றும் நற்செய்தி கூறப்படுகிறது.

எங்களுடைய உறவு அவர்களுக்கு தேவையில்லை என்றாலும் அவர்களுடைய உறவு எங்களுக்குத் தேவை என்று ஒட்டி நடக்க வேண்டும். இதன் மூலமாக மனக் கசப்புகள் கூட நாளடைவில் மறைந்து போய் ஒற்றுமையாக வாழ வழியமையலாம்.

**"பதிலுக்குப் பதில் உறவாடுகின்றவர் (உண்மையில்) உறவைப் பேணுகின்றவர் அல்லர். மாறாக உறவு முறிந்தாலும் அந்த உறவுடன் இணைகின்றவரே உறவைப் பேணுபவர் ஆவார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்."**

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர்(ரழி)
நூல்: புகாரி

"அவர் பேசினால்தான் நான் பேசுவேன். அவர் என் வீட்டுக்கு வந்தால்தான் அவர் வீட்டுக்குப் போவேன்" என்ற அடிபடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு முறையைப் பேணுபவர் உண்மையில் உறவைப் பேணி நடந்தவராக மாட்டார். அவர் பேசாவிட்டாலும் நான் பேசுவேன். அவர் என் வீட்டுக்கு வராவிட்டாலும் அவர் வீட்டுக்கு நான் போவேன் என்று வலியச் சென்று உறவைப் பேணுபவர்தான் உண்மையிலே உறவைப் பேணியவராவார். இவருக்கு அதிக சிறப்பும் மரியாதையும் அல்லாஹ்விடம் உண்டு.

**ஒரு மனிதர் நபி(ﷺ) அவர்களிடம் வந்து 'அல்லாஹ்வின் தூதரே! எனக்கு உறவினர்கள் சிலர் உள்ளனர். அவர்களுடன் நான் ஒட்டி உறவாடுகிறேன். ஆனால், அவர்கள் எனது உறவை முறிக்கின்றனர். நான் அவர்களுக்கு உபகாரம் செய்கிறேன். ஆனால் அவர்கள் எனக்குத் தீமை செய்கிறார்கள். (அவர்கள் என்னை புண்படுத்தும் போது) அவர்களை நான் சகித்துக் கொள்கிறேன். (ஆனாலும் அவர்கள் என்னிடம் அறியாமையோடு நடந்து கொள்கிறார்கள் என்று கூறினார்கள்.**

**அதற்கு நபி(ﷺ) அவர்கள் நீங்கள் சொன்னதைப் போன்று நடந்திருந்தால் அவர்களது வாயில் நீங்கள் சுடுசாம்பலைப் போட்டவரைப் போன்றுதான். இதே நிலையில் நீங்கள் நீடித்திருக்கும் வரை அல்லாஹ் விடமிருந்து ஓர் உதவியாளர் அவர்களுக் கெதிராக உங்களுடன் இருந்து கொண்டே இருப்பார் எனக் கூறினார்கள்."**

அறிவிப்பவர்: அபாஹுரைரா(ரலி),
நூல்: முஸ்லிம்

உறவுக்காரர்கள் எவ்வளவுதான் ஒதுங்கிப் போனாலும், நல்லதற்குப் பதிலாக தவறாகப் பேசினாலும், திட்டினாலும் அதை யெல்லாம் பொறுத்துக் கொண்டு உறவைப் பேணி வாழ்பவருக்கு அல்லாஹ்விடமிருந்து உதவியாளர் நியமிக்கப்பட்டு உதவி செய்யப் படுகிறார். இவரை எதிர்த்து நிற்கும் உறவுக் காரருக்கு எதிராக அல்லாஹ்விடமிருந்து வந்த உதவியாளர் பாதுகாப்பாக நிற்பார்.

உபகாரம் செய்வதைக் கூட அவர்கள் ஏற்காமல் தீமை செய்ய முனைந்தால் தீமை செய்ய முனைபவருக்கே அது கேடாக அமையும். வாயில் சாம்பலை போட்டால் எவ்வளவு வலி, துன்பம் ஏற்படுமோ அந்தளவு வலியை அவர்களே அனுபவிப்பார்கள்.

உறவைத் துண்டிக்கும் போது சேர்ந்து நடப்பவனுக்கு நன்மையும் ஒதுங்கி நடப்ப வனுக்கு பாவமும் வந்து சேர்கிறது. எனவே தான் உறவை வெட்டி நடப்பவனுடன் ஒட்டி நடக்குமாறு நபிகளார்(ﷺ) அவர்கள் நற்செய்தி சொல்கிறார்கள்.

## செலவு செய்தல்:

தங்களுடைய விவகாரங்களில் கவனம் செலுத்துவது போல உறவினர்கள் விடயத்திலும் கவனம் செலுத்தி அவர்களுடைய பொருளாதார நிலமைகளையும் கவனிக்க வேண்டும். பிறருக்காக தர்மங்கள் செய்யும் போது முதலில் குடும்ப உறவுகளிலிருந்தே ஆரம்பிக்கவும் வேண்டும்.

தாங்கள் ஈட்டிய செல்வத்தை எப்படி செலவழிக்க வேண்டும்; யாருக்கு செலவழிக்க வேண்டும் என்பதை ஸஹாபாக்கள் நபி முஹம்மத்(ﷺ) அவர்களை அணுகி விளக்கம் கேட்டார்கள்.

**"நபியே! அவர்கள் உம்மிடம் எதை (யாருக்கு) செலவு செய்வது? என்று கேட்கின்றனர். நன்மை தரும் எதனை நீங்கள் செலவளித்தாலும் நன்மையே. (அது) பெற்றோர்கள், நெருங்கிய உறவினர்கள், அநாதைகள், ஏழைகள், வழிப்போக்கர்கள் ஆகியோருக்குரியதாகும் என்று நீர் கூறுவீராக. மேலும் நீங்கள் செய்கின்ற எந்தவொரு நன்மையானாலும் நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்தவனாவான்."** *(2:219)*

இவ்வசனத்தில் செலவளிப்பவர்களில் முன்னுரிமை பெறுபவர்களைப் பற்றி அல்லாஹ் விளக்கப்படுத்துகிறான். அதில் ஒரு வகுப்பினர்களாக உறிவனர்களும் அடங்கப் பெற்றார்கள்.

**"நீங்கள் நேசிப்பவற்றிலிருந்து (நல்லறங்களில்) செலவு செய்யாதவரையில் நீங்கள் நன்மையை அடைந்து கொள்ள மாட்டீர்கள். நீங்கள் எதைச் செலவு செய்தாலும் அதை அல்லாஹ் நன்கறிந்தவனாவான்."** *(3:92)*

**"மதீனாவிலிலேயே மதீனாவாசிகளில் பேரீத்தம் பழத் தோட்டங்கள் அதிகம் உடையவராக அபூ தல்ஹா(ரலி) இருந்தார். அவரது சொத்துக்களில் அவருக்கு மிக விருப்பமானதாக 'பைருஹா' தோட்டம் இருந்தது. பள்ளிவாசலுக்கு அருகில் அது அமைந்திருந்தது. நபி(ﷺ) அவர்கள் அதன் உள்ளே போய், அதன் சுவையான தண்ணீரைக் குடிப்பார்கள். இந்த வசனம் (3:92) இறங்கியதும் அபூ தல்ஹா(ரலி), நபி(ﷺ) அவர்களிடம் வந்து, 'இறைத் தூதர் அவர்களே! அல்லாஹ் உங்கள் மீது (3:92) வசனத்தை இறக்கியுள்ளான். என் சொத்தில் எனக்கு மிகவும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பமானது 'பைருஹா'தான். அதை அல்லாஹ்வின் வழியில் நான் தர்மம் செய்கிறேன். அதன் நன்மையை நற்கூலியை அல்லாஹ்விடமே ஆதரவு வைக்கிறேன். அல்லாஹ்வின் நாட்டப்படி அதை நீங்கள் செலவு செய்து கொள்ளுங்கள்' என்றார்.

அப்போது நபி(ﷺ) அவர்கள் 'நல்லது. இது லாபம் தரும் சொத்தாகும். இது லாபம் தரும் சொத்தாகும் எனக் கூறிவிட்டு இது விடயமாக நீர் கூறியதைக் கேட்டேன். 'உம் நெருங்கிய உறவினர்களுக்கு இதைப் பங்கீடு செய்வதையே நான் விரும்புகிறேன்' என்று கூறினார்கள். உடனே அபூ தல்ஹா(ரழி) அவர்கள் 'இறைத் தூதர் அவர்களே! அப்படியே செய்கிறேன் என்று கூறிவிட்டு அந்தத் தோட்டத்தைத் தன் நெருங்கிய உறவினர்களுக்கும் தன் சிறிய தந்தையின் மக்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்கள்."

அறிவிப்பவர் அனஸ்(ரழி).
நூல்: புகாரி-1461, முஸ்லிம்-998

**பிரச்சாரப்பணியில் முதலிடம் கொடுத்தல்:**

இரத்த உறவுடனான உறவுகள் உடைந்து முறிந்து விடாமல் பல வழிகளிலும் பாதுகாத்துக் கொள்வதில் இப்பொருளாதார உதவி காணப்பட வேண்டும். அது போல் நன்மையான காரியங்களில் மார்க்க விடயங்களில் வழிகாட்டுதலிலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்திட வேண்டும்.

"நபியே உன் குடும்பத்தில் நெருங்கிய உறவினர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக!"

(26:214)

"என்ற வசனம் இறங்கியதும் நபி(ﷺ) அவர்கள் குறைஷியர்களை அழைத்தார்கள். குறிப்பாக ஒவ்வொரு குலத்தாரின் பெயர்களைக் குறிப்பிட்டு அழைத்து உங்களை நரகத்திலிருந்து காத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்."

(நூல்: முஸ்லிம்)

குடும்பங்களில் இஸ்லாத்தை முறைப்படி பின்பற்றுவதற்கான அழைப்புப் பணியினை செய்தாகவே வேண்டும். அதுவும் உறவு முறை பேணுவதன் ஒரு அடிப்படையாகும். நபிகளாருடைய பிரச்சாரத்தில் கொடுக்கப்பட்ட முதலுரிமையை இவ்வசனத்தின் மூலம் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.

அதே வேளை, இஸ்லாத்திற்கு முரணான காரியங்களை உறவுக்காரர்கள் செய்கிறார்கள் என்று தெரிந்தால் அதிலிருந்து ஒதுங்கிக் கொள்வதோடு தீமைக்கெதிரான பிரச்சாரத்தினையும் மேற்கொள்ளுதல் வேண்டும். பாவத்திற்குத் துணை போவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

அல்லாஹ்வுக்காகவே ஒருவரை நேசிக்க வேண்டும். அல்லாஹ்வுக்காகவே ஒருவருடன் கோபிக்க வேண்டும் என நபி(ﷺ) கூறியதனடிப்படையிலே உறவுகளும் பேணப்பட வேண்டும்.

## மியன்மாரில் தொடரும் அகோரம்

### முஸ்லிம்களைத் தேடி கம்புகளுடன் அலையும் பௌத்த தீவிரவாதிகள்

மியன்மாரின் கிழக்குப் பகுதியில் கடந்த சில நட்களாக இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பை அதிகரிக்கக் கோரி அரசிடம் முறையிட்டுள்ளனர். அங்குள்ள அநாதை இல்லம், மசூதி மற்றும் சில கடைகள் பௌத்த தீவிரவாதிகளால் அண்மையில் தீயிடப்பட்டன. இக்கலவரங்களுக்குப் பின்னர் மக்களை அமைதிகாக்குமாறு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வன்முறையாளர்களைக் கொண்ட கும்பல் கையில் கம்புகளுடன் ஷேன் மாகானத்தில் உள்ள லஷியோ நகரில் சுற்றிக் கொண்டிருப்பதாக மக்கள் பத்திரிகையாளர்களிடம் குறிப்பிட்டுள்ளனர். இரண்டு வீடுகள் எரிந்து கொண்டிருப்பதை அவர்களும் நேரில் பார்த்துள்ளனர். மருத்துவமனையில் 04 பேர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டதாகவும் ஆனால், உயிருக்கு ஆபத்தில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் 30 பேருக்கும் மேற்பட்ட கும்பலொன்று முஸ்லிம் எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பிக் கொண்டு மோட்டார் சைக்கிள்களில் சுற்றித் திரிந்ததால் அப்பகுதிகளில் இறுக்கமான சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகளின் போது

## எமது துலங்கல்கள்

தொகுப்பு: F. நஜ்மின் பின்து நஸீர்

இஸ்லாம் உலகில் தள்ளிப் போட முடியாத மார்க்கமாக மாறிக் கொண்டிருக்கின்றது. புவி முழுவதையும் இஸ்லாம் தன் ஒளியால் மூடிவிடும் என்றால் அது மிகையல்ல. எனினும், இஸ்லாத்தைச் சரியாக இனம் கண்டுகொள்ள முடியாதவர்கள் அதனை அலட்சியப்படுத்துகின்றனர். திட்டமிட்டு இஸ்லாத்தைத் தாக்கி அழிக்க முனைப்போடு செயற்படுகின்றனர். எனினும், அபாயகரமான தாக்குதல்களுக்கு அப்பாலும் உலகம் தோன்றியது முதல் இன்று வரையும் உயிர் வாழும் மார்க்கமே இஸ்லாம். பாழ்ப்பட்டுக் கொண்டிருக்கின்ற உள்ளத்தைப் பூந்தோட்டமாக மாற்றுகின்ற பொறுப்பை இஸ்லாம் ஏற்றுக் கொண்டுள்ளது. இஸ்லாத்தில் காணப்படும் ஏக தெய்வக் கொள்கை உலக மக்களை ஒன்றிணைக்கின்ற ஒன்றாகும். இஸ்லாம் உலக மக்களை சாந்தி, சமாதானம் என்ற ஒரே குடையின் கீழ் இணைக்குமே தவிர பிரிக்காது.

இவ்வாறான புனிதமிகு இஸ்லாம் மார்க்கத்தினை சுமந்து கொண்ட இலங்கை முஸ்லிம்களது நிலை கவலைக்கிடமாகவே உள்ளது. ஏனெனில், சமீப காலமாக இலங்கையில் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் இஸ்லாத்திற்கும் எதிரான துவேஷ நடவடிக்கைகள் நாட்டின் பல பிரதேசங்களில் சிங்களப் பெரும்பான்மை மக்கள் மனதில் தூவப்பட்டு வருகின்றன. இவை பல நூற்றாண்டுகளாக நகமும் சதையும், பிட்டும் தேங்காய்ப் பூவும் போல் காணப்படும் சிங்கள-முஸ்லிம் உறவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அதனுடன் தொடர்பான சில விடயங்களை நாம் இங்கு அவதானிப்போம்.

1. அண்மையில் காலியில் Food City நிலையமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட முஸ்லிம்களது உற்பத்திப் பொருட்கள் "தம்பிலாகே படு அபட எபா!" என திருப்பப்பட்ட நிகழ்வு.
2. 24.01.2013 ஆம் திகதி குளியாப்பிடி பிரதேசத்தில் ஓர் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

குளியாப்பிடிய நகரில் அஸ்வெத்தும கம விகாரைக்கு அருகிலிருந்து வெதஹர முதுடுவோ என்பவரின் கீழ் இயங்கும் "ஹெல சிஹல ஹிரு" என்ற அமைப்பின் ஏற்பாட்டில் ஹலாலுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பிக்குகள் உட்பட சுமார் 150 பேர் அடங்கிய குழுவொன்று பதாதைகளை ஏந்தியவாறு குளியாப்பிடிய பஸ் நிலையத்துக்கு அருகில் சென்று பன்றியின் உருவத்தில் அல்லாஹ் என்ற அரபுப் பதாதை சூட்டப்பட்ட கொடும்பாவியொன்றை எரித்தனர். இது முஸ்லிம்களாகிய எம்மையும், எமது மார்க்கத்தையும் அவமானப்படுத்தும் ஒரு விடயமாகும்.

3. முஸ்லிம் அமைச்சர்களிடம் "நீங்கள் குனூத் ஓதும் போது, "யா அல்லாஹ்! எங்களுக்கு ஆயுத பலத்தைத் தருவாயாக!" எனக் கேட்பீர்களா? என மாற்றுமத அமைச்சர்கள் வினவியமை.
4. அனுராதபுர வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவர் முஸ்லிம்களைப் பார்த்து நீங்கள் ஹலால் உணவு உட்கொள்வதாலேயே அதிக நோய்கள் ஏற்படுகின்றன எனக் கூறியுள்ளார்.
5. 24.02.2013 ஞாயிற்றுக் கிழமை மாவனல்லை பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப் பட்டது.
6. பௌத்த சிங்களப் பேரினவாதம் இஸ்லாத்திற்கும் இலங்கை முஸ்லிம் களுக்கும் எதிரான தீவிர பிரச்சாரத்தில் குதித்துள்ளது. அந்த வகையில் ஹலால் எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய பெரிய கலண்டர் ஒன்றை சிங்களப் பேரினவாதிகள் அச்சிட்டு வெளியிட்ட வைபவம் நடைபெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. 28.02.2013 ஆம் திகதி கேகல்லை நகர மஸ்ஜித் இனவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

8. 27.02.2013 ஆம் திகதி பின்னேர வகுப்புக்குச் சென்று வந்த திக்வெல்லையைச் சேர்ந்த மாணவிகளிடம் ஹிஜாப் அணியக் கூடாது என பெரும்பான்மை இன இளைஞர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

(இவை உதாரணத்துக்காக சொல்லப் பட்ட ஒரு சில விடயங்கள் மாத்திரமே! இன்னும் ஏராளமான சதிகள் எமக்கெதிராக இடம் பெற்றுள்ளன, இடம் பெற்று வருகின்றன.)

இவ்வாறான நிகழ்வுகள் பல்வேறு இடங்களிலும் இடம் பெறுகின்றன. இந்த நிகழ்வுகளினால் இலங்கையில் 1300 ஆண்டுகளுக்கும் மேலாக வாழும் முஸ்லிம்கள் கலக்கமும் கிலேசமும் அடைந்துள்ளனர். எமது முன்னோர்கள் அனுபவித்த சுதந்திரம் இன்று எமக்கு இல்லை என்று கூறும் அளவுக்கு மனம் தளர்ந்து நொந்த நிலையில் காணப்படுகின்றனர் என்று கூறுவதில் தவறேதும் இல்லையென நான் எண்ணுகின்றேன். இன்று எமது நாட்டில் முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்கும் எதிராக மேலே கூறப்பட்டது போன்ற நிகழ்வுகள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்திலும் இடம்பெறுகின்றன. இது போன்ற பிரச்சினைகள் எம்மை அடையும் போது எமது நிலை என்ன? எமது துலங்கள் எவ்வாறு அமைய வேண்டும்? இவ்வாறான சோதனைகளை எவ்வாறு எதிர்கொள்வது? போன்ற பல வினாக்கள் எமது உள்ளத்தில் அலை மோதுவது இயல்பே.

இவ்வகையான வினாக்களுக்கு இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் தற்போது விடை காண்போம்.

**01. பொறுமையும் சகிப்புத் தன்மையும்:**

முஸ்லிம்களாகிய நாம் சிங்களப் பெரும்பான்மை மக்கள் வாழும் ஒரு நாட்டிலேயே வாழ்கின்றோம். எனவே, இவ்வாறான பிரச்சனைகளின் போது எமக்குப் பொறுமையும், சகிப்புத் தன்மையும் மிகவும் அவசியமாகும். அல்லாஹ் குர்ஆனில் இவ்வாறு கூறியுள்ளான்.

**"நிச்சயமாக நாம் ஓரளவு பயத்தாலும், பசியாலும், செல்வங்கள், உயிர்கள், மற்றும் விளைச்சல்கள் ஆகியவற்றில் ஏற்படும் இழப்புகளாலும் உங்களைச் சோதிப்போம். பொறுமையாளர்களுக்கு (நபியே!) நீர் நன்மாராயம் கூறுவீராக!"** *(2:155)*

எமது பொறுமையை அல்லாஹ் சோதிப்பதற்கான ஒரு தருணம்தான் இது. அவர்களைப் போன்றே நாமும் அவர்களுக்கு நிகராகச் செயற்படுவதில் எந்தப் பயனும் இல்லை. பொறுமை என்பது கோழையின் ஆயுதமும் அல்ல. கோபம் புத்திசாலியின் கேடயமும் அல்ல. இது பற்றி நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

**"அடுத்தவர்களைத் தாக்கி வீழ்த்த எண்ணுபவன் வீரனல்ல. மாறாக கோபத்தின் போது தன்னைக் கட்டுப்படுத்தி பொறுமையாக இருப்பவனே வீரனாவான்"**

என்ற நபி(ﷺ) அவர்களின் வாக்கை உண்மைப்படுத்தக் கூடிய உண்மை முஸ்லிம்களாக நாம் வாழ்ந்தால் உண்மை ஊனமாகிவிடாமல் இருப்பதற்கு இது ஒன்றே போதுமான ஆயுதம் என்றால் அது மிகையல்ல. எனவே எம்மால் இயன்ற அளவு பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் கையாள வேண்டும்.

**02. ஈமானுக்கு வலுவூட்டுதல்:**

நாம் ஈமானை வலுப்படுத்துவதன் மூலம் சோதனைகளுக்கு முகம் கொடுக்கலாம். ஈமான் என்பது குறையவும் கூடும், அதிகரிக்கவும் கூடும். இது எம் நிலைப்பாட்டிலேயே தங்கியுள்ளது. நபி(ﷺ) அவர்களின் காலத்தில் இஸ்லாத்தை ஏற்றமைக்காக சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்டதைப் போல் எமக்கு எதுவும் இதுவரை நிகழவில்லை. அவர்களை ஈட்டிகளால் குத்திக் கொன்றதைப் போல் எம்மைக் கொல்லவும் இல்லை. சுடு மணலில் எம்மைப் புதைக்கவும் இல்லை. இவைகளை நாம் ஒரு கணம் சிந்தித்தால் எந்தக் கொடுமையையும் இஸ்லாத்திற்காகத் தாங்கலாம் எனக் கூறும் அளவிற்கு எமக்குப் புத்துயிர் பிறக்கும்.

**"நிச்சயமாக நாம் மனிதனை கஷ்டத்தில் (மூழ்கியவனாகப்) படைத்துள்ளோம்."** *(90:4)*

அதாவது, இந்த உலகில் மனிதன் உல்லாசமாக வாழ்ந்திட முடியாது. அவன் சிரமங்களையும், அல்லல்களையும் சந்தித்திட வேண்டும். எந்த மனிதனும் இந்தக் கட்டங்களை கடந்து செல்லாமல் இருக்க முடியாது. எனவே, எமது ஈமானிய வலுவினால் எமது ஈமானுக்கு வைக்கப்பட்டிருக்கும் வேட்டு எதிர் கொள்ளப் பட வேண்டும்.

**03. ஐக்கியமும் ஒருமைப்பாடும்:**

இஸ்லாம் எல்லா சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்துகின்ற, கட்டியெழுப்ப முயற்சிக்கின்ற ஓர் அடிப்படை அம்சம்தான் முஸ்லிம்களின் ஐக்கியமும், ஒருமைப்பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். இதனை நவீன இஸ்லாமிய அறிஞர்கள் "தௌஹீதுல் உம்மா" என அழைப்பதுண்டு. இஸ்லாம் இதனை மிகப் பிரதானமான இபாதாக்கள் மூலம் முஸ்லிம்களின் அன்றாட விவகாரங்களில் (முஆமலாத்) ஏற்படுத்த முயற்சிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த வகையில் அல்குர்ஆன் சுன்னாவின் நிழலில் முஸ்லிம்களின் கருத்தொற்றுமையைத் தோற்றுவித்து நடைமுறை வாழ்வில் அவற்றை பிரதிபலிக்க வைப்பது எமது நாட்டின் புத்திஜீவிகளது அவசரமும், அவசியமுமான கடப்பாடாகும்.

**"'அல்லாஹ்வை நாம் நம்பிக்கை கொண்டோம்' என்று கூறுவோரும் மனிதர்களில் உள்ளனர். அவர்கள் அல்லாஹ்வின் விடயத்தில் துன்புறுத்தப்பட்டால் மனிதர்களின் துன்பத்தை, அல்லாஹ்வின் தண்டனை போன்று கருதுகின்றனர். உமது இரட்சகனிடமிருந்து ஓர் உதவி வந்தால், 'நிச்சயமாக நாம் உங்களுடனிருந்தோம்' எனக் கூறுவர். அகிலத்தாரின் உள்ளங்களில் உள்ள வற்றை அல்லாஹ் மிக அறிந்தவனாக இல்லையா?"** *(29:10)*

இவ்வாறானவர்கள் எம்முள்ளும் உள்ளனர். இதனால் முஸ்லிம்-முஸ்லிம்களுக்கடையிலான ஒற்றுமையும் முஸ்லிம்-ஏனைய சமூகத்தவர்களுக்கு இடையிலான ஒற்றுமையும் சீரழியலாம். இது முஸ்லிம்களின் இருப்புக்கு பலவீனத்தை ஏற்படுத்தும் விடயமாகும். இவ்வாறானவர்கள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். ஏனைய சமூகத்தவர்களுடனும் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் நடக்க வேண்டும்.

**04. மார்க்கத்தைத் தெளிவுபடுத்தல்:**

மாற்று மதத்தவர்களிடம் எமது மார்க்கத்தைப் பற்றிய தப்பெண்ணங்களைக் களைய வேண்டியதும் எமது கடமையாகும். **"முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும்"** என்ற நூலிலே "கொதே" என்ற கீழைத்தேய ஆய்வாளர் பின்வருமாறு எழுதுகின்றார்.

**"முஸ்லிம்கள் சுயநலமிக்கவர்கள். இஸ்லாம் ஏனைய சமூகங்களை அங்கீகரித்து அவற்றுடன் இணங்கிச் செல்லாது எனக் கருதுகின்றனர். அதாவது, அது ஒரு போராட்ட மார்க்கமாகும். வாளின் மூலம் பரப்பப்பட்டது. காபிரை எங்கு கண்டாலும் கொலை செய்துவிடு என்று கூறுவார்கள்."**

உண்மையில் இந்தக் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவையாகும். இஸ்லாம் வழிகேட்டைக் கண்டு மௌனிப்பதுமில்லை. அதே நேரம் அவர்களுடன் போராடுவதை இலட்சியமாகக் கொண்டிருப்பதுமில்லை. வழிகேட்டைக் காணும் போது அதனைத் தவிர்ப்பது ஒரு முஃமினின் கடமையாகும். அவன் அதை அங்கீகரித்து மௌனம் சாதிக்க மாட்டான். இது பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்.

**"நலவின் பால் (மக்களை) அழைத்து, நன்மையை ஏவி, தீமையை விட்டும் தடுக்கும் ஒரு கூட்டம் உங்களில் இருக்கட்டும். அவர்கள்தாம் வெற்றியாளர்கள்."** *(3:104)*

எனவே, காபிர்களுக்கு மத்தியில் தலை சிறந்த துறை போகக் கற்ற பிரச்சாரகர்கள் மூலம் இஸ்லாத்தைப் பரப்புவது கடமையாகும். அதே நேரத்தில் ஏனைய மதத்தவர்கள் கூறுவது போல் இஸ்லாம் இரத்த வெறிபிடித்த மார்க்கம் அல்ல. மார்க்கத்தில் எந்த பலாத்காரமும் இல்லை என்று கூறும் அல்குர்ஆன், எவர் மீதும் பலாத்காரமாக இஸ்லாத்தைத் திணிப்பதைத் தடை செய்துள்ளது.

மேற்கண்ட வசனம் பிற சமூகங்களுடன் முஸ்லிம்கள் எவ்வாறு இணங்கிச் செல்ல வேண்டும் எனதைச் சுட்டிக் காட்டுகின்றது. இதனையே இஸ்லாமிய அறிஞர்கள் வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டின் மூலம் விளக்கியுள்ளனர். எனவே, நாம் ஏனைய மதத்தவர்களுடன் ஒற்றுமையாகவும் ஒத்தாசையாகவும் இருக்க வேண்டும்.

**05. அல்லாஹ்வின் பக்கம் மீளுதல்:**

நாம் அனைவரும் உடனடியாக அல்லாஹ்வின் பக்கம் மீள வேண்டும். இதற்கு "அல் இனாபா" எனப்படும். இது சிறந்த இபாதத்தாகும். ஏனென்றால், எம் குறைகளையும் கஷ்டங்களையும் தீர்ப்பவன் அல்லாஹ்வே அன்றி வேறு யாறும் இல்லை. அல்லாஹ் தனது அருள் மறையில் இவ்வாறு கூறுகின்றான்.

**"உமக்கு முன்னரும் பல சமூகங்களுக்கு நிச்சயமாக நாம் தூதர்களை அனுப்பினோம். அ(ச்சமூகத்த)வர்கள் அடிபணியும் பொருட்டு வறுமையாலும் துன்பத்தாலும் அவர்களை நாம் பிடித்தோம்."** *(6:42)*

**"வேதனை உங்களிடம் வருவதற்கு முன்னர் உங்களது இரட்சகனிடம் மீண்டு, அவனுக்கே கட்டுப்பட்டுவிடுங்கள். பின்னர் நீங்கள் உதவி செய்யப்படமாட்டீர்கள்."** *(39:54)*

அனைத்தையும் பரிபாலிப்பவன் அல்லாஹ்வேயன்றி வேறு எவருமில்லை. எனவே, எமது கவலைகளையும், சோதனைகளையும், கஷ்டங்களையும் அல்லாஹ்விடம் கூறி அவனிடமே பரிகாரமும் தேட வேண்டும்.

இன்ஷா அல்லாஹ் இதன் தொடர் அடுத்த இதழில்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.்.வா பணியில் ஈடுபடுகின்றவர்கள் மீது மக்களுக்கு ஏற்படும் நல்லெண்ணம் என்பது த.்.வாவின் வெற்றிக்கு அடிப்படையாக அமைகின்றது. இந்த வகையில் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தைப் பெற்ற தாஈகளின் கருத்துக்கள் மிக விரைவாக மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. உங்களது த.்.வா அதிகூடிய வெற்றியை நல்குவதற்குப் பின்வரும் அடிப்படைகள் பெரிதும் உதவலாம்.

# அழைப்புப் பணியின் போது...

1. **இஹ்லாஸ்**

நாம் யாரை சத்தியத்தின் பால் அழைக்கின்றோமோ அந்த மக்கள் இவர் அல்லாஹ்வுக்காகத்தான் த.்.வத் செய்கின்றார் என்று உறுதியாக நம்ப வேண்டும். இவர் புகழுக்காக அல்லது உலக ஆதாயத்திற்காக த.்.வா செய்கின்றார் என நினைத்தால் சொல்லும் கருத்து உண்மையாக இருந்தாலும் அதை ஏற்று செயற்படுத்த முன்வர மாட்டார்கள். சில போது கருத்தை ஏற்றவர்கள் கூட எதிர்க்கக் கூடிய நிலை ஏற்படலாம்.

நபிமார்கள் பலரும் மக்களுக்கு த.்.வா செய்யும் போது உங்களிடத்தில் நான் கூலியை எதிர்பார்க்கவில்லை என்பதைத் திரும்பத் திரும்ப கூறியுள்ளதும் இதைத்தான் உணர்த்துகின்றது.

2. **அழைக்கப்படுபவனின் நலனில் அக்கறை:**

நீங்கள் யாருக்கு த.்.வா செய்கின்றீகளோ அவர் விடயத்தில் நீங்கள் அக்கறையுடன் இருப்பதாக அவர் உணர வேண்டும். அவர் பாதுகாக்கப்பட வேண்டும். அவர் உயர்வடைய வேண்டும் என நீங்கள் விரும்புவதாக அவர் உணர வேண்டும்.

ஒருவரின் தவறை நீங்கள் சுட்டிக் காட்டுகிறீர்கள். இதன் மூலம் அவரை இழிவடையச் செய்ய நீங்கள் விரும்புவதாக அவர் உணர்ந்தால் உங்கள் கருத்தை ஏற்க மாட்டார்; எதிர்ப்பார். அத்துடன் உங்களிடம் சுட்டிக் காட்டுவதற்கு என்ன குற்றம் குறைகள் இருக்கின்றன எனத் தேடுவார்.

எனவே, யாருக்கு நீங்கள் த.்.வத் செய்கிறீர்களோ அவர்களின் இம்மை, மறுமை முன்னேற்றத்தில் நீங்கள் அக்கறை செலுத்துகின்றீர்கள் என்பதை அவர்கள் உணரும் விதத்தில் நீங்கள் நடந்து கொள்ளுங்கள். அவர்களது உலக விடயத்திலும் ஆர்வம் காட்டுங்கள். இதோ இறைத் தூதர்(ﷺ) அவர்கள் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுவதைப் பாருங்கள்.

**"நிச்சயமாக உங்களில் இருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கிறார். நீங்கள் சிரமப்படுவது அவருக்கு வருத்தத்தையளிக்கின்றது. உங்கள் விடயத்தில் அவர் அதிக ஆர்வமுடையவராக இருக்கிறார்; நம்பிக்கையாளர்களுடன் கருணையும் இரக்கமுடையவருமாவார்."** (9:128)

இறைத் தூதர்கள் தங்கள் பிரச்சாரத்தின் மூலம் இந்த உணர்வை வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

**"நிச்சயமாக நாம் நூஹை அவரது சமூகத்தாருக்குத் தூதராக அனுப்பினோம். அவர், 'எனது சமூகத்தினரே! நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனையன்றி வணங்கப்படத் தகுதியானவன் உங்களுக்கு வேறுயாரும் இல்லை. (நீங்கள் மாறு செய்தால்) நிச்சயமாக நான் மகத்தானதொரு நாளின் வேதனையை உங்கள் மீது அஞ்சுகின்றேன்' என்று கூறினார்."** (7:59)

இங்கே நூஹ்(ﷺ) அவர்கள் மகத்தான அந்நாளின் வேதனைக்கு நீங்கள் ஆளாகி விடுவீர்கள் என நான் அஞ்சுகின்றேன் என இரக்கப்படும் தொணியில் பேசி மக்கள் மீதான தனது நேசத்தையும், பாசத்தையும், அக்கறையையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

3. **கனிவான அணுகுமுறை:**

நாம் யாருக்கு த.்.வா செய்கின்றோமோ அவர்களுடன் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும். அன்பான அரவணைப்பும் கனிவான வார்த்தையும் சில வேளை அவர்கள் உண்மையை உணர உதவலாம். அவர்களது உள்ளக் கதவுகளைத் திறக்கலாம்.

எல்லா நபிமார்களும் சிலை வணங்கக் கூடிய, அல்லாஹ்வை நிராகரிக்கக் கூடிய மக்களை அழைத்துப் பேசும் போது கூட **"யாகவ்மீ!"** - என் சமுதாயமே! என விழித்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தனர். உங்களுக்கும் எனக்கும் எந்த ஒட்டும் இல்லை; உறவும் இல்லை என்ற தோறணையில் நடந்ததே இல்லை.

இவ்வாறே தங்களுடைய உறவு முறையை மறக்காமல் குறிப்பிட்டு அழைத்துள் ளனர். இப்றாஹீம் நபியின் தந்தை பெரும் சிலை வணங்கியாக இருந்தார்கள். இருப்பினும் **"யா அபதீ"** - எனதருமைத் தந்தையே! என அந்த உறவைக் குறித்து விழித்துப் பேசியுள்ளார்கள்.

எங்களில் சிலர் தமது கொள்கை உறுதியைப் பறைசாட்டுவதற்காக தந்தை, மாமி போன்ற உறவுடைய மாற்றுக் கருத்துடையவர் களையும் அபூஜஹ்ல், பிர்அவ்ன் அவன்ட முகத்தையும் நான் பார்க்கிறதில்லை என்ற தோறணையில் பேசுகின்றனர்.

தவறில் இருக்கின்றவர்கள் மீது காட்டும் கோபம்தான் தமது கொள்கை உறுதிக்கான சான்று எனத் தப்பாக எடை போட்டு வருகின்றனர். சிலர் புதிதாக ஒரு கருத்தைப் புரிந்து கொள்வார்கள். அடுத்த நாளே அந்தக் கருத்துக்கு மாற்றுக் கருத்தில் இருப்பவர்களுடன் வெறுப்பை வெளிப்படுத்தும் விதத்தில் நடந்து கொள்வார்கள். நேற்றுவரை நானும் இவர்களது நிலைப்பாட்டில்தானே இருந்தேன் என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. நான் திருந்திய உடனேயே முழு உலகமும் திருந்திவிட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இது சாத்தியப்படக் கூடியதல்ல.

**"நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் (போரிடச்) சென்றால் (எதிரியையும் நண்பனையும் பற்றி) தெளிவு பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் இவ்வுலக வாழ்வின் பொருட்களை விரும்பி, உங்களிடம் ஸலாம் கூறியவரிடம் நீர் நம்பிக்கை கொண்டவர் அல்லர் என்று கூறாதீர்கள். அல்லாஹ்விடமோ ஏராளமான வெகுமதிகள் உள்ளன. இதற்கு முன்னர் நீங்களும் இவ்வாறே இருந்தீர்கள். அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிந்தான். எனவே, (நம்பிக்கை கொண்டோர் யார் என்பது பற்றி) தெளிவு பெற்றுக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கின்றான்."**

*(4:94)*

இதனை எண்ணி மாற்று நிலைப்பாட்டில் இருப்பவர்களுடன் அன்பாகவும், பண்பாகவும், கனிவாகவும், கண்ணியமாகவும் உண்மைகளை எடுத்துச் சொல்ல முயல வேண்டும்.

### 4. தீர்ப்புக் கூறுவதில் அவசரம் காட்டாதீர்கள்:

சிலர் த∴வா செய்வார்கள். அதை மக்கள் ஏற்காவிட்டால் காபிர், பாவி, பித்அத் காரன், உருப்படமாட்டான், திருந்தாத ஜென்மங்கள், ஜஹன்னவாதி (நரகவாதி) என்றெல்லாம் பேசிவிடுகின்றனர். சில போது தீர்ப்புக் கூறிவிடுகின்றனர். தெளிவுபடுத்து வதில் நான் குறைவிட்டிருக்கலாம் என்று எண்ணுவதில்லை. என்மீது உள்ள நம்பிக்கையீனத்தால் இந்த மக்கள் இந்த உண்மையை உணராமல் இருந்திருக்கலாம் என எண்ணுவதில்லை. ஹிதாயத் அல்லாஹ்வின் கையில் இருக்கின்றது. அவன் இன்னும் நாடவில்லை என்று சிந்திப்பதுமில்லை. "எருமை மாட்டிற்கு மேல் மழை பொழிவது போல" எவ்வளவு சொன்னாலும் இந்தக் கூட்டத்துக்கு ஏறவே ஏறாது என்று பேசிவிடுகின்றனர். சில போது மறுத்தவர்கள் குறித்துப் பேசும் போது அவனையென்டால் அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான் என்று அல்லாஹ்வின் விடயத்தில் கூட தீர்ப்புக் கூறிவிடுகின்றனர். இவை தவறான போக்குகளாகும். இதனால் சில போது நம்மால் திட்டப்பட்டவன் நாம் கூறுவது உண்மை என்றாலும் நம்முடன் இணைந்து பணி செய்ய விரும்பமாட்டான்.

### 5. பழிவாங்குவது த∴வாவின் இலக்கு அல்ல:

சிலர் மாற்றுக் கருத்துள்ளவர்களைப் பழிவாங்குவதையே தமது த∴வாவின் இலக்காகக் கொள்கின்றனர். எப்படியாவது அவர்களின் குற்றம் குறைகளைத் தேடித் துருவிக் கண்டுபிடித்து அவற்றை ஊதிப் பெருப்பித்து பிரச்சாரம் செய்வதில் இவர்களுக்கு அலாதிப் பிரியம். அப்படியே தப்புத் தவறு கிடைக்காவிட்டால் நல்ல செயற்பாடுகளுக்குக் கூட உள்நோக்கம் கற்பித்து அல்லது அவதூறுகளை இட்டுக் கட்டி வஞ்சம் தீர்த்துக் கொள்கின்றனர். உண்மையான த∴வா என்பது பழிதீர்ப்பது, பள்ளத்தில் வீழ்த்திவிடுவது அல்ல. உள்ளத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதே உண்மையான த∴வாவாகும்.

இந்த வகையில் எதிரியின் குறைகளையும் மறைக்க வேண்டும். நல்ல அணுகுமுறை மூலம் எதிரியையும் நண்பனாக மாற்றிக் கொள்ளலாம்.

"உங்களில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் ஆதரவு வைப்போருக்கு அவர் களிடம் நிச்சயமாக அழகிய முன்மாதிரி இருக்கின்றது. எனினும் எவன் புறக்கணிக் கின்றானோ நிச்சயமாக அல்லாஹ் (அவனை விட்டும்) தேவையற்றவன்; புகழுக்குரியவன்." *(60:6)*

**"உங்களுக்கும், அவர்களில் எவர்களை நீங்கள் பகைத்துக் கொண்டீர்களோ அவர்களுக்குமிடையில் அல்லாஹ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பை உண்டு பண்ணுவான். அல்லாஹ் பேராற்றலுடையவன். மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையவன்." (60:7)

நாம் யாரை வஞ்சம் தீர்க்க நினைத்து அவர்களது தவறுகளைக் கிளறி பகிரங்கப் படுத்துகின்றோமோ அவர்கள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டு பரிசுத்தமாகி இருந்தால் எமது நிலை என்ன? அல்லாஹ் மன்னித்தவனை மக்கள் மன்றத்தில் மட்டம் தட்ட எமக்கு என்ன உரிமை இருக்கின்றது? எனவே, த..வா எனும் இந்த உயரிய பணியைப் பழி தீர்ப்பதற்கான ஊடகமாகப் பயன்படுத்தக் கூடாது. இது மக்களை சத்தியத்தை விட்டும் தூரமாக்கு வதுடன் அழைப்பாளன் மீது வெறுப்பையும் ஏற்படுத்தும்.

## 6. உயரிய கண்ணியத்தைக் கொடுங்கள்:

உண்மைக்கு மாற்றமான கருத்தில் இருப்பவர் முதியவராக இருந்தால் அந்த வயதுக்குரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும். சிறியவராக இருந்தால் அவருக்குரிய அன்பைக் கொடுத்தே த..வத் செய்ய வேண்டும். நமக்கு முரணான நிலைப்பாட்டில் இருப்பவர் ஆலிமாக இருந்தால் அவரது இல்முக்குரிய கண்ணியத்தை வழங்கியே த..வத் செய்ய வேண்டும். மாற்று இயக்கத்தில் மதிக்கப்படக் கூடிய தலைவர்களாக இருந்தால் அதற்குரிய சமூக அந்தஸ்த்தை வழங்கியே த..வத் செய்ய வேண்டும்.

இல்லையென்றால் எமது த..வத் வெற்றி பெறாத அதே வேளை, தேவையில்லாத வம்புகளுக்கும் நாம் ஆளாக நேரிடும்.

நபி(ஸல்) அவர்கள் தாயிபில் இருந்து மக்கா வந்த போது முத்இம் என்ற முஷ்ரிக் அவருக்கு உதவினார். பத்ர் யுத்தம் நடந்த போது அவர் மரணித்துவிட்டார். பத்ர் போரில் காபிர்கள் எழுபது பேர் கைதிகளாகப் பிடிக்கப் பட்டனர். இந்த சந்தர்ப்பத்தில் நபி(ஸல்) அவர்கள் முத்இம் இப்போது உயிரோடு இருந்து இவர்கள் விடயமாகப் பேசினால் நான் அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொள்வேன் என்று கூறினார்கள்.

முத்இம் முஷ்ரிக்தான். ஆனால் நல்லவர். அவருக்குரிய மரியாதையை அவர் முஷ்ரிக்காக இருந்தாலும் மரணித்த பின்னர் கூட நபி(ஸல்) அவர்கள் குறைத்து மதிப்பிடவில்லை என்பதைத்தான் இந்த ஹதீஸ் உணர்த்துகின்றது.

இன்று பித்அத்துக்களை முன்நின்று செய்யும் சில உலமாக்கள் கடந்த காலங்களில் சமூகத்திற்கு பல சேவைகளைச் செய்துள்ளார்கள். அவர்களால் இந்த நாட்டில் பல இஸ்லாமிய அம்சங்கள் பாதுகாக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில் அவர்களது கடந்த கால சேவைகளையெல்லாம் அள்ளிக் குப்பையில் போடுவது போல் பேசுவதென்பது எந்த வகையிலும் நபி வழியாக இருக்காது. எனவே, மக்களை அவரவர் அந்தஸ்த்திற்கு ஏற்ப அணுகுவது த..வாவின் முக்கிய பண்பாகக் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

## 7. மறைவாக எடுத்துக் கூறல்:

புத்தி சொல்வது இப்போது யாருக்கும் பிடிப்பதில்லை. பெரியவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் புத்தி கூறும் போது வேண்டா வெறுப்புடன் அதனை செவிமடுக்கின்றனர். சில போது பெற்ற பிள்ளைக்குக் கூட அடுத்தவர் முன்னிலையில் புத்தி சொன்னால் பிடிப்பதில்லை. எனவே, அடுத்தவர்களுக்கு நல்லது கூறும் போது கூட முடிந்தவரை இரகசியமாக, மறைவாகக் கூற முனைய வேண்டும். குற்றங்களைப் பகிரங்கப்படுத்தி அடுத்தவர்களின் மானத்துடன் விளையாடக் கூடாது. மானத்துடன் விளையாடுவது எவ்வளவு மனவலியைக் கொடுக்கிறது என்பதைப் பின்வரும் சம்பவத்தைப் படித்தால் புரியும்.

இப்னு உமர்(ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். **"ஹஜ் அல்லது உம்ராவின் போது நான் உமர்(ரழி) அவர்களுடன் இருந்தேன். நாம் ஒரு பயணக் கூட்டத்தைக் கடந்த போது அதில் ஒருவர் எங்களைத் தேடுவதாகத் தான் கருதுவதாக உமர்(ரழி) அவர்கள் கூறினார்கள். அந்த மனிதர் உமர்(ரழி) அவர்களிடம் வந்து அழுதார். அப்போது உமர்(ரழி) அவர்கள் உனது நிலை என்ன? நீ கடனாளியாக இருந்தால் உனக்கு உதவுகிறோம். நீ யாரையும் கொலை செய்திருந்தால் அதற்காக உம்மைக் கொல்வோம். அப்படி இல்லாமல் யாருக்காவது அஞ்சினால் உமக்கு நாம் பாதுகாப்பு அளிக்கின்றோம். உனக்குப் பக்கத்தில் இருப்பவர்களால் உனக்குப் பிரச்சினையென்றால் உன்னை வேறு இடத்திற்கு மாற்றுகின்றோம் என்று கூறினார்கள்.**

**வந்த மனிதர், நான் தய்யிம் கோத்திரத்தைச் சேர்ந்தவன். மது அருந்திவிட்டேன் அபூ மூஸா(ரழி) அவர்கள் எனக்குத் தண்டனை அளித்தார்கள். அத்துடன் எனது முகத்தில் கரியைப் பூசி மக்கள் மத்தியில் ஊர்வலமாக அழைத்து வந்தார். என்னுடன் யாரும் சேரக் கூடாது; கூடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணக் கூடாது என்று கட்டளையிட்டார். இதனால் ஆத்திரமுற்ற நான் மூன்று முடிவுகள் எடுத்தேன்.

1. வாளை உருவி அபூமூஸாவைக் கொன்று விடுவது.
2. அல்லது என்னை நீங்கள் சிரியாவிற்கு இடம் மாற்ற வேண்டும். ஏனெனில், அவர்கள் என்னை அறியமாட்டார்கள்.
3. அல்லது நான் எதிரிகளுடன் இணைந்து அவர்களுடன் உண்டு, குடித்து வாழ்வது.

இந்த மூன்றில் ஏதேனும் ஒன்றைத்தான் நான் செய்ய வேண்டும் என்றார். இது கேட்டு அழுத உமர் (ரழி) அவர்கள் அபூ மூஸா (ரழி) அவர்களைக் கண்டித்தார்கள்." (பைஹகி)

ஒரு மனிதரது பாவத்தைப் பகிரங்கப் படுத்துவது சில போது அவனை அவன் ஏற்கனவே செய்ததை விட பெரிய தவறுகளைச் செய்யத் தூண்டிவிடும். எனவே, அடுத்தவர்களின் தப்புத் தவறுகளை மறைக்க வேண்டும். தனிப்பட்ட தவறுகளை தனிப்பட்ட முறையில் சுட்டிக் காட்டித் திருத்த முற்படுவதே சிறந்ததாகும். பொதுவாக உபதேசிப்பதாக இருந்தால் தவறு செய்தவரைச் சுட்டிக் காட்டாமல் தவறைக் கண்டிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

## 8. அன்பளிப்புக்கள் மூலம் அணுகுதல்:

நீங்கள் யாருக்கு த∴வா செய்ய விரும்புகின்றீர்களோ அவர்களுக்கு சின்னச் சின்ன அன்பளிப்புக்களை வழங்கலாம். அதனால் அவர்களுக்கு உங்கள் மீது பாசமும் சினேகமும் ஏற்படும். உங்களை அவர் மதிக்க ஆரம்பிப்பார். தான் நேசிப்பவரின், மதிப்பவரின் வார்த்தைகளை உள்ளம் வெகு விரைவாக உள்வாங்கிக் கொள்ளும். நபி(ஸல்) அவர்கள் அன்பளிப்புக்களினூடாக அறப்பணி செய்துள்ளார்கள் என்பதை அவர்களது வழிகாட்டல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

"ஸஅத் (ரழி) அவர்கள் அருகில் இருக்கும் போது நபி(ஸல்) அவர்கள் சில மக்களுக்கு பொருளாதார உதவிகளைச் செய்தார்கள். ஆனால் ஒரு மனிதருக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. கொடுக்கப்பட்ட மக்களை விட கொடுக்கப்படாதவர் எனக்குச் சிறந்தவராக்கப்பட்டார். எனவே, யா யாஸுலுல்லாஹ்! ஏன் இந்த மனிதரை விட்டு விட்டீர்கள். நிச்சயமாக அவரை ஒரு மு∴மினாக நான் கருதுகின்றேன் என்றார்கள். நபி(ஸல்) அவர்கள் அதன்படி செயற்படாத போது மூன்று முறை இதையே திரும்பத் திரும்ப ஸஅத் (ரழி) கூறிய போது நபி (ஸல்) அவர்கள்,

"ஸஅதே! சில போது சில மனிதர்களுக்கு நான் பொருளாதார உதவிகளைச் செய்வேன். ஆனால் அவர்களை விட மற்றவர்கள் எனக்கு விருப்பமானவர்களாக இருப்பார்கள். ஏனெனில் நான் உதவி செய்யவில்லை என்பதால் தடம் புரண்டு அவர்கள் நரகத்தில் சென்று விழுந்து விடுவார்களோ என்ற அச்சமே காரணம் என்றார்கள்." (ஹதீஸ் கருத்து (புஹாரி, முஸ்லிம்))

எனவே, நபி(ஸல்) அவர்கள் சிலரது பலவீனங்களை அவதானித்து அவர்களுக்கு அன்பளிப்புக்களை வழங்கியுள்ளார்கள். இந்த அடிப்படையில் அன்பளிப்புக்கள் மூலம் உள்ளங்களை வெற்றி கொள்ள அழைப்பாளர்கள் முயற்சிக்கவும்.

## 9. மக்கள் தொடர்பு வேண்டும்:

தங்களது பேச்சைக் கேட்காதவர்களின் பேச்சை மக்கள் கேட்கமாட்டார்கள். இந்த வகையில் நீங்கள் யாருக்கு த∴வா செய்கின்றீர்களோ அவர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் உங்களுடன் கதைக்கும் போது கொஞ்சம் காது கொடுங்கள். அக்கறையுடன் கேளுங்கள். அவர்களது பிரச்சினை தொடர்பில் நீங்கள் அக்கறையாக இருப்பதாக அவர்கள் உணர வேண்டும். உங்களைப் பார்த்து மக்கள் பேசும் போது முகத்தைத் திருப்பிக் கொண்டு செல்லாதீர்கள். அவர்கள் பேசும் போது அவர்களது பேச்சைத் துண்டிக்காதீர்கள். அவர்களது பேச்சு உங்களுக்குப் பொருத்தமற்றதாகத் தெரிந்தாலும் கொஞ்சம் அக்கறை காட்டுங்கள். இருந்தாலும் அவர்களை எள்ளி நகையாடி விடாமல், ஏளனமாகப் பார்க்காமல் தட்டிக் கொடுங்கள்; ஆறுதல் கூறுங்கள். உங்கள் மீது அவர்களுக்குப் பிடிப்பு ஏற்படும். நபி(ஸல்) அவர்களுடன் ஒருவர் உரையாடினால் பேச்சைத் துண்டிக்க மாட்டார்கள். முகத்தைத் திருப்பமாட்டார்கள். கையைக் கொடுத்தவர் கையைத் தானாக எடுக்கும் வரை தனது கையைப் பிடுங்கி எடுக்கமாட்டார் என்பதை எல்லாம் தாஈகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவை போன்ற அணுகுமுறைகளுடாக உள்ளங்களைக் கவர்ந்தால் உண்மையை எடுத்துச் சொல்வது மிக இலகுவாக அமைந்து விடும். அதை ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் மக்கள் மனங்களும் மாறிவிடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி

# இஸ்லாமிய நாகரிகம்

க.பொ.த (உ/த)

தொடர் : 22

# பிக்ஹ் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்

சட்டுன் S. றம்ழான் (ஸ்லமி)

இஸ்லாமிய வரலாற்றில் அதன் மூலாதாரங்களான அல்குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றின் ஒளியில் தோன்றி வளர்ந்த கலையாக இது காணப்படுகின்றது. "பிக்ஹ்" என்ற சொல்லின் மொழிப் பயன்பாடு அறபிகளிடத்தில் ஆரம்பத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. பொதுவாக பிக்ஹ் என்ற பதத்தை "இல்ம்" (அறிவு). "பஹ்ம்" (விளக்கம்) என்ற அர்த்தங்களில் மொழி ரீதியாகப் பயன்படுத்தப்படுவதுண்டு. அல்பைரூஸ் ஆபாதி என்ற மொழி வல்லுனர் "அல்காமூஸ் அல்முஹீத்" எனும் தனது அகராதியில் "பிக்ஹ்" என்பதற்கு "ஒரு விடயத்தை அறிந்து அதனை விளங்கிக் கொள்ளல்" என அர்த்தம் வளங்குகின்றார். இதனால்தான் அறபிகள் கற்றறிந்த அறிவாளிகளுக்கு "பகீஹ்", "ஆலிம்" போன்ற சொற்களைப் பயன்படுத்துவர்.

அல்குர்ஆனும் ஹதீஸும் "பிக்ஹ்" என்ற சொல்லை இந்த மொழிக்கருத்துக்களில் பயன்படுத்தியுள்ளன.

"என் நாவில் உள்ள முடிச்சை அவிழ்த்து விடுவாயாக!"

"(அப்போது) அவர்கள் எனது பேச்சை விளங்கிக் கொள்வார்கள்." *(20:27, 28)*

"ஷுஐபே! நீர் கூறுபவற்றில் அதிகமானதை எம்மால் விளங்கிக்கொள்ள முடியாதுள்ளது. இன்னும் நிச்சயமாக நாம் எம்மில் வலிமை குன்றியவராகவே உம்மைக் காண்கின்றோம். உமது கோத்திரத்தார் இல்லையென்றால் உம்மைக் கல்லெறிந்தே கொன்றிருப்போம். நீர் எம்மிடம் மதிப்புக் குரியவரும் அல்லர்' எனக் கூறினர்." *(11:91)*

"நம்பிக்கையாளர்கள் அனைவருமாக (போருக்குப்) புறப்பட வேண்டியதில்லை. அவர்களில் உள்ள ஒவ்வொரு வகுப்பாரிலும் ஒரு கூட்டத்தினர் மார்க்கத்தை விளங்கிக் கொள்வதற்காகவும், தமது சமூகத்திற்குத் திரும்பியதும் அவர்கள் (தமது தவறுகளிலிருந்து) விலகிக் கொள்ளும் பொருட்டு, அவர்களை எச்சரிப்பதற்காகவும் புறப்பட வேண்டாமா?" *(9:122)*

"நீங்கள் எங்கிருந்த போதும் மரணம் உங்களை அடைந்தே தீரும். நீங்கள் உறுதியான கோட்டைகளில் இருந்த போதிலும் சரியே! அவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால், 'இது அல்லாஹ் விடமிருந்துள்ளது' எனக் கூறுகின்றனர். அவர்களுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால், 'இது உம்மிடமிருந்துள்ளது' என்கின்றனர். 'அனைத்தும் அல்லாஹ்விடமிருந்துள்ளவையே' என்று (நபியே!) நீர் கூறுவீராக! எந்தச் செய்தியையும் விளங்கிக் கொள்ள முற்படாமலிருக்க இந்தக் கூட்டத்திற்கு என்ன நேர்ந்தது?" *(4:78)*

"இரு மலைகளுக்கிடைப்பட்ட (ஓரிடத்)தை அவர் அடைந்த போது, அவ்விரண்டுக்கும் முன்னால் பேச்சை விளங்கிக் கொள்ளாத ஒரு கூட்டத்தைக் கண்டார்." *(18:93)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல நபி(ஸல்) அவர்கள் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களுக்காக செய்த பிரார்த்தனையிலும் பிக்ஹ் என்ற பதம் இவ்வர்த்தத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

**“அல்லாஹ்வே! அவருக்கு நீ மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பாயாக! அவருக்கு விளக்கத்தில் தெளிவைக் கொடுப்பாயாக!”** (முஸ்லிம்)

**“அல்லாஹ்வே! அவருக்கு மார்க்கத்தில் விளக்கத்தை அளிப்பாயாக!”** (புஹாரி)

மேற்சொன்ன விளக்கங்களிலிருந்து “பிக்ஹ்” என்ற பதம் “அறிவில் தெளிவு” என்ற பரந்த கருத்தைக் கொண்டிருப்பதை அறியலாம். இஸ்லாமிய பரிபாஷையில் பிக்ஹ் என்பதற்கு இஸ்லாமிய அறிஞர்கள் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துவர்.

“ஷரீஆவின் ஆதாரங்களின் அடிப்படையில் மார்க்க விடயம் தொடர்பாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ஷரீஆ சட்டம் பற்றிய அறிவு “பிக்ஹ்” எனப்படும்.

இமாம் அல்காமிதீ(ரஹ்) அவர்கள் இமாம் ஷாபிஈ(ரஹ்) அவர்களை மேற்கோள் காட்டி இவ்வரைவிலக்கணத்தை முன் வைக்கின்றார்கள். அதே போல இமாம் தாஜுதீன் அஸ்ஸுப்கீ(ரஹ்) அவர்களும் இந்த வரைவிலக்கணத்தையே முன்வைக்கின்றார்கள்.

இந்த வரைவிலக்கணத்தின் படி “பிக்ஹ்” என்பதற்குள் இஸ்லாமிய வாழ்க்கை முறை முழுவதும் உள்ளடங்குவதை விளங்கிக்க கொள்ளலாம். இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களை பிக்ஹ் அடிப்படையில் பின்வரும் பிரிவுகளுக்குள் வைத்து நோக்குவர்.

1. இபாதாத்
2. முஆமலாத்
3. முனாகஹாத்
4. அல் ஜினாயாத் வல் உகூபாத்

இஸ்லாத்தின் தோற்றத்தோடு ஆரம்பித்த “பிக்ஹ்” திடீரென்று ஒரு கலையாகப் பரிணமிக்கவில்லை. இஸ்லாம் கட்டம் கட்டமாக பல படித்தரங்களில் வளர்ச்சியுற்றது போல் “பிக்ஹ்” என்ற துறையும் பல்வேறு காலகட்டங்களிலும், பல படித்தரங்களில் வளர்ச்சியுற்றது.

நபி(ஸல்) அவர்கள் தனது தோழர்களுக்கு “பிக்ஹ்” என்றொரு தனியான தொகுப்பைக் கொடுக்கவில்லை. என்றாலும் அவர்கள் தமது தோழர்களுக்கும், உம்மத்தினருக்கும் தேவையான பொது விதிகள், அடிப்படைக் கோட்பாடுகள், சட்ட விதிகள், விடய ரீதியான தீர்ப்புக்கள் என்பவற்றை வழங்கியிருந்தார்கள். அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் இவை விரவிக் காணப்படுகின்றன.

நபி(ஸல்) அவர்களது இவ்வழிகாட்டல் அரேபியத் தீபகற்பத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களுக்குத் தேவையான வழிகாட்டல்களைக் கொண்டமைந்திருந்தது. நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னர் இஸ்லாத்தின் அரசியல் அதிகாரம் அரேபியாவுக்கு வெளியிலும் கால் பதித்தது. அதன் விளைவால் அரபிகள் அல்லாத பெருந் தொகையினர் இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்து கொண்டனர். இப்போது இந்த மக்களுக்குத் தெளிவில்லாத விடயங்களுக்குரிய விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டியதன் தேவை அதிகரித்தது. இதுவரை காலமும் அறபுத் தீபகற்பத்தில் வாழ்ந்த சமூகம் கண்டிராத, சந்தித்திராத புதிய புதிய பிரச்சினைகளுக்கான ஷரீஆ ரீதியான தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டியதன் தேவை அதிகரித்தது.

இப் புதிய சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான இஸ்லாமிய சட்டங்களை அறிந்து கொள்ள இஜ்திஹாத் நடைமுறைகளும் சிந்தனைகளும் இன்றிமையாதவையாகின்றன. அதே போல் கிலாபத் காலத்திலும், அதனைத் தொடர்ந்து வந்த ஆட்சிக் காலங்களிலும், இடம்பெற்ற போர்கள், வெற்றிகள், என்பன போராளிகள், நாடுகள், கைதிகள், வரிகள் போன்ற புதிய சூழ்நிலைகளை உருவாக்கியமையும் புதிய சட்டத் தீர்ப்புகள் பற்றிய அறிவின் முக்கியத்துவத்தை வேண்டி நிற்கின்றன.

இப்பின்னணியில் பிக்ஹ் பல்வேறு கட்டங்களில் வளர்ந்த முறையை பின்வரும் அடிப்படையில் நோக்குவோம்.

1. நபி(ஸல்) அவர்களது காலம்.
2. குலபாஉர் ராஷிதூன்கள் காலம்.
3. தாபிஈன்கள், தபஉத் தாபிஈன்கள் காலம்.
4. மத்ஹப்களின் காலம்.
5. தக்லீதின் காலம்.
6. நவீன காலம்.

## 1. நபி(ஸல்) அவர்களது காலம்.

முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத் கிடைத்தது முதல் ஆரம்பிக்கும் இக்காலம் நபி(ஸல்) அவர்களது வபாத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவடைகின்றது. இக்காலத்தில் "பிக்ஹ்" எனச் சுட்டிக்காட்டிப்படுகின்ற ஷரீஆ சட்டங்கள் இக்காலத்தில் இரண்டு கட்டமாக வளர்ச்சியடைந்துள்ளது.

அ) மக்கா காலம்
ஆ) மதீனா காலம்

## ஆ) மக்கா காலம்:

நுபுவ்வத் ஆரம்பித்து ஹிஜ்ரத் அனுமதிக்கப்படும் வரை 13 வருட காலம் மக்கா காலம் எனப்படுகின்றது. இக்கால கட்டத்தில் நம்பிக்கை சார்ந்த விடயங்கள், ஓரிறை வணக்கம், சிலை வணக்க மறுப்பு, அக்லாக் சார்ந்த விடயங்கள் என்பன பற்றிய விளக்கங்களே மக்களுக்கு வழங்கப்பட்டன.

இக்காலப்பகுதியில் அல்லாஹ்வை அஞ்சி அவனை மாத்திரமே வணங்க வேண்டும் எனவும், நபி(ﷺ) அவர்களையும் அவர்களது தோழர்களையும் பொறுமை காக்குமாறும், அவர்களுக்கு இழைக்கப்படும் துன்புறுத்தல்களைச் சகித்துக் கொள்ளுமாறும் வழிகாட்டப்பட்டது. முன்னைய நபிமார்களது வரலாறுகள், அவர்களது சமூகத்தின் மூலம் அந்த நபிமார்கள் எதிர் கொண்ட பொய்ப் பித்தல்கள், துன்புறுத்தல்கள், அவர்களை அல்லாஹ் தண்டித்த விதம் போன்ற விடயங்களை விளங்கி நபியவர்களையும், மு.்.மின்களையும் ஆறுதல் படுத்தி அவர்களது உள்ளங்களை உறுதிப்படுத்தும் விடயங்களே போதிக்கப்பட்டன.

இக்காலப் பகுதியில் அல்குர்ஆனின் மூன்றிலிரண்டு பகுதியளவு இறக்கப்பட்டது. என்றாலும், மக்கா காலப் பகுதியில் தொழுகைளைத் தவிர வேறெந்த இபாதத்தும் கடமையாக்கப்படவில்லை என்பது நோக்கத் தக்கது.

## ஆ) மதீனா காலம்:

இது நபியவர்களின் காலத்திலிருந்து அவர்களது வபாத் வரைக்குமான கால எல்லையைக் கொண்டது. ஹிஜ்ரத் பயணமானது நபி(ﷺ) அவர்களுக்கு புதியதொரு வாழ்க்கை முறையை ஆரம்பிக்க வழிவகுத்தது. ஹிஜ்ரத்தைத் தொடர்ந்து இஸ்லாம் அரசியல் அதிகாரம் பெற்றது. அரேபியாவிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் பரவலானது. மதீனாவை மையமாகக் கொண்டு உருவான புதிய இஸ்லாமிய சமூகத்துக்குப் பொருத்தமான செயற்பாடு சார்ந்த ஷரீஆ சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஹிஜ்ரத்தின் பின்னரான நபி(ﷺ) அவர்களது பத்து வருட காலத்துக்குள் இறங்கிய சட்டங்கள் அனைத்தும் மக்களை நேர்வழிப்படுத்தத்தக்கனவாக அமைந்திருந்தன.

மதீனாவில் உருவான புதிய சமூக அமைப்பு மக்காவைப் போலல்லாது முற்றிலும் வேறுபட்ட சூழலைத் தோற்றுவித்திருந்தது. இதுவரை காலமும் இன்னல்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் உட்பட்டிருந்த சமூகம் அரசியல் நடைமுறைகளிலும், ஒப்பந்தங்களிலும் ஈடுபட வேண்டிய தேவைக்குட்பட்டது. அத்தோடு கொள்கைச் சகோதரர்கள், மற்றும் முஸ்லிமல்லாத சுதேசிகள் என கலப்பு சமூக வாழ்வினை புதிய சமூக அமைப்பு சந்தித்தது.

இக்கட்டத்தில் சட்டத்துறை சார்ந்த வசனங்கள் அல்குர்ஆனின் இறக்கத்தில் பெருமளவில் இடம்பிடித்தன. நாடுகளுக்கு இடையிலான அரசியல் தொடர்புகள், சமூகங்களுக்கிடையிலான நடுநிலை வாய்ந்த இடைத் தொடர்பு நடைமுறைகள், ஒப்பந்தங்கள் என்று ஆரம்பித்த புதிய சகாப்தம், குடும்பவியல், வியாபாரம், பொருளாதாரம், வட்டி, தண்டனைகள், மற்றும் ஸகாத், ஹஜ், நோன்பு போன்ற கூட்டுக் கடமைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

இறுதியில் ஹி. 10 ஆம் ஆண்டு துல்ஹஜ் மாதம் 5:3 ஆம் வசனம் இறங்கும் வரை சட்ட வசனங்கள் தொடர்ந்து இறங்கிக் கொண்டிருந்தன.

இஸ்லாமிய சட்டமானது குர்ஆனின் ஒளியில் வளர்ந்ததாகும். அதனால், அல்குர்ஆன் 23 வருட காலமாக இறங்கிய முறையிலேயே சட்டங்களும் அறிமுகம் செய்யப்பட்டன. இந்த வகையில் நபி(ﷺ) அவர்களது காலத்தில் பிக்ஹ் பின்வரும் தன்மைகளைக் கொண்டிருந்தது.

### அ) நடைமுறை வடிவம் பெற்றிருத்தல்:-

நபி(ﷺ) அவர்களது காலத்தில் பிக்ஹ் கோட்பாடு வடிவம் பெற்றுக் காணப்படவில்லை யாயினும் நடைமுறை வடிவம் கொண்டதாகக் காணப்பட்டது. இக்காலத்தில் தீர்வு காணப்பட்ட பிரச்சினைகளாகவே காணப்பட்டன. மாறாக, கற்பனை ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இக்காலத்தில் முன்வைக்கப் படவில்லை.

இக்காலப் பகுதியில் சட்ட வசனங்கள் மூன்று வடிவங்களில் இறக்கியருளப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கேள்விக்கான விடைகள்:

(உ-ம்)

"(நபியே!) மது, சூதாட்டம் குறித்து அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். 'அவ்விரண்டிலும் பெரும்கேடும், மனிதர்களுக்கு (சில) பயன்களும் இருக்கின்றன. எனினும், அவ்விரண்டின் பயனை விட அவ்விரண்டின் கேடு மிகப்பெரியதாகும்' எனக் கூறுவீராக! மேலும், தாம் எதைச் செலவு செய்வது? என்றும் உம்மிடம் கேட் கின்றனர். '(தேவைக்குப் போக) மீதமுள்ளதை' எனக் கூறுவீராக! நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறே அல்லாஹ் வசனங் களை உங்களுக்குத் தெளிவுபடுத்துகின்றான்."

*(2:219)*

"மாதவிடாய் பற்றியும் உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். 'அது ஒரு அசௌகரியமாகும். எனவே, மாதவிடாயின் போது பெண்களை (உறவு கொள்வதை) விட்டும் ஒதுங்கிக் கொள்ளுங்கள். அவர்கள் தூய்மையடையும் வரை அவர்களிடம் (உறவுக்காக) நெருங்காதீர்கள். அவர்கள் தூய்மையடைந்துவிட்டால் அல்லாஹ் உங்களுக்கு ஏவியவாறு அவர்களிடம் செல்லுங்கள்' என்று (நபியே!) நீர் கூறுவீராக! நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்புத் தேடுபவர்களை நேசிக்கின்றான். மேலும் தூய்மையானவர்க ளையும் நேசிக்கின்றான்."

*(2:222)*

"அவர்களின் உதாரணம் தீயை மூட்டிய ஒருவனின் உதாரணத்தைப் போன்றதாகும். அவனைச் சூழ (அந்நெருப்பு) ஒளி வீசிய போது அல்லாஹ் அவர்களின் ஒளியைப் போக்கி, பார்க்க முடியாத இருள்களில் அவர்களை விட்டுவிட்டான்."

(2:17)

2. இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான சட்டங்களாக:-

*(உ-ம்):* ழிஹார் பற்றிய சம்பவத்தக்கான தீர்வு.

3. கேள்விகள், சம்பவங்கள் இல்லாது புதிதாக சட்டங்களை விளக்குதல்.

இந்த வகை சட்ட வசனங்களே அல்குர்ஆனில் அதிகமாகக் காணப்படுகின்றன.

### ஆ) தொகுக்கப்படாத அடிப்படை விதிகளைக் கொண்டமைந்திருத்தல்:

நபி(ﷺ) அவர்கள் பிக்ஹ் என்றொரு தனியான தொகுப்பை உருவாக்கவில்லை. அத்தோடு அதனையொரு தனித்துறையாகவும் ஸஹாபாக்களுக்கு அறிமுகம் செய்யவில்லை. மாறாக, உம்மத்துக்குத் தேவையான ஷரீஆ சட்டங்களைப் பெற்றுக் கொள்ளத்தக்க பொதுவான விதிகளை அடிப்படையாகப் போதித்தார்கள். தேவையான கிளைப் பிரச்சினைகளுக்கான பொருத்தமானதும், சரியானதுமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளத் தகு விதிகளாக அவை காணப்பட்டமை நோக்கத்தக்கது.

### இ) கருத்து வேறுபாடற்றதாகக் காணப்பட்டமை:

நபி(ﷺ) அவர்கள் வாழும் போது இஸ்லாமிய சட்டத்தீர்ப்புக்களில் முரண்பாடான கருத்துக்கள் காணப்படவில்லை. சில இஜ்திஹாத் விடயங்களில் ஸஹாபாக்க ளிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தாலும் அவை நபி(ﷺ) அவர்களால் தீர்க்கமான ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. ஸஹாபாக்கள் மேற்கொண்ட இஜ்திஹாத்கள் நபி(ﷺ) அவர்களிடம் முன்வைக்கப்பட்டு நபியவர்களின் அங்கீ காரத்துக்குட்பட்டுவிட்டதால் அது சுன்னா என்ற தரத்தை அடைந்து விடுகின்றது. இதனால் அவ்விடயத்தில் வேறு எவரும் மாற்றுக் கருத்துக் கூற முடியாத வஹியின் ஆதிக்கம் இக்காலத்து பிக்ஹில் காணப்பட்டது.

### ஈ) அடிப்படைகளும், ஷரீஆ விதிகளும் பூரணமடைந்ததாகக் காணப்படல்:

நபி(ﷺ) அவர்கள் வபாத்தாவதற்கு முன்னர் இஸ்லாமிய சட்டத்துறை பூரணப் படுத்தப்பட்டுவிட்டது. இஸ்லாமிய சட்டத் துறையின் ஊற்றுக் கண்ணாகிய அல்குர்ஆன் பூரணப்பட்டமையால் மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்துத் துறைகளுக்குமான அடிப்படை சட்டவிதிகள் அனைத்தும் அல்குர்ஆன், சுன்னாவின் மூலம் பூரணப்படுத்தப்பட்டுவிட்டன.

நபி(ﷺ) அவர்களின் வபாத்தின் பின்னர் வந்த காலப்பகுதியில் சட்டம் இயற்றுவதற்குரிய விதிகளை உருவாக்க வேண்டிய தேவைகள் காணப்படவில்லை. மாறாக, ஷரீஆ சட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலேயே புதிய சிந்தனை களும் விதிமுறைகளும் தேவைப்பட்டன.

நபி(ﷺ) அவர்களது காலத்தில் இஸ்லாமிய சட்டவாக்கத்துறையான பிக்ஹ், இரு பிரதான மூலாதாரங்களை ஆதாரமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. வஹியின் அடிப்படையிலமைந்த குர்ஆனும் சுன்னாவுமே நபிகளார் காலத்து பிக்ஹின் மூலாதாரங்களாகக் காணப்பட்டன.

(இன்ஷா அல்லாஹ் தொடரும்....)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி பார்ப்பது




இன்று தொலைக்காட்சிப் பாவனை அனைத்து வீடுகளிலும் சர்வசாதாரணமாக இருப்பதைக் காணலாம். அவ்வகையில் முஸ்லிம்கள் தொலைக்காட்சி பார்ப்பது கூடாது என்று தெரிந்திருந்தாலும், அது ஏன் கூடாது என்பதை அறியாமல் பலரும் இருப்பதைக் காணலாம். தொலைக்காட்சியைப் பார்ப்பது ஏன் கூடாது? அது எவ்வகையில் ஹராமாகும்? என்பது போன்ற அம்சங்களை இக்கட்டுரையில் விளக்கலாம் என ஆசைப்படுகின்றேன். அவைகளாவன,

**01. அந்நியப் பெண்களைப் பார்த்தல்:**

தொலைக்காட்சியைத் திறந்தாலே பெண்கள் பல அமைப்புக்களில் தோன்றுவதைக் காணலாம். அல்லாஹ் கூறுகின்றான்.

**"நம்பிக்கையாளர்களான ஆண்களிடம், அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் (நபியே!) நீர் கூறுவீராக! இதுவே அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும். நிச்சயமாக அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன்."** *(24:30)*

இவ்வசனத்திலே அல்லாஹ் மு.்.மின்களை நோக்கி பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு குறிப்பிடுகின்றான். ஒருவர் ஒரு அந்நியப் பெண்ணை திடீரெனப் பார்த்து விட்டால் தன் பார்வையை வேறு திசையை நோக்கிச் செலுத்த வேண்டும். அவ்வாறு அவர் செய்தால் அவருக்கு அது குற்றமாகாது. அவர் தொடர்ந்து பார்வையை அப்பெண்ணின் மீது செலுத்திக் கொண்டிருந்தால் அவர் பாவியாவார் என்பதை இஸ்லாம் நமக்குச் சொல்லித் தந்திருக்கின்றது.

பாதைகளில் அமருவதை தடுத்த நபி(ஸல்) அவர்கள், அப்படி அமர்ந்து பேச வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டால் பாதைக்குரிய உரிமைகளான பார்வையைத் தாழ்த்துவது, பிறருக்குத் துன்பம் இழைக்காதிருப்பது, ஸலாத்துக்கு பதில் சொல்வது, நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பது போன்றவைகளை நிறைவேற்ற வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்கள்.

நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள் **"ஒரு ஆண் இன்னொரு ஆணின் மறைவிடத்தை பார்க்கக் கூடாது. ஒரு பெண் இன்னொரு பெண்ணின் மறைவிடத்தைப் பார்க்கக் கூடாது. ஒரு ஆண் இன்னொரு ஆனுடன் ஒரே போர்வையால் போர்த்திக் கொள்ளக் கூடாது. ஒரு பெண் இன்னொரு பெண்ணுடன் ஒரே போர்வையால் போர்த்திக் கொள்ளக் கூடாது."**

அறிவிப்பவர் : அபூஸஈத் அல்குத்ரிய்யி(ரழி)
ஆதாரம் : முஸ்லிம்

இஸ்லாம் ஒரு அந்நியப் பெண்ணின் முகத்தையே பார்க்கக் கூடாது என்று சொல்லியிருக்க, இன்று தொலைக்காட்சிகளிலே அப்பெண்களின் முடி, நெஞ்சுப் பகுதி, கால்கள், கைகள் என்று அரை நிர்வாணத்துடன் அல்லது முழு நிர்வாணத்துடன் பார்ப்பதை இஸ்லாம் எப்படி அனுமதிக்கும்? இவ்வாறு பார்ப்பது எவ்வளவு பெரிய பாவம்? விபச்சாரத்தின் பக்கம் நெருங்கக் கூடாது என்று அல்குர்ஆன் சொல்லியிருக்க, எப்படி விபச்சாரத்தைத் தூண்டும் காட்சிகளை நாங்கள் பார்க்கலாம்.?

துரதிஷ்டமாக ஒரு பெண்ணின் மீது பார்வை விழுந்தாலே அப்பார்வையை அப்பெண்ணை விட்டும் திசைதிருப்ப வேண்டும் என்று இஸ்லாம் சொல்லியிருக்க, நாமெல்லாம் Switch ஐ On பண்ணி அரை நிர்வாணத்துடன் இருக்கக் கூடிய பெண்களின் காட்சிகளை போட்டுப் பார்க்கின்றோமே, இது நியாயமா?

அந்நியப் பெண்களை பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் இத்தொலைக்காட்சிகளிலேயே இருப்பதனால் ஆண்கள் பார்ப்பது முற்றிலும் ஹராம் என்பதை அல்குர்ஆனும் அல்ஹதீஸும் நமக்கு சுட்டிக்காட்டுகின்றது.

**02. அந்நிய ஆண்களைப் பார்த்தல்:**

ஒரு இஸ்லாமியப் பெண் அந்நிய ஆணைப் பார்ப்பது ஹராமாகும்.

**"(நபியே!) நம்பிக்கையாளர்களான பெண்களிடம்,**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும், அவர்களது அலங்காரத்தில் வெளிப்படுவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் வெளிப்படுத்தக் கூடாது என்றும், தமது முந்தானைகளை தமது மார்பகங்கள் மீது போட்டுக் கொள்ளுமாறும் (நபியே!) நீர் அவர்களுக்குக் கூறுவீராக! மேலும், அவர்கள் தமது அலங்காரத்தைத் தமது கணவன்மார்கள் அல்லது தமது தந்தையர், அல்லது தமது கணவன்மார் களின் தந்தையர், அல்லது தமது ஆண் மக்கள், அல்லது தமது கணவன்மார்களின் ஆண் மக்கள், அல்லது தமது சகோதரர்கள், அல்லது தமது சகோதரர்களின் ஆண்மக்கள், அல்லது தமது சகோதரிகளின் ஆண்மக்கள், அல்லது தமது பெண்கள், அல்லது தமது அடிமைகள், அல்லது பெண்கள் மீது நாட்டம் இல்லாத (அவர்களை) அண்டி வாழும் (வயோதிப) ஆண்கள், அல்லது பெண்களின் மறைவிடங்கள் பற்றி விளங்கிக் கொள்ளாத சிறுவர்கள் ஆகியோரைத் தவிர ஏனையவர்களிடம் வெளிப்படுத்த வேண்டாம். தாம் மறைத்திருக்கும் தமது அலங்காரம் அறியப்படுவதற்காக தமது கால்களால் தட்டவும் வேண்டாம். நம்பிக்கையாளர்களே! நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு நீங்கள் அனைவரும் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருங்கள்"

(24:31)

ஒரு பெண் அந்நிய ஆணை இச்சையோடு பார்ப்பதும் இச்சையின்றி பார்ப்பதும் கூடாது என்றிருக்கும் போது பெண்கள் எப்படி சினிமாக்கள், நாடகங்களைப் பார்க்கலாம்.? அதில் தோன்றக் கூடிய ஆண்களை எப்படி ரசிக்கலாம்? அபாயா அணிந்த நீங்கள் அந்நிய ஆண்கள் பார்க்கக் கூடாது என்பதற்காக பேஸ் கவர் பண்ணி, பர்தா போட்டு வெளியில் செல்லக் கூடிய நீங்கள் இப்படிப் பார்க்கலாமா? ஒழுக்கமுள்ள ஒரு இஸ்லாமியப் பெண்ணுக்கு இது தகுமா? சிந்தியுங்கள்!!

## 03. நேரங்கள் வீணடிக்கப்படல்:

இன்று பெரும்பாலான முஸ்லிம்கள் தொடர் நாடகங்களைப் பார்ப்பதிலும், அசிங்கமான சினிமாப் படங்களைப் பார்ப்பதிலும், மோசமான பாடல்களைக் கேட்பதிலும் தங்களது நேரங்களைச் செலவழித்துக் கொண்டிருக்கின்றனர்.

**"நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். 'மனிதர்களில் அதிகமானோர் இரு அருட்கொடை களில் பொடுபோக்காக இருக்கின்றனர். அவை ஆரோக்கியம், ஓய்வு (என்பனவாகும்)"** (புஹாரி)

நாளை மறுமை நாளிலே உனது ஓய்வு நேரத்தை எவ்வாறு கழித்தாய் என்று அல்லாஹ் கேட்கும் போது, 'நான் சினிமாப் பார்ப்பதிலும், பாடல்களைக் கேட்பதிலும், தொடர் நாடகங்களைப் பார்ப்பதிலும் செலவழித்தேன்' என்று சொல்லப் போகின்றீர்களா?

**"பின்னர், அந்நாளில் அருட்கொடைகள் பற்றி நிச்சயமாக நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்."** (102:08)

இவ்வசனத்தில் அல்லாஹ் அவன் அளித்த அருட்கொடையான நேரத்தைப் பற்றிக் கேட்பான். எனவே, நேரத்தை வீணடிக்கக் கூடிய தொலைக்காட்சிப் பாவனை ஹராமாகும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## 04. அந்நிய கலாச்சாரங்களைப் பின்பற்றுதல்:

குறிப்பாக இன்று இஸ்லாமிய இளசுகள் சினிமாக்களில் தோன்றக்கூடிய நடிக, நடிகைகள் எப்படி முடிகளை அலங்கரித்திருக் கின்றார்களோ அது போன்று அலங்கரிப்பது, அவர்கள் ஆடைகள் அணியும் Style களைப் பார்த்து அது போன்று அணிவது, நடை, உடை, பாவனை என்று அனைத்து அம்சங்களிலும் ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசமின்றி அனைவரும் பின்பற்றக் கூடிய ஒரு நிலையைப் பார்க்கின்றோம்.

**"நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்களில்) யார் இன்னொரு சமுதாயத்துக்கு ஒப்பாகின்றாரோ அவர் அவர்களைச் சார்ந்தவரே"**

(அபூதாவுத், அஹ்மத்)

நாம் முஸ்லிம்களாக இருந்தாலும் சினிமாவிலே தோன்றக் கூடிய நடிகர், நடிகைகளைப் போன்று அவர்களின் கலாசாரங்களை பின்பற்றினால் நிச்சயமாக அவர்களோடுதான் நாம் எழுப்பப்படும் நிலை உண்டாகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோல் காதல் விவகாரங்கள், மது, போதைப் பொருள் பாவனைகள், கொலை, கொள்ளை போன்ற அனைத்து சீர்கேடுகளும் சினிமாக்கள், தொடர் நாடகங்களிலிருந்து எம் சமூகம் கற்றுக் கொண்ட கலாசாரங்கள் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## 05. குறிப்பிட்ட நேரங்களில் தொழ வேண்டிய தொழுகைகள் பாழாக்கப்படுதல்:

முஸ்லிம்களில் அநேகமானவர்கள் சினிமா, தொடர் நாடகங்களில் மூழ்கியிருக்கும் நேரத்தில் தொழுகைகளுக்கான அதான் ஒலிக்கப்பட்டாலும் தொலைக்காட்சியில் செல்லக் கூடிய நிகழ்ச்சியில் ஆர்வம் அதிகமாக இருப்பதனால் தாமதித்துத் தொழுவோமே அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுபெற்றதும் தொழுவோமே என்று எண்ணி தொழுகைகளைப் பாழாக்குவதைப் பார்க்கின்றோம்.

அன்பார்ந்த பெற்றோர்களே! வாலிபர்களே! உங்களுக்கு அல்லாஹ்வை விட இத்தொலைக்காட்சி தானா முக்கியம்? குறிப்பிட்ட நேரத்தில் தொழ வேண்டிய தொழுகைகளை விட சினிமாக்களும் தொடர் நாடகங்களும் தானா முக்கியம்? சற்று சிந்தனை செய்து பாருங்கள்!
அல்லாஹ் கூறுகின்றான்.:

**"தமது தொழுகையில் பராமுகமாக இருக்கும் தொழுகையாளிகளுக்குக் கேடுதான்!"** *(107:4-5)*

**"நீங்கள் தொழுகையை நிறைவு செய்து விட்டால் நின்றவர்களாகவும், அமர்ந்த வர்களாகவும், உங்களின் விலாப்புறங்களின் மீது (சாய்ந்தவர்களாகவு)ம் அல்லாஹ்வை நினைவு கூருங்கள். நீங்கள் அச்சம் தீர்ந்த வர்களாகி விட்டால் தொழுகையை (முறைப்படி) நிலைநாட்டுங்கள். நிச்சயமாக தொழுகை நம்பிக்கையாளர்கள் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கின்றது."** *(4:103)*

மேற்படி வசனங்களிலே அல்லாஹ் தொழுகையை விட்டும் பொடுபோக்காக இருக்கக் கூடாது. குறித்த நேரத்திலே தொழுகைகளை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிடுகின்றான். இவ்வாறு அல்லாஹ் கூறியிருக்க, நீங்கள் சினிமாவிலும் தொடர் நாடகங்களிலும் மூழ்கிக் கிடந்தால் இறைவனை நீங்கள் புறக்கணிப்பதாக அமைந்துவிடும். எனவே, அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்.

## 06. Music உடன் கலந்த பாடல்களைச் செவிமடுத்தல்:

Music உடன் கலந்த பாடல்களைச் செவிமடுப்பதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இன்று எமது முஸ்லிம் சமூகத்தின் வீடுகளில் தொலைக்காட்சி, வானொலி, MP3 இது போன்றவைகளில் கேவலமான பாடல்களை பாட விடுவதைக் காணலாம்.

தொலைக்காட்சியிலே கேவலமான பாடல்களைக் கேட்பதோடு, அதிலே அரைகுறை ஆடைகளோடு ஆண், பெண் என்ற வித்தியாசம் இன்றி ஆடக்கூடிய காட்சிகளை பெற்றோர், பிள்ளைகள் என்ற வேறுபாடு இல்லாமல், வெட்கமில்லாமல் கண்டுகழிக்கக் கூடிய நிலையைக் காண்கின்றோம். இதைப் பார்த்த பிள்ளைகள் அதுபோன்று பாடல் பாடி, நடமாடுவதை பெற்றோர்கள் வரவேற்பதையும் காண்கிறோம்.

பெற்றோர்களே! ஒழுக்கத்தோடு வளர்க்க வேண்டிய பிள்ளைகளை ஒழுக்கம் கெட்டவர்களாக வளர்த்தெடுத்து, மோசமானவர்களாக ஏன் மாற்றுகின்றீர்கள்? பிள்ளைகள் சீரழிவதற்கான காரணங்களில் ஒன்றான தொலைக்காட்சிகளை ஏன் அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கின்றீர்கள்? சிந்தியுங்கள்!

அல் குர் ஆனிய வசனங்கள் ஓதப்படுவதைக் கேட்க விருப்பமில்லையா? உங்களுக்கு அல்லாஹ்வின் வார்த்தைகளை விட இனிமையானதாக மோசமான, விபச்சாரத்தைத் தூண்டும் Music உடன் கலந்த பாடல்கள் மாறிவிட்டனவா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

## 07. மரணத்தின் பிறகும் பாவங்களைச் சம்பாதித்தல்:

எவர் மோசமான ஒரு செயலைக் காண்பித்துவிட்டு மரணிக்கின்றாரோ அவருக்கும் அந்தப் பாவம் கிடைப்பது போன்று இவரால் தூண்டப்பட்டவர்கள் அந்தப் பாவத்தை செய்யும் போதெல்லாம் மரணித்த அந்த மனிதருக்கும் அதற்கான கூலி கிடைத்துக் கொண்டேயிருக்கும் என்ற கருத்தில் ஏராளமான ஹதீஸ்கள் உள்ளன.

நாம் மரணித்து விட்டால் நமக்கு நன்மைகள் வந்து குவிய வேண்டும் என்றுதான் ஒவ்வொரு மனிதனும் எண்ண வேண்டும். அதற்கு மாற்றமாக உங்கள் பிள்ளைகளுக்கு அல்லது குடும்பத்தினருக்கு சினிமா, தொடர் நாடகம் போன்றவைகளைக் காண்பிக்கக் கூடிய ஊடகமான தொலைக்காட்சி போன்றவைகளை நீங்கள் வாங்கிக் கொடுத்து, அதன் மூலம் அவர்கள் மோசமான காட்சிகளைப் பார்த்தால் அவர்களுக்கு எப்படி பாவம் கிடைக்குமோ அது போன்று உங்களுக்கும் கிடைக்கும். காரணம் அவர்கள் தப்பு செய்வதற்கு நீங்கள் காரணமாக இருந்தீர்கள். அவர்கள் சீரழிந்து போவதற்குத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கிக் கொடுத்தீர்கள்.

எனவே இது விஷயத்தில் குடும்பத் தலைவர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

## 08. அல்லாஹ்வை ஞாபகப் படுத்தாதிருத்தல்:

**"நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் ஒவ்வொரு நாள் இரவினதும் இறுதிப் பகுதியில் இவ்வுலக வானிற்கு இறங்கி, 'என்னை யார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கின்றாரோ அவருக்கு நான் பதிலளிப்பேன், என்னிடம் யார் கேட்கின்றாரோ அவருக்கு நான் பதிலளிப்பேன். என்னிடம் யார் மன்னிப்புக் கேட்கின்றாரோ அவருக்கு நான் மன்னிப்பளிப்பேன்' என்று கூறுவான்." (புஹாரி, முஸ்லிம்)

இன்று அநேகமானவர்கள் இஷாவுக்குப் பிறகு உள்ள நேரத்தில் சினிமா படத்தை போட்டு சுபஹுடைய நேரம் வரும்வரை அந்த சினிமாவிலே மூழ்கியிருக்கக் கூடிய நிலமையைப் பார்க்கின்றோம். இதன் விளைவு என்ன?

"அடியான் என்னை அழைத்தால் அவனுக்குப் பதிலளிப்பேன்' என்று அல்லாஹ் கூறுகின்றான். இன்று இவர்கள் படைத்தவனை அழைக்கின்றார்களா? அல்லது நடிக, நடிகைகளை அழைக்கின்றார்களா? சிந்தியுங்கள்!.

"என்னிடம் அடியான் கேட்டால் அவனுக்கு நான் கொடுப்பேன்' என்று அல்லாஹ் கூறுகின்றான். அவன் சினிமாவில் எதைக் கேட்கின்றான்? நடிகைகளின் கவர்ச்சியிலே மூழ்கி, நடிகர்களின் Style ஐ வேண்டுகிறானா? விபச்சாரத்தை வேண்டு கின்றானா? இல்லை. இல்லை இவன் கேட்பது பயங்கரமான நரகப் படு குழியைத்தான். என்பதில் சந்தேகமில்லை.

"செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டால் அவனை நான் மன்னிப்பேன்" என்று அல்லாஹ் கூறும்போது இவன் என்ன சொல்கின்றான் 'உன்னுடைய மன்னிப்பு எனக்குத் தேவையில்லை எனக்கு இந்த சினிமாவே போதும்' என்ற இறுமாப்புடன் அவனது செயற்பாடுகளை அவன் அமைத்துக் கொள்கின்றான்.

சினிமா பார்த்த அலுப்பினால் சுபஹுடைய நேரம் வந்தும் உறங்கி விடுகின்றான். தொலைக்காட்சி பார்த்ததனால் அம்மனிதன் அல்லாஹ்வின் விரோதியாக, நரகின் சொந்தக்காரனாக மாறிவிடுவதோடு, சுபஹ் தொழாமல் அல்லாஹ்வின் விரோதியான ஷைத்தானோடு அவனுடைய வாழ்நாளைக் கழிக்கின்றான். சிந்தியுங்கள் வீட்டில் ஒரு தொலைக்காட்சி தேவைதானா?

## 09. மோசமான பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொள்ளல்:

**களவைக் கற்றுக் கொள்ளல்:-**

இன்று நடைபெறக்கூடிய சமூக விரோதச் செயல்களில் அநேகமானவற்றை சினிமாக்கள் சமூகத்துக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஒரு பிள்ளை வளர்கின்ற போது அப்பிள்ளைக்குத் தேவையான அறிவை பெற்றோர்கள் வழங்குகின்றனர். அதேபோல் இந்தப் பிள்ளைக்குத் திருடும் பயிற்சியை யார் வழங்கியது. சினிமாக்கள் தான் வழங்குகின்றது.

எப்படி வீட்டுக்குள் குதிப்பது, அலுமாரிகளை எப்படி உடைப்பது, பொலிஸிடம் மாட்டிக் கொள்ளாதிருக்க என்ன செய்வது போன்ற எல்லா அம்சங்களையும் சினிமாக்கள் சொல்லிக் கொடுக்கின்றன. பெற்றோர்களே நீங்களும் எனது பிள்ளை நன்றாகக் கற்றுக் கொள்ளட்டும் என்று விட்டு வைக்கின்றீர்களே? திருடனை உருவாக்கும் பெற்றோர்களா நீங்கள்? "நான் பெற்ற பிள்ளை ஒரு திருடன்" என்று சொல்வதற்கு உங்களுக்கு வெட்கமில்லையா? இது எவ்வளவு கேவலம்.

**கொலை செய்வது எவ்வாறு என்பதைக் கற்றுக் கொள்ளல்:-**

இன்று கொலைகள் அதிகரித்துக் காணப்படும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இச்சந்தர்ப்பத்தில் அண்மைக் காலங்களில் நடந்த மிகக் கொடூரமான கொலைச் சம்பவங்கள் எமக்கு ஞாபகமிருக்கட்டும்.

தன் காதலுக்காக பெற்றோர்களைக் கண்டம்துண்டமாக வெட்டிக் கொலை செய்த காட்சிகள், தாம் பெற்ற பிள்ளையோடு விபச்சாரம் புரிந்து அவர்களைக் கொலை செய்த காட்சிகள் இப்படி ஏராளம் ஏராளம்.

இந்த சினிமா பெரியவர்களோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. பாடசாலையில் கற்கக் கூடிய மாணவ சமுதாயத்தையும் கொலைகாரர்களாக மாற்றிக் கொண்டிருக் கின்றது. அண்மையில் நடந்த சம்பவங்கள் நமக்குப் படிப்பினையாக இருக்கட்டும்.

இதற்கான வழிகாட்டல் யார்? சினிமாக்கள்தான். கொலை செய்யும் விதம், தப்பிக்கும் விதம் என்பனவற்றைக் கற்றுக் கொடுத்தது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்தான். நல்ல உள்ளங்களில் மோசமான சிந்தனைகளை விதைத்தது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்தான். இப்போது சொல்லுங்கள் கொலை செய்யத் தூண்டும் தொலைக் காட்சிகள் உங்கள் வீடுகளுக்குத் தேவைதானா?

## 10. போதைப் பொருள் பாவனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான விடயங்களைக் கற்றுக் கொள்ளல்:

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பல மது அருந்தும் முறைகள், (Style) ஏனைய போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் விதம், மது தயாரிக்கும் முறை போன்ற அனைத்து அம்சங்களையும் கற்றுக் கொடுக்கின்றன.

இப்படி கீழ்த்தரமான விடயங்களைக் கற்றுக் கொடுக்கும் தொலைக்காட்சி உங்கள் வீடுகளுக்குத் தேவைதானா?

**11. ஈமானில் பலவீனம்:**

எங்களுடைய வீடுகளிலேயே தொலைக்காட்சி இல்லையென்றால் பக்கத்து வீடுகளுக்குச் சென்று அல்லது உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று எமது பிள்ளைகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பார்கள் என்று ஒரு காரணத்தைக் கூறிச் சிலர் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுப்பதைக் காணலாம்.

அன்புள்ள பெற்றோர்களே! உங்களுடைய பிள்ளைகளுக்கு ஒழுங்கான தர்பியத்தைக் கொடுத்தால் அவர்களுக்குத் தொலைக்காட்சி பார்க்கக் கூட நேரமில்லாமல் தான் இருக்கும். உங்களுடைய ஈமானில் ஏற்பட்ட பலவீனத்தால் பல காரணங்களைக் கூறி சினிமா, தொடர்நாடகங்களை உங்களுடைய பிள்ளைகள் பார்ப்பதற்கு வழிசெய்து கொடுக்கின்றீர்கள்.

அற்ப உலக இன்பத்திற்காக வேண்டி உங்களுடைய ஈமானைப் பறிகொடுத்து விடாதீர்கள். அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்.

**12. மறுமை நாளில் கைசேதத்தையும் நஷ்டத்தையும் பெற்றுக் கொள்ளல்:**

**"மேலும், பதிவேடு (அவர்கள் முன்)வைக்கப்படும். அதில் உள்ளவற்றினால் அஞ்சியவர்களாக குற்றவாளிகளை நீர் காண்பீர். இன்னும் அவர்கள், 'எமக்கு ஏற்பட்ட கேடே! இப்பதிவேட்டிற்கு என்ன ஆனது! (எங்கள் செயல்களில்) சிறியதையோ, பெரியதையோ அது பதிவு செய்யாமல் விட்டு வைக்கவில்லையே! என்று கூறுவர். மேலும், தாம் செய்தவற்றை தம் முன்னால் கண்டு கொள்வர். இன்னும் உமது இரட்சகன் எவருக்கும் அநியாயம் செய்யமாட்டான்."** *(18:49)*

இப்போது கூறுங்கள்! நீங்கள் பார்த்த சினிமாக்கள், தொடர் நாடகங்கள் உங்களுக்கு வெற்றியைத் தந்து விடுமா? யாரும் உதவ முடியாத நாளில் நீங்கள் ஓய்வு நேரங்களில் ஓதிய குர்ஆன் உதவும். நீங்கள் பார்த்து இன்பமடைந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி உதவப் போகின்றதா? சிந்தியுங்கள் இப்படிப்பட்ட ஒரு தொலைக்காட்சி உங்கள் வீடுகளுக்குத் தேவைதானா?

**13. கணவன், மனைவி உறவைப் பாதித்துவிடும்.**

தொலைக்காட்சியில் தன் மனைவியை விட அழகானப் பெண்ணைக் காணும் கணவன் தன் மனைவி அழகில்லையே என்ற எண்ணத்தோடு. இதுவெல்லாம் ஒரு வாழ்க்கையா என நினைத்துத் தவறான வழிகளுக்குச் செல்வதற்கும், தன் கணவனை விட வசீகரமான ஆண்களைப் பார்த்து விட்டு நாம் இவர் போன்றவர்களோடு வாழ்ந்தால் சந்தோசமாக இருக்குமே என மனைவி நினைத்துத் தவறான ஒரு பாதைக்குச் செல்வதற்கும் காரணமாக இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வழி அமைக்கின்றன.

இதன் விளைவு, கணவன் மனைவிக் கிடையே சண்டை சச்சரவுகள் என்று தொடர்ந்து விவாகரத்து வரை செல்வதைக் காணலாம். எனவே இப்படியான ஒரு தொலைக்காட்சி தேவைதானா!

## நல்ல விடயங்களுக்காகத் தொலைக்காட்சி பார்க்கலாமா?

உண்மையிலேயே தொலைக் காட்சிகளை செய்திகள், பொது விடயங்கள், இஸ்லாம் சார்ந்த அம்சங்களை பார்ப்பதற்காக வாங்கினால் வரவேற்கத்தக்கது. என்றாலும், அது நோக்கத்தை மறந்து செல்லுமாக இருந்தால் அது கூடாது ஹராம் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிச் செயற்படுவோமாக.

**இறுதியாக,**

இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட அம்சங்கள், மோசமான கலாசாரங்களைத் தூண்டக் கூடியவைகள், மறுமையில் கைசேதத்தை உண்டுபண்ணக் கூடியவைகள் நரகின் பால் இட்டுச் செல்லக் கூடியவைகள் போன்ற எல்லா விடயங்களையும் உள்ளடக்கியுள்ள சினிமா, ஆபாசப் படங்கள், தொடர் நாடகங்கள் என்பவற்றை முற்றுமுழுதாகத் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே, அல்லாஹ்வுக்கு அடிபணிந்த அடியார்களாக, நல்ல மனிதர்களாக வாழ்ந்து மரணிக்க எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவருக்கும் அருள் புரிவானாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் சேவை

# ஒரு சமூக நலன்

‡மௌலவியா ஹிமாயா வஜ்ஹுத்தீன் (இஸ்லாஹி)‡

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவசியமானது கல்வி. அந்தக் கல்வியைத் தேடிப் பெற்றுக் கொள்ளும்போதுதான் ஒருவன் உண்மையான மனிதத் தன்மையுடையவனாக சிறந்து விளங்க முடியும். அவ்வாறு சிறந்து விளங்குவதற்கு அடிப்படைத் தூண்டுதலாக இருப்பவர்களே ஆசான்கள்.

கல்வியைக் கற்றுக் கொடுப்பவர்கள் தான் உலகிலேயே மேன்மக்கள், சிறந்தவர்கள் ஆவர். நன்மையான கருத்தின்பால் வழிகாட்டுபவருக்கு வழிகாட்டப்பட்டவர் அதனை நடைமுறைப்படுத்தும் காலமெல்லாம் வழிகாட்டியவருக்கு நன்மை கிடைத்துக் கொண்டே இருக்கும். மற்றவர்களுக்கு எங்களின் மூலம் அல்லாஹ் நேர்வழி காட்டுவது இந்த உலகில் நாமடையும் மகத்தான சிறப்பாகும். அவர்கள் செய்யும் ஒவ்வொரு அமலுக்கும் எமக்கு நன்மை கிடைத்துக் கொண்டே இருக்கும்.

**"யார் ஒரு நல்ல விடயத்தை அறிவித்துக் கொடுக்கின்றானோ அவனுக்கு அதைச் செய்பவனுக்குக் கிடைக்கும் கூலியைப் போன்ற கூலி கிடைக்கும்."** (முஸ்லிம்)

ஆசிரியர் சேவை புரியும் ஒவ்வொருவரும் தமது தொழிலை ஒரு சமூக நலனாக சேவையாகவும் நினைத்து உழைக்க வேண்டும். மாதம் முடிந்தால் சம்பளம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அமைந்துவிடக் கூடாது. ஏனெனில் ஒரு சமூகத்தை உருவாக்கும் பொறுப்பைச் சுமந்தவர்களாக இருப்பவர்கள் ஆசான்களே! "அலிப்" என்ற எழுத்தைக் கற்றுக் கொடுப்பவரும், "அ" என்ற எழுத்தைக் கற்றுக் கொடுப்பவரும் ஆசான்களே! என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் சமூகத்துக்குத் தேவையான புத்திஜீவிகள், கல்விமான்கள், அரசியல் தலைவர்கள், விஞ்ஞானிகள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள்..... போன்ற சகலரையும் ஒவ்வொரு அமைப்பிற்கும் ஏற்றாற் போல் கல்வியறிவை வழங்கி சமூகத்திற்கான அறுவடைகளாக அவர்களை அனுப்பி வைப்பவர்கள் ஆசான்களே!

இன்றைய சிறார்களே நாளைய சமூகத்தின் தலைவர்களாகத் திகழ்பவர்கள். இவ்வாறு நாளைய சமூகத்தின் தலைவர்களை உருவாக்கும் பொறுப்பைச் சுமந்தவர்கள் ஆசான்களே! ஆசிரியர்கள் கற்பித்தலில் முதன்மை வழிகாட்டிகளாகத் திகழ்வதோடு முன்மாதிரியாகவும், நல்ல பண்புகளோடும் இருக்க வேண்டும். ஏனெனில் கல்வியைக் கற்றுக் கொடுப்பவர் ஆசானாக இருந்தால் அதனைப் பெற்றுக் கொள்பவர் மாணவராக இருக்கிறார். எனவேதான் ஆசான்களிடமிருந்து மாணவர்கள் வெறுமனே கல்வியை மட்டும் பெறவில்லை. அவர்களின் அழகிய பண்புகள், நற்குணங்கள், முன்மாதிரி போன்ற பல விடயங்களை அவர்களிடமிருந்து மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

நபி(ஸல்) அவர்கள் முன்மாதிரிமிக்க ஆசான் என்ற வகையில் ஸஹாபாக்களுக்கு முன்னிலையில் மிகக் கவனமாக நடந்து கொண்டார்கள். ஏனெனில், நபி(ஸல்) அவர்களின் செயல்களை அப்படியே பின்பற்றி நடப்பவர்களாக இருந்தார்கள் ஸஹாபாக்கள். நபி(ஸல்) அவர்களும் ஸஹாபாக்களுடன் மிக நெருக்கமாகவும், பாகுபாடின்றியும், வயது வித்தியாசமின்றியும், தோழமையோடும், நட்புறவுடனும் நடந்து கொண்டார்கள். மேலும் நபி(ஸல்) அவர்கள் பேசினால் ஒரு விடயத்தை மூன்று முறை பேசுவார்கள். ஏனெனில் மக்கள் அதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வார்த்தைகளாகவும் பேசுபவர்களாக இருந்தார்கள்.

**அனஸ்(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி(ஸல்) அவர்கள் ஒரு வார்த்தையைப் பேசினால் அதை விளங்கிக் கொள்வதற்காக மூன்று தடவைகள் திரும்பத் திரும்பக் கூறுவார்கள். அவர்கள் ஒரு கூட்டத்தினரிடம் வந்து அவர்களுக்கு ஸலாம் கூறினால் மூன்று தடவைகள் அவர்களுக்கு ஸலாம் கூறுவார்கள்."** (புஹாரி)

**ஆயிஷா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி(ஸல்) அவர்களின் பேச்சு, கேட்பவர்கள் அனைவரும் விளங்கும் முறையில் தெளிவானதாக இருந்தது."** (அபூதாவுத்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவர் தொடர்ந்து அறிவைத் தேடிக் கொண்டிருக்க வேண்டும். இதனால்தான் கல்வித் தேடல் பர்ளாக ஆக்கப்பட்டுள்ளது. தேடல் என்பது கல்வியின் அடிப்படை விடயமாகும். அத்தோடு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நெருங்கிய உறவு இருக்க வேண்டும். மாணவர்கள் மீது உண்மையான அன்பைப் பரிமாறக் கூடியவர்களாகவும் ஆசிரியர்கள் இருக்க வேண்டும். நபி(ஸல்) அவர்களும் அவ்வாறுதான் இருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் ஸஹாபாக்களுடன் மிக நெருக்கமான அன்பு வைத்திருந்தார்கள் என்பதை அவர்களின் சொல், செயல்கள் மூலமாக நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது. மாணவர்களின் உளக்கிடக்கையை நன்கு அறிந்து நடப்பவர் தான் உண்மையான ஆசிரியர்கள். அன்பால் உள்ளங்களை (மனிதர்களை) சம்பாதித்துக் கொள்ள முடியும்.

பாடப் போதனையில் ஈடுபடும் ஆசிரியர் ஒருவர் வாழ்த்துச் செய்திகளையும், சந்தோசமான செய்திகளையும் மாணவர் களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒரு விடயத்தைக் கற்பிக்கும் போது மாணவர்களின் வயது, ஆர்வம் எல்லாவற்றையும் கவனத்திற் கொண்டிருப்ப தோடு கற்பித்தலுக்கு உற்படுத்தப்படுபவர் களின் தரங்களையும், கருத்துக்களையும் கவனத்திற் கொண்டு பாட போதனை செய்ய வேண்டும். ஏனெனில் மாணவர்களின் சூழலை அறிந்து கற்பிக்கும் போது மாணவர்கள் கற்பதில் ஆர்வமாக இருப்பார்கள். அதுதான் கற்பித்தலில் வெற்றியளிக்கும். அத்தோடு ஆசிரியர் களுடைய நடத்தையும் மாணவர் களைக் கவர வேண்டும். அவர்களுடைய உடை, நடை, பாவனைகள் பேச்சுக்கள், செயற்பாடுகள் இவைகளை மாணவர்கள் கவனிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். இதன் மூலமாக கவரப்படும் போது அந்த ஆசிரியர் மீது மதிப்பும், மரியாதையும், அன்பும் ஏற்பட்டு கற்பிப்பதிலும் ஆர்வம் காட்டுவார்கள். இவ்வாறு கவரப்படும் ஆசிரியர் மாணவர்களை ஏசும் போது, அறிவுரைகள் வழங்கும் போது அவற்றை ஒரு போதும் உதாசீனம் செய்ய மாட்டார்கள். அவற்றை நன்கு அவதானித்து, செவிமடுத்து தமது வாழ்வில் செயற் படுத்துபவர்களாகவும் மாறிவிடுவவார்கள்.

ஆசிரியர் மாணவர்களின் விருப்பு, வெறுப்பு, ஆர்வம் என்பவற்றை அறிந்து கற்றுக் கொடுக்க வேண்டும். வகுப்பறையில் மாணவர்களுடன் சுமூகமாக நடந்து கொள்வதோடு மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கி மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். கற்பித்தல் முறையில் கவர்ச்சியை ஏற்படுத்துவதோடு வகுப்பறைகளையும் கவர்ச்சியாக வைத்திருக்கு மாறு மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். சில மாணவர்கள் வகுப்பறையில் ஏனைய மாணவர்களை விட்டும் ஒதுங்கி தனிமையில் இருப்பார்கள். அவர்களை அவதானித்து இனங்கண்டு அவர்களின் தனிமைக்கான காரணங்களை இனங்கண்டு, பயத்தைப் போக்கி ஏனைய மாணவர்களுடன் உறவாடி சுமூகமாகப் பழக வைக்க வேண்டும். அவர்களையும் மாணவச் சமூகத்துக்குள் கொண்டு வர வேண்டிய முழுப் பொறுப்பும் ஆசிரியர்களையே சாரும்.

பாடபோதனையின் போது சில உத்திகளைக் கையாள்வது சிறந்தது. உதாரணமாக,

- தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லல். அதாவது, தெரிந்து விடயம் ஒன்றைக் கூறி தெரியாத விடயத்தைக் கற்பித்தல்.
- எளிமையிலிருந்து கஷ்டமானதுக்குச் செல்லல். ஆரம்பத்திலேயே சிக்கலானதைக் கற்பிக்காது எளிமையைக் கூறி சிக்கலானதைக் கற்றுக் கொடுத்தல்.
- முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லுதல். அதாவது முழுமையான ஒரு விடயத்தைக் காட்டிய பின்னர் பகுதிகளைக் காட்டுதல் வேண்டும்.
- பொதுவானதிலிருந்து சிறப்பானதுக்குச் செல்லுதல். சிறப்பானவைகளிலிருந்து பொதுவானவற்றுக்குச் செல்லல்.
- பிள்ளைகளுக்கு விளங்கும் முறைகளைக் யையாளுதல்.
- விளையாட்டினூடாக கற்பித்தல் முறையை ஏற்படுத்துதல்.
- பயிற்சிகள் வழங்குதல், பரிசோதனைகள் செய்து பார்த்தல்.
- ஆசிரியர்கள் செய்து காட்டி மாணவர்களுக்கு ஆர்வமூட்டுதல்.
- ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துரை யாடுதல் மூலமாகக் கற்றல், கற்பித்தல், கேள்வி கேட்டல், பதிலளித்தல், குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடல் செய்தல். அதாவது ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமான கலந்துரையாடல் போன்ற கற்பித்தல் நுட்பங்களை கையாள்வது சிறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி(ஸல்) அவர்களும் இவ்வாறான திறன்களைக் கையாண்டு ஸஹாபாக்களுக்குக் கற்றுக் கொடுத்திருப்பதை பின்வரும் ஹதீஸ் எமக்கு உணர்த்துகின்றது.

**"மரங்களில் இப்படியும் ஒருவகை மரமுண்டு. அதன் இலை உதிர்வதில்லை. அது முஸ்லிம்களுக்கு உவமையாகும். அது என்ன மரம்? என்பதை எனக்கு அறிவியுங்கள் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கேட்ட போது மக்களின் எண்ணங்கள் நாட்டு மரத்தின் பால் திரும்பியது. நான் அதைப் பேரீச்சை மரம்தான் என்று கூற வெட்கப்பட்டு சொல்லாமல் இருந்தேன். பின்னர் இறைத்தூதர் அவர்களே! அது என்ன மரம் என்று எங்களுக்கு அறிவியுங்கள் எனத் தோழர்கள் கேட்டதற்கு, 'பேரீச்சை மரம்' என்றார்கள் என இப்னு உமர்(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்."**

(புஹாரி)

**"நபி(ஸல்) அவர்களுடன் நாங்கள் பள்ளிவாசலில் அமர்ந்திருந்த போது ஒட்டகத்தின் மீது அமர்ந்தவராக ஒருவர் பள்ளிக்குள் நுழைந்தார். பள்ளியினுள்ளே ஒட்டகத்தைப் படுக்க வைத்துவிட்டு பின்னர் அதனைக் கட்டினார். பின்பு அங்கு அமர்ந்தவர்களிடம் 'உங்களில் முஹம்மத் அவர்கள் யார்?' என்று கேட்டார். நபி(ஸல்) அவர்களோ மக்களிடையே சாய்ந்து அமர்ந்திருந்தார்கள். 'இதோ சாய்ந்து அமர்ந்திருக்கும் இந்த வெண்மை மனிதர்தாம் முஹம்மத்(ஸல்) அவர்கள் என்று நாங்கள் கூறினோம். உடனே அம்மனிதர் நபி(ஸல்) அவர்களை 'அப்துல் முத்தலிபின் பேரரே!' என்றழைத்தார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'என்ன விஷயம்' என்று கேட்டார்கள். அப்போது அம்மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் 'நான் உங்களிடம் சில கேள்விகள் கேட்கப் போகின்றேன். சில கடினமான கேள்விகளையும் கேட்கப் போகின்றேன். அதற்காக நீங்கள் என் பெயரில் வருத்தப்படக் கூடாது என்றார். அதற்கவர்கள் 'நீர் விரும்பியதைக் கேளும்' என்றார்கள். உடனே அம்மனிதர் உம்முடையதும் உமக்கு முன்னிருந்தோரதும் இரட்சகன் மீது ஆணையாகக் கேட்கிறேன். அல்லாஹ்தான் உம்மை மனித இனம் முழுவதற்கும் தூதராக அனுப்பினானா? என்றார். அதற்கவர்கள், 'அல்லாஹ் சாட்சியாக ஆம்!' என்றார்கள் அடுத்து அவர் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு உம்மிடம் கேட்கிறேன். 'அல்லாஹ் தான் இரவிலும் பகலிலுமாக நாங்கள் ஐந்து நேரத் தொழுகையைத் தொழுதுவர வேண்டுமென உமக்குக் கட்டளை இட்டிருக்கின்றானா?' என்றார். அதற்கவர்கள் 'ஆம்! அல்லாஹ் சாட்சியாக' என்றார்கள். அடுத்து அவர், 'இறைவன் மீது ஆணையாக உம்மிடம் கேட்கிறேன் அல்லாஹ்தான் ஒவ்வொரு ஆண்டிலும் குறிப்பிட்ட இந்த மாதத்தில் நாங்கள் நோன்பு நோற்க வேண்டும் என்று உமக்குக் கட்டளையிட்டிருக்கின்றானா?' என்றார். அதற்கவர்கள் 'ஆம், அல்லாஹ் சாட்சியாக' என்றார்கள். அடுத்து அவர் 'இறைவன் மீது ஆணையாக உம்மிடம் கேட்கிறேன் எங்களில் வசதி படைத்தவர்களிலிருந்து இந்த (ஸகாத் எனும்) தர்மத்தைப் பெற்று எங்களில் வறியவர்களுக்கு நீர் அதனை வினியோகிக்க வேண்டும் என்று உமக்கு கட்டளையிட்டிருக்கின்றானா?' அதற்கு நபியவர்கள். 'ஆம், இறைவன் சாட்சியாக' என்றார்கள். உடனே அம்மனிதர் 'நீங்கள் இறைவனிடமிருந்து கொண்டு வந்தவற்றை நான் ஏற்கிறேன் என்று கூறிவிட்டு 'நான் என்னுடைய கூட்டத்தாரில் இங்கு வராமல் இருப்பவர்களின் தூதுவனாவேன். நான்தான் ளிமாம் இப்னு ஸஃலபா, அதாவது பனூ ஸஃது இப்து பக்ர் சகோதரன்' என்று கூறினார். என அனஸ் இப்னு மாலிக்(ரழி) அவர்கள் அறிவித்தார்கள்."** (புஹாரி: 63)

இவ்வாறு நபியவர்கள் களைப்படையும் அளவுக்கு கேள்விகள் கேட்டு அறிவைப் பெற்றுக் கொள்பவர்களாக ஸஹாபாக்கள் இருந்தார்கள் என்ற உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு ஸஹாபாக்கள் கேள்வி கேட்கும் போது நபி(ஸல்) அவர்கள் முகம் சுளிக்காமல், ஏசாமல், சலிப்படையாமல் பதில் கூறுபவர்களாக இருந்தார்கள் என்பதை இந்த ஹதீஸின் மூலமாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள், கற்பவர்களுக்கு தன்நம்பிக்கையை வளர்க்க வேண்டும். மாணவர்களின் திறமைகள், ஆற்றல்களை இனங்கண்டு அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிப்பு வழங்க வேண்டும். அதே வேளை அவர்கள் நல்லது செய்தால் அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்த வேண்டும். மாணவர்கள் தவறிழைத்தால் பரிவு காட்டி நடந்து கொள்ள வேண்டும். அவர்களது தவறுகளை பலர் முன்னிலையில் சுட்டிக்காட்டி உள்ளம் பாதிக்கப்படும் அளவுக்கு நடந்து கொள்ளக் கூடாது. சிலர் நிதானமிழந்தவர்களாய் பேய், எருமை மாடு, மக்கு, மரமண்டை, அறிவில்லாதவன், மண்டையில் களிமண்தான் உள்ளதா? உனக்கு?... என அவசரப்பட்டு ஆவேசமாக மாணவர்களுக்குப் பொருத்தம் இல்லாத வார்த்தைகளை அள்ளி வீசி திட்டித் தீர்த்துவிடுவார்கள். இவ்வாறான தவறுகளை ஆசான்கள் ஒரு போதும் செய்து விடக் கூடாது.

சிலர் மாணவர்கள் விடும் சில தவறுகளுக்கு அதாவது சின்ன அற்பமான விடயங்களுக்காக அம் மாணவனின் பெற்றோர்களை சுட்டிக்காட்டி அவர்களை ஏசுவார்கள். மாணவர்களின் உள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்படும் அளவுக்கு அவர்கள் தண்டிக்கப்படுதல் போன்ற பலவேறு நிலைகளைக் கூறலாம். இவ்வாறான தவறுகளை ஆசான்கள் செய்துவிடக் கூடாது. ஏனெனில் மாணவர்களானவர்கள் எல்லா வற்றையும் அறிந்த நிலையில் கற்பதற்காக வருவதில்லை. அறியாதவற்றைக் கற்புதுதான் கல்வி. அதற்காகத்தான் ஆசான்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தவறான கண்டிப்பு முறைகளினால் பாதிக்கப்படும் மாணவர்களோ கல்வியின் மீது வெறுப்புக் கொண்டு பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

நபி(ﷺ) அவர்கள் தவறுகளை நிதானமாகத் திருத்தியுள்ளார்கள். அன்பாக நடந்துள்ளார்கள் என்பதை அவர்களின் வரலாற்றிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். மாணவர்களின் தவறுகளை அறிந்து அவற்றை திருத்துவதற்கான சரியான அணுகுமுறைகளை கையாள்வது சிறந்தது.

**"முஆவியா இப்னு ஹகம்(ؓ) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ரஸூல் (ﷺ) அவர்களுடன் தொழுது கொண்டிருக்கும் போது கூட்டத்தில் ஒருவர் தும்மிவிட்டார். நான் 'யர்ஹமுகல்லாஹ்' என்று கூறினேன். மக்கள் என்னை உறுக்கிப் பார்த்தார்கள். நான் 'எனது தாயின் இழப்போ! ஏன் இவ்வாறு என்னை உறுக்கிப் பார்க்கின்றீர்கள்?' என்று கேட்டேன். அவர்கள் தமது கைகளைத் தமது தொடைகளில் அடித்து என்னை அமைதிப்படுத்தினர். இவ்வாறு என்னை அமைதிப்படுத்தியயைப் பார்த்து நான் கோபப் பட்டாலும் அமைதியாகிவிட்டேன். நபியவர்கள் தொழுது முடித்த போது, என்தாய், தந்தை அவருக்கு அர்ப்பணமாகட்டும். அவர்களை விடச் சிறந்த ஓர் ஆசிரியரை இதற்கு முன் கண்டதுமில்லை; அவர்களை விடச் சிறந்த முறையில் கற்றுக் கொடுப்பவரைப் பார்க்கவுமில்லை; அவர்கள் என்னை அதட்டவுமில்லை, ஏசவுமில்லை. மாறாக இத்தொழுகையில் மக்களுடைய பேச்சுக்களில் எதையும் பேசக் கூடாது, தஸ்பீஹ், தக்பீர், குர்ஆன் ஓதுவது போன்றவையே ஆகுமானது என்று கூறினார்கள்."** (முஸ்லிம்)

இவ்வாறு நபியவர்களின் கற்பித்தல் முறைகளை, தவறுகளை அணுகும் விதங்களை, அவற்றைத் திருத்தும் ஒழுங்கை பல ஹதீஸ்கள் மூலமாக ஆதாரமாக முன்வைக்கலாம். ஆகவே, கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுவோர் பாகுபாடு காட்டாமல் உயர்வு, தாழ்வு, ஏழை, பணம் என்ற வித்தியாசம் காட்டாமல் நீதமாக நடந்து கொள்ள வேண்டும். கற்பித்தலின் போது எல்லோருடனும் சமமாக, நீதமாக நடந்து கொள்ள வேண்டும். போட்டி நிகழ்ச்சிகள் நடக்கும் போது மிகவும் நீதியைக் கடைப்பிடிக்க வேண்டும். அது மட்டுமல்ல, கற்பித்தலில் ஈடுபடுபவர்கள் ஒவ்வொருவரும் பொறுப்பு தாரிகளே! அவர்கள் ஒவ்வொருவரும் அவர்களது பொறுப்புக்கள் பற்றி மறுமை நாளில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதை அறிந்திருக்க வேண்டும். அதனால்தான் நபியவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

**"நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளி களே! உங்கள் பொறுப்புக்குட்பட்டவை குறித்து நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்! என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்."** (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ؓ), ஆதாரம்: புஹாரி)

**"அறிவைக் கற்று பிறருக்கும் கற்பித்து அல்குர்ஆனையும் ஓதிய ஒரு மனிதன் மறுமையில் கொண்டு வரப்படுவான். அவனுக்கு வழங்கப்பட்ட அறிவு எனும் அருட்கொடையை இறைவன் நினைவு படுத்தியவுடன் அதை அவன் ஏற்றுக் கொள்வான். அப்போது 'இதை வைத்து நீ என்ன அமல் செய்தாய்?' என்று அல்லாஹ் கேட்கும் போது 'நான் அறிவைக் கற்றது, கற்பித்தது, அல்குர்ஆனை ஓதியது உனக்காகவே' என்று அவன் கூறுவான். அப்போது அல்லாஹ், 'இல்லை, நீ பொய் கூறிவிட்டாய்! நீ கல்வி கற்றது (மக்கள்) உன்னை அறிஞன் என்று கூறுவதற்காக. அது உனக்கு சொல்லப்பட்டுவிட்டது என்று கூறுவான். பின்பு அவன் முகங் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் வீசப்படுவான்' (ஹதீஸ் சுருக்கம்)"**

(முஸ்லிம், திர்மிதி)

இவ்வாறு உலக நோக்கமாக மட்டும் அமைந்து விடாது ஒரு சமூக நலனாகவும், மறுமையில் அதற்கான வெற்றியும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலும் ஆசிரியர் தொழிலை அமைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு பிள்ளையும் அதாவது, மாணவர்களும் நாளைய சமுதாயத்திற்கு தலைமை தாங்கக் கூடியவர்கள். எனவே, அவர்களை சிறந்த புத்திஜீவிகளாக, நல்லொழுக்கமுள்ளவர்களாக, நல்ல பண்பாடு உள்ளவர்களாக சமூகத்திற்கு அனுப்புவது ஒவ்வொரு ஆசானின் மீதும் கடமையும் பொறுப்புமாகும் என்பதை உணர்ந்து மறுமையில் சுவனத்தை அடையும் நோக்கில் அவர்களது சேவைகள் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனும், ஸுன்னாவும் முரண்படுமா?

தொடர் 13

# சுலைமான் நபியும் இன்ஷா அல்லாஹ்வும்

சுலைமான் நபி சம்பந்தப்பட்ட ஹதீஸை மறுக்கும் தவறான போக்கில் இருப்பவர்கள் எடுத்து வைக்கும் தப்பான வாதங்களையும் அவற்றுக்கான தக்க விளக்கங்களையும் பார்த்து வருகின்றோம்.

## 6. இப்படியும் மறதி வருமா?

ஒரு மனிதனுக்கு மறதி வருவதற்கும் ஒரு அளவு உண்டு இன்ஷா அல்லாஹ் சொல்லுங்கள் என ஒரு மலக்கு ஞாபகப் படுத்திய உடனே சுலைமான் நபி எப்படி மறந்திருப்பார்கள்? என்ற அடிப்படையில் கேள்வி எழுப்பியும் சிலர் இந்த ஹதீஸை மறுக்கின்றனர்.

**நமது விளக்கம்:**

இப்படி ஒருவர் கேள்வி கேட்டு ஹதீஸை மறுக்க முடியும் என்றால் குர்ஆன் கூறும் சம்பவங்களில் கூட இப்படிக் கேள்வி எழுப்பி அதையும் மறுக்கும் நிலை ஏற்பட்டு விடும்.

18 ஆவது அத்தியாயமான சூறா அல் கஹ்பில் ஒரு சம்பவம் இடம் பெறுகின்றது. மூஸா நபியும் அவரது பணியாளும் ஒருவரை சந்திப்பதற்காகக் கடல் ஓரமாக நடந்து செல்கின்றனர். இடையில் ஒரு இடத்தில் ஓய்வு எடுக்கின்றனர். மூஸா நபி தூங்கிவிடுகின்றார். அப்போது ஒரு அதிசயம் நடக்கின்றது. அவர்கள் சமைத்து எடுத்து வந்த மீன் உயிர் பெற்று கடலுக்குள் சுரங்கம் போன்ற ஒரு பாதையை ஏற்படுத்திக் கொண்டு சென்று விடுகின்றது.

இப்படி ஒரு அதிசயம் நடந்தால் எந்த மனிதனும் அதிர்ச்சியடைவான். இவர் மூஸா நபி எழும்பிய பின்னர் இதைக் கூறலாம் என்று இருக்கின்றார். எழும்பிய பின்னர் அதை மறந்துவிட்டார். அவர்கள் எழுந்து தொடர்ந்தும் நடக்கின்றனர். இடையில் பசி ஏற்பட்ட போது மூஸா நபி உணவைக் கேட்ட போதுதான் அவருக்கு மீன் நினைவுக்கு வருகின்றது.

**"அப்பாறையில் (ஓய்வுக்காக) நாம் ஒதுங்கியதை நீர் பார்த்தீரா? அச்சமயம் நான் மீனை மறந்து விட்டேன். அதை நான் கூறுவதை விட்டும் ஷைத்தானே எனக்கு அதை மறக்கடிக்கச் செய்து விட்டான். அது தனக்கெனக் கடலில் அதிசயமான முறையில் பாதையை அமைத்துக் கொண்டு (சென்று) விட்டது என்று (பணியாளர்) கூறினார்."** *(18:63)* என குர்ஆன் கூறுகின்றது.

இந்த ஹதீஸை மறுப்பவர்கள் இப்படியும் மறதி ஏற்படுமா? எனக் கேள்வி எழுப்புவதுபோல் இந்த சம்பவம் தொடர்பிலும் கேள்வி எழுப்ப முடியுமல்லவா? இப்படி ஒரு அதிசயம் நடந்தால் உடனே எழுப்பி சொல்லியிருப்பார் அல்லது எழும்பிய உடனேயே அதைத்தான் சொல்லியிருப்பார். இது போன்ற விடயங்களை யெல்லாம் ஒரு மனிதன் மறப்பான் என்று கூறவே முடியாது. எனவே, குர்ஆன் கூறும் இந்த சம்பவத்தை ஏற்க முடியாது என்று கூறினால் இவர்களின் பதில் என்னவாக இருக்கும்?

மூஸா நபி ஹிழ்ர் நபியிடம் கஷ்டப்பட்டு படிக்கச் செல்கின்றார்கள். கேள்வி கேட்கக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் உடன் அழைத்துச் செல்கின்றார். ஹிழ்ர் நபி, மூஸா நபி நிபந்தனையை மறந்து மூன்று கேள்விகள் கேட்டுவிடுகின்றார்கள். அத்துடன் அவர்களது உறவு முறிகின்றது. கேள்வி கேட்கக் கூடாது என்ற நிபந்தனையை மூஸா நபி படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கஷ்டப்பட்டு ஹிழ்ர் நபியைச் சென்றடைந்ததும் திரும்பத் திரும்ப மூன்று முறை மறந்திருப்பார்களா? இப்படி ஒருவருக்கு அதுவும் மூஸா நபி போன்ற ஆளுமைமிக்க ஒரு நபிக்கு மறதி வந்திருக்குமா? எனக் கேள்வி கேட்டு இந்த சம்பவத்தை மறுக்க முடியுமா?

7. சுலைமான் நபி மறதியாக இன்ஷா அல்லாஹ் சொல்லாமல் விட்டதற்குத் தண்டனை தரும் விதமாக அவர்களுக்குப் பிறக்கவிருந்த குழந்தைகளைப் பிறக்க விடாமல் ஆக்குவது இறைவனுடைய


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீதிக்கு ஏற்றதல்ல என்ற அடிப்படையில் வாதம் செய்தும் இந்த ஹதீஸ் மறுக்கப்படுகின்றது.

## நமது விளக்கம்:

ஆதம்-ஹவ்வா (அலை) இருவரையும் அல்லாஹ் படைத்து சுவர்க்கத்தில் வாழ வைத்தான். ஒரு கனியை மட்டும் சாப்பிட வேண்டாம் என்றான். அவர்கள் சாப்பிட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளையை மறந்து மீறிவிட்டார்கள் என குர்ஆன் கூறுகின்றது. ஆதம் நபி செய்த குற்றத்திற்காக நீங்கள் அனைவரும் இதிலிருந்து இறங்கிவிடுங்கள் என்று கூறியதாக குர்ஆன் கூறுகின்றது.

**"நீங்கள் அனைவரும் இதிலிருந்து இறங்கி விடுங்கள்! என்னிடமிருந்து நிச்சயமாக உங்களுக்கு நேர்வழி வரும். அப்போது என்னுடைய நேர்வழியை யார் பின்பற்றுகின்றார்களோ அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை, அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள் என்று கூறினோம்."** *(2:38)*

ஆதம் நபி மறதியாக செய்த தவறுக்காக அவர்களுடன் சேர்த்து எங்களை யெல்லம் அதாவது, முழு மனித சமூகத்தையும் அல்லாஹ் சுவனத்திலிருந்து வெளியேற்றியது அல்லாஹ்வின் நீதிக்கு ஏற்றதில்லை எனக் கூறி குர்ஆன் கூறும் இந்த சம்பவத்தையும் மறுக்கலாமா? ஆதம் நபி மறதியாச் செய்த குற்றத்திற்காக சுவனத்தில் வாழ வேண்டிய மனித இனத்தை பூமிக்கு அல்லாஹ் அனுப்பினான் என்று கூறுவது அல்லாஹ்வின் நீதிக்கு ஏற்றதல்ல. எனவே, நாம் இந்தக் குர்ஆன் கூறும் சம்பவத்தை மறுக்கிறோம் என்று கூறுபவர்கள் எப்படி தவறான வழியில் இருக்கின்றார்கள் என்று கூறுவோமோ அதே போன்ற வாதத்தை வைத்து இந்த ஹதீஸை மறுப்பவர்களும் தவறான வழியில்தான் இருக்கின்றனர் என்பதுதான் உண்மையாகும்.

8. இறைத்தூதராக இருந்தாலும் எந்த மனிதரும் அறிந்து கொள்ள முடியாத ஐந்து விடயங்கள் உள்ளன. எந்தக் கருவறையில் எத்தனை குழந்தைகள் உண்டாகும்? கருவறையில் குழந்தை உண்டாகுமா? ஆகாதா? என்பதும் அவற்றில் ஒன்றாகும்.

**"மறுமை பற்றிய அறிவு நிச்சயமாக அல்லாஹ்விடமே உள்ளது. அவனே மழையை இறக்குகின்றான். கருவறையில் உள்ளவற்றையும் அவனே நன்கறிவான். எந்தவோர் ஆன்மாவும் தான் நாளைக்கு எதைச் சம்பாதிக்கும் என்பதை அறிய மாட்டாது. மேலும், எந்தவோர் ஆன்மாவும் தான் எந்தப் பூமியில் மரணிக்கும் என்பதை அறிய மாட்டாது. நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன்; மிக நுட்பமானவன்."** *(31:34)*

நூறு மனைவிகளுக்கும் குழந்தை கிடைக்கும். அதுவும் ஆண் குழந்தைகள். அவர்கள் அனைவரும் போராடுவார்கள் என சுலைமான் நபி கூறியிருக்க முடியாது. அவர்கள் கூறியதாக நபி(ஸல்) அவர்களும் கூறியிருக்கவும் முடியாது. இந்த ஹதீஸ் சுலைமான் நபிக்கு மறைவான அறிவு இருப்பதாகக் கூறுகின்றது. எனவே, இந்த ஹதீஸை ஏற்றுக் கொள்ள முடியாது என்று வாதிக்கப்படுகின்றது.

## நமது விளக்கம்:

முதலில் இந்த ஹதீஸ் சுலைமான் நபிக்கு மறைவான அறிவு இருப்பதாகக் கூறவில்லை. குழந்தை பிறப்பு சம்பந்தமாக நபி(ஸல்) அவர்கள் கூட பல முன்னறிவிப்புக் களைச் செய்துள்ளார் கள். அதனால் அல்லாஹ்வுக்கு மட்டும் தெரிந்த ஐந்து விடயங்களில் ஒன்று பற்றி நபி(ஸல்) பேசியதாக இந்த ஹதீஸ் கூறுகின்றது. எனவே, இந்த ஹதிஸை ஏற்றுக் கொள்ள முடியாது என வாதிட முடியாது.

ஒருவர் எனக்கொரு மகன் பிறப்பான். அவன் என்னைப் போலவே இருப்பான் என்று கூறுகின்றார். அல்லது கருவுற்றிருக்கக் கூடிய ஒரு பெண் அஹ்மத் என்ற தனது கணவனைப் பார்த்து வயிற்றுக்குள் இருந்து ஒரு குட்டி அஹ்மது உதைக்கிறான் என்று கூறுவதாக வைத்துக் கொள்ளுங்கள். இப்போது இவர்களைக் காபிர் என்று கூறலாமா?

உனக்குக் குழந்தை கிடைக்கும் என்று எப்படித் தெரியும். அதுவும் ஆண் குழந்தை என்று எப்படித் தெரியும்? அதுவும் அந்த மகன் உன்னைப் போலவே இருப்பான் என்று நீ எப்படிக் கூற முடியும்? நீ அல்லாஹ்வுக்கு மட்டும் உரிய ஞானத்தில் கைவைத்துவிட்டாய் என்று கூறமுயுமா?

எனக்கொரு மகன் பிறப்பான்; அவன் என்னைப் போலவே இருப்பான் என முடிவான ஒரு செய்தியாக அவன் கூறினாலும் எனக்கொரு மகன் பிறக்க வேண்டும். அவன் என்னைப் போல இருக்க வேண்டும் என்ற ஆசையை, வேண்டுதலை வெளியிடுகின்றான் என்றே இதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதே போல கர்ப்பிணித் தாயின் கூற்றை தனக்கு தன் கணவனின் சாயலில் ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்ற ஆசையை அவள் வெளியிடுவதாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சுலைமான் நபியின் கூற்றையும் அப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும். சுலைமான் நபி தனது ஆசையை முடிவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளில் கூறுகின்றார்கள். இது அவருக்கு மறைவான அறிவு இருக்கின்றது என்ற கருத்தைத் தராது என்றே புரிந்து கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில்தான் இமாம் புஹாரி இந்த ஹதீஸிற்குத் தலைப்பிடும் போது,

بَابُ مَنْ طَلَبَ الْوَلَدَ لِلْجِهَادِ

இறை வழியில் போரிடுவதற்குக் குழந்தை வேண்டும் என்று வேண்டுதல் எனத் தலைப்பிட்டுள்ளார்கள். எனவே, ஹதீஸைத் தவறாகப் புரிந்து கொண்டுதான் இந்த ஹதீஸ் சுலைமான் நபிக்கு மறைவான ஞானம் இருப்பதாகக் கூறுகின்றது. எனவே, இதனை ஏற்க முடியாது என தப்பான வாதம் புரிகின்றனர்.

ஹதீஸை இப்படி சரியன முறையில் புரிந்து கொள்ள அவர்கள் மறுத்தால் கூட இந்த ஹதீஸை மறுக்க முடியாது. என்பதைத் தெளிவு படுத்துவதற்காக அவர்களது நிலைப்பாட்டில் நின்று கொண்டு இந்தப் பிரச்சினையையும் அணுகுகின்றோம். இது ஒரு வாதத்திற்கான அணுகுமுறை மட்டுமே என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

**"எனது இரட்சகனே! நிராகரிப்பாளர்களில் எவனையும் நீ இப்பூமியில் வசிக்க விட்டு விடாதே! என்று நூஹ் (பிரார்த்தித்துக்) கூறினார்."**

**'நீ அவர்களை விட்டுவைத்தால், நிச்சய மாக அவர்கள் உனது அடியார்களை வழி கெடுத்து விடுவர். இன்னும் நிராகரிக்கின்ற பாவியைத் தவிர வேறெவரையும் அவர்கள் பெற்றெடுக்க மாட்டார்கள்."** *(71:26-27)*

இது நூஹ் நபி செய்த பிரார்த்தனை யாகும். காபிர்களுக்குக் கிடைக்கக் கூடிய பிள்ளைகள் எல்லோரும் காபிர்களாகவும் பாவிகளாகவும்தான் பிறப்பார்கள் என்பது நூஹ் நபிக்கு எப்படித் தெரியும்? காபிர்களுக்கு நல்ல பிள்ளைகள் பிறக்க மாட்டார்களா? அந்தப் பிள்ளைகள் மு.்.மின்களையும் வழி கெடுப்பார்கள் என்பது நூஹ் நபிக்கு எப்படித் தெரியும் என்று கேள்வி எழுகின்றதல்லவா?

**"இன்னும் அச்சிறுவனது பெற்றோர் இருவரும் நம்பிக்கையாளர்களாக இருந்தனர். இவன் அவ்விருவரையும் வரம்பு மீறுதலுக்கும், நிராகரிப்புக்கும் உட்படுத்திவிடுவான் என நாம் அஞ்சினோம்."**

**"இவனை விடப் பரிசுத்தமான, மிகச் சிறந்த வனையும், அன்பு செலுத்துவதில் மிக நெருக்கமானவனையும் அவ்விருவருக்கும் அவர்களின் இரட்சகன் பகரமாகக் கொடுக்க வேண்டுமென நாம் நாடினோம்."** *(18: 80-81)*

மூஸா, ஹிழ்ர் ஆகிய நபிமார்கள் சம்பந்தப்பட்ட வரலாற்றில் ஹிழ்ர் ஒரு சிறுவனைக் கொல்கின்றார்கள். அதற்குக் காரணம் கூறும் போது இந்தச் சிறுவனின் பெற்றோர் மு.்.மின்களாவார்கள். இவன் வளர்ந்து பெரியவனானால் அவர்களைப் பாவம் செய்யுமாறும் குப்ரைச் செய்யுமாறும் நிர்ப்பந்திப்பான். இவனைக் கொன்றுவிட்டு இவனது பெற்றோர்களுக்கு அவர்களை நேசிக்கக் கூடிய நல்லதொரு குழந்தையைக் கொடுக்கவும் விரும்புகின்றோம் என்று கூறுகின்றார்கள்.

இந்தச் சிறுவன் பெற்றோரைக் குப்ர் செய்யுமாறு நிர்ப்பந்திப்பான். பின்னர் பிறக்கக் கூடிய குழந்தை நல்ல குழந்தையாக இருக்கும், பெற்றோர் மீது அந்தக் குழந்தை அன்பாக இருக்கும் என்ற செய்தியெல்லாம் ஹிழ்ர் நபிக்கு எப்படித் தெரியும் அவருக்கு மறைவான அறிவு இருந்ததா என்று கேள்வி எழுப்பினால் என்ன பதில் கூறமுடியும்?

இதற்கு ஒரேயொரு பதில்தான் கூற முடியும். அல்லாஹ் அறிவித்துக் கொடுத்ததற்கு ஏற்ப அவர்கள் இப்படிக் கூறினார்கள் என்பது தான் அந்த பதிலாகும்.

**"உமது சமூகத்தில் நம்பிக்கை கொண்டோரைத் தவிர வேறு எவரும் நிச்சயமாக நம்பிக்கை கொள்ளமாட்டார்கள். எனவே, அவர்கள் செய்து கொண்டிருப் பவை பற்றி நீர் கவலை கொள்ளாதீர்' என நூஹுக்கு வஹி அறிவிக்கப்பட்டது."** *(11:36)*

நூஹ் நபிக்கு கூறப்பட்ட இந்தச் செய்தியை வைத்துத்தான் காபிர்களும் பாவிகளும்தான் பிறப்பார்கள் என்று முடிவு செய்கின்றார்கள். இவ்வாறே ஹிழ்ர் நபியவர்களும்,

**"இவற்றை நான் என் விருப்பப்படி செய்யவில்லை. இதுதான் உம்மால் பொறுமையாக இருக்க முடியாததற்கான விளக்கமாகும்."** *(18:82)*

என்ற கூற்றின் மூலமாக உணர்த்து கின்றார்கள்.

இதே போன்று சுலைமான் நபியும் அல்லாஹ்வின் வஹியைப் பெறும் ஒருவராக இருந்ததால் அல்லாஹ் வழங்கிய உதிப்பின் பிரகாரம் போராடும் முஜாஹித்கள் கிடைப்பார்கள் என்று கூறியிருப்பார்கள் என்று ஏன் முடிவு செய்ய முடியாது?

**(இப்படி முடிவு செய்தாலும் சில கேள்விகள் எழும். அவற்றுக்கான பதில் அடுத்த இதழில் இன்கூஅ அல்லாஹ்!..)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 86 வருட சிறைத் தண்டனை அனுபவிக்கும் சகோதரி

# டாக்டர் ஆபியா சித்தீகி

## அதிர்ச்சி தரும் சித்திரவதைகள்

டாக்டர் ஆபியா சித்தீகி அமெரிக்காவின் பெருமைமிக்க மாஸ்சூசெட்ஸ் நிருவனத்தின் உயிரியல் பட்டதாரி..

ஆபியா 2003 மார்ச் 30 இல் பாகிஸ்தானில் மர்மமான முறையில் கடத்தப்பட்டு காணாமல் போனார். டாக்டர் ஆபியாவுக்கு என்ன ஆனது என்று தெரியாமல் ஒட்டு மொத்த மக்களும் திணறிக் கொண்டிருந்த வேளையில், ஆப்கானிஸ்தானின் பக்ரம் (Bagram) சிறையில் Prisoner 650 என்ற பட்டப் பெயர் கொண்ட ஒரு பெண் சித்திரவதைப் படுத்தப்படுவதாக செய்திகள் கசியத்துவங்கின.

கொடுமைகளின் உக்கிரம் தாங்க இயலாமல் கைதி எண் 650 சுய நினைவை இழந்துள்ளதாக அத்தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து சுயாதீன ஊடகங்களின் பார்வை அந்தப் பக்கம் திரும்பியது. மீடியாக்களின் அழுத்தம் தாங்க முடியாமல் பிரிட்டிஷ் மேலவை உறுப்பினர் நஜீர் அஹ்மத் இது தொடர்பான கேள்வியை அவையில் எழுப்பி ஆதாரங்களை முன்வைத்துள்ளார்.

அதன்படி Prisoner 650 என்று பெயரிடப்பட்ட அப்பெண்மணி உடல் ரீதியாக கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாகி இருப்பதாகவும் சிறைக்காவலர்களால் தொடர்ந்து வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப் பட்டிருப்பதாகவும் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகின.

கொடுமையின் உச்சகட்டமாக Prisoner 650 என்ற அப்பெண், பெண்களுக்கான கழிப்பறைகளைப் பயன்படுத்த மறுக்கப்பட்டார் என்றும் ஆண் கைதிகளின் முன்னிலையில் தன் இயற்கை உபாதைகளை நிறை வேற்றப் பலவந்தப்படுத்தப்பட்டார் என்றும் அதனால் ஆண் கைதிகள் அவரை பெண்கள் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு கோரி உண்ணாவிரதம் இருந்ததாகவும் தகவல்கள் கசிந்தன.

ஆப்கானிஸ்தானில் உள்ள பக்ரம் சிறைச்சாலையில் ஒரு பெண் கடந்த நான்கு ஆண்டுகளாக விவரிக்க இயலாத அளவுக்கு துன்புறுத்தப்பட்டு வருவதாக குரல் எழுப்பியவர். ஜுலை 6, 2008 இல் பிரபல பிரிட்டிஷ் பத்திரிக்கையாளராக இருந்த இவோன் ரிட்லி.

செய்திச் சேகரிப்பிற்காக சிறைச்சாலை சென்றிருந்த அவர் அங்கே நிகழ்ந்து கொண்டிருக்கும் வன்கொடுமைகளைக் கண்டு பதறிப் போனார். நொடி கூட தாமதிக்காமல் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பினை ஏற்பாடு செய்து இச்செய்தியை வெளி உலகிற்குக் கொண்டுவந்தார்.

அப்பெண்ணை நான் சாம்பல் நிறப் பெண்மணி என்றுதான் சொல்வேன். ஈனஸ்வரத்தில் புலம்புவதையும் அழுவதையும் அலறுவதையும் சிறைச்சாலையில் உள்ளவர்கள் எப்போதும் கேட்பார்களாம் என்று மனம் வெதும்பினார் இவோன் ரிட்லி. அப்பெண் யார் என்று தெரியாத நிலையில் மனிதாபிமான அடிப்படையில் அவரை மீட்டெடுப்பதற்காக பாகிஸ்தான் விரைந்தார்.

இதேவேளை, முஆசம் பெக் என்ற முந்தைய குவாண்டனாமோ சிறைவாசி தன் சிறை அனுபவங்களை நூலாக எழுதியிருந்தார். தான் இஸ்லாமாபாத்தில் வைத்து பெப்ரவரி 2003 இல் கைது செய்யப்பட்டு பக்ரம் சிறையில் ஒரு வருடம் அடைக்கப்பட்டதாகவும் அதன் பின் குவாண்டனாமோ சிறைக்கு மாற்றம் செய்யப்பட்டதாகவும் கூறியிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அறைக்குப் பக்கத்து அறையில் ஒரு பெண், பல ஆண் காவலர்களால் கொடுமைப்படுத்தப்படும் ஒவ்வொரு வேளையிலும் தனது நெஞ்சு விம்மி வெடித்து விடுவதை உணர்ந்ததாக தனது நூலில் கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் 'ஜஸ்டிஸ் கட்சி'யின் தலைவரான இம்ரான் கான், கொடுமைகளைச் சந்திக்கும் அப்பெண் டாக்டர் ஆபியாதான் என்று தனது ஐயத்தினை வெளிப்படுத்தினார்.

அவர் பெற்ற வதைகள் மிகவும் பயங்கரமானதும் மனிதாபிமானம் உள்ள எந்த ஒரு மனிதனாலும் ஏற்றுகொள்ள முடியாத அராஜகங்கள் அவர் பெற்ற வதைகளில் சில Dr. ஆபியா சிந்தீக்கியின் தாய் இப்படி கூறுகின்றார், "ஆறு பேர் வதை முகாமுக்கு வருவார்கள். அவர்கள் பலவந்தமாக ஆபியாவை நிர்வாணப் படுத்தி பாலியல் வதை செய்வார்கள். அந்த நிலையில் இரத்தம் ஓடும்வரை துப்பாகிகளின் பின் புடியினால் மிக மோசமாக அறைவார்கள். நிர்வாணப் படுத்தப்பட்ட ஆபியாவை கட்டில் ஒன்றில் கால்களையும், கைகளையும் கட்டி கால்களிலும், தலையிலும் வர்ணிக்க முடியாத சித்திரவதைகளைச் செய்வார்கள். அவரின் உடலில் அறியப்படாத திரவங்களை ஊசியின் ஊடாக செலுத்துவார்கள். உடைகளைப் பலவந்தமாக நீக்கி வதை முகாமில் அவரின் தலை முடியில் பிடித்து இழுத்து வதைப்பார்கள். எல்லா வற்றுக்கும் மேலாக அவரை நிர்வாணப் படுத்தி அல் குர்ஆனை நிலத்தில் வீசி அதன் மீது நடக்குமாறு வதைத்துள்ளார்கள். மறுக்கும் போது மிகவும் கடுமையாக அடிப்பார்கள்" என்று Dr.ஆபியாவின் தாய் கூறியுள்ளார்.

அவர் சிதைக்க பட்டார்; அவரின் மானம் சிதைக்கப்பட்டது ,அவரின் குடும்பம் சிதைக்க பட்டது மூன்று குழந்தைகளுடன் கடத்தப்பட்ட ஆபியா வர்ணிக்க முடியாத வதைகளை அனுபவித்தார். கணவனை இழந்தார் இவருடன் கடத்த பட்ட மூன்று குழந்தைகளில் ஒரு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் எங்கு இருகின்றார்கள் என்ற விபரம் இன்னும் எவருக்கும் தெரியாது. அனைத்தையும் இழந்த ஆபியா வெளி உலகம் அறிந்து விட்டதால் அமெரிகாவுக்கு கொண்டு சென்று வழக்கு தொடர்ந்துள்ளனர் இந்த அமெரிக்க பயங்கரவாதிகள். ஆகஸ்ட் 4 ஆம் திகதி ஆபியா அமெரிக்காவின் நியூயார்க் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அவரது தோற்றம் முழுமையாக மாறியிருந்தது. சக்கர நாற்காலி ஒன்றில் ஆபியா கொண்டுவரப்பட்ட காட்சி அங்கிருந்த சகலரையும் கண்ணீர் மல்கச்செய்தது.

சிறைச்சாலை சீருடை, குவாண்டனா மோவில் அணிவிப்பது' போன்ற கையில்லாத மேலங்கியுடன் வந்தவர், அதற்கு மேலால் பக்கத்திலிருந்த ஒருவரிடம் ஒரு துணியை வாங்கி தலையையும் எலும்பில் சதை போர்த்தியது போன்ற கரங்களையும் மறைத்துக் கொண்ட ஆபியாவின் இஸ்லாமிய உணர்வு கண்டு பார்வையாளர்கள் அதிர்ந்துபோயினர்.

அமெரிக்க புலனாய்வு ஏஜன்ட்டுகாளால் ஆப்கானிஸ்தான் இரகசிய சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது ஒரு FBI அதிகாரியிடம் துப்பாகியை பறித்து அந்த FBI அதிகாரியையும் ஒரு இராணுவ அதிகாரியையும் சுட்டார் என்றும், பேரழிவு தாக்குதல் -mass-casualty attacks- என்று எழுதப்பட்ட ஒரு ஆவணம் வைத்திருந்தார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டு 86 வருடம் சிறை தண்டனை விதித்துள்ளது அமெரிக்க (அ)நீதி மன்றம்.

இந்த சகோதரி சிறையில் மரணித்து விட்டதாக செய்திகள் வந்தது. ஆனால் வேறு சில செய்தில் உயிருடன் இருபதாக வருகிறது. அல்லாஹ் அறிந்தவன்!

யா அல்லாஹ்! இந்த சகோதரிக்கும் அவர் குழந்தைகளுக்கும் உன் கருணையை பரிபூரணமாக வழங்குவாயாக!

உலகத்தில் வாழும் முஸ்லிம்களுக்கு அக்கிரமக்காரர்களின் தீங்கை விட்டு முழுமையான பாதுகாப்பைக் கொடுப்பாயாக! மேலும், அக்கொடுமையார்களின் சூழ்ச்சியை முறியடிப்பாயாக!

இந்த அக்கிரமகாரர்களுக்கு உன்புறத்தில் இருந்து தண்டனையை விரைந்து அனுப்புவாயாக!

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் முஸ்லிம்களுக்கு எதிராக செய்யும் கொடுமைகளுக்கு அல்லாஹ் சாட்சியாக இருக்கிறான். அவர்களுக்குரிய தண்டனை அல்லாஹவிடம் இருக்கிறது. இன்னும் அதற்குரிய தண்டனை வெகு தூரத்தில் இல்லை.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்ஆன், சுன்னாவைப் பின்பற்றுவதில்

# ஸலபுகளின் வழிகாட்டல்

ஸலபுகள் என நாம் இங்கே குறிப்பிடுவது நபித்தோழர்களையும் தாபியீன்கள், தபஉத் தாபியீன்கள் எனும் நபி(ஸல்) அவர்களால் சிறப்பித்துக் கூறப்பட்ட காலகட்டத்தில் வாழ்ந்த நல்லறிஞர்களையே ஆகும். இவர்கள் குர்ஆன் சுன்னாவுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு முழு மனத்திருப்தியுடன் அவற்றைப் பின்பற்றி வந்தனர். இதற்கான சான்றுகளை வரலாற்றில் அதிகமாகக் காணலாம். அவற்றில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதே இவ்வாக்கத்தின் நோக்கமாகும்.

**"எவர்கள் நம்பிக்கை கொண்டு, நல்லறங்களும் புரிகின்றார்களோ அவர்களுக்கு மன்னிப்பும் மகத்தான கூலியும் உண்டென்று அல்லாஹ் வாக்களித்துள்ளான்."** (5:9)

என்ற வசனம் அருளப்பட்டது.

**"இந்த வசனம் அருளப்பட்டதும் உமர்(ரழி) அவர்கள் 'நாங்கள் விலகிக் கொண்டோம்' என்று கூறினார்கள்."**

(அஹ்மத், அபூதாவூத்: 3672, 3670, திர்மிதி - 3049, நஸாஈ - 5540)

இந்த வசனம் அருளப்பட்ட பின்னர் உலக வரலாறு காணாத ஒரு மது ஒழிப்புப் புரட்சி நடந்தது. இன்றைய உலக நாடுகளும், ஐ.நாவும் போதை ஒழிப்புக்கென கோடான கோடி டொலர்களைக் கொட்டித் தீர்த்தும் ஒழிக்க முடியாத போதையை ஒரு வசனத்தின் மூலம் ஒழித்துக் கட்டியது இஸ்லாம்.

ஆம், இந்த வசனம் அருளப்பட்டதும் மது தடுக்கப்பட்டுவிட்டது என சப்தமிட்டுக் கூறப்பட்டதும் நபித்தோழர்கள் விரைந்து சென்று தமது இல்லங்களில் இருந்த மதுவை எடுத்து மதீனாப் பாதையில் கொட்டினார்கள். மது ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடியது. அவர்களது உள்ளங்களிலிருந்து மது அரக்கன் விரட்டியடிக்கப்பட்டான்.

அனஸ்(ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். **"நான் அபூ உபைதா(ரழி), உபை இப்னு கஃப் மற்றும் (எனது தாயின் கணவன்) அபூதல்ஹா(ரழி) ஆகியோருக்கு மது புகட்டிக் கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் வந்து மது தடுக்கப்பட்டுவிட்டது என்று கூறினார். உடனே அபூதல்ஹா(ரழி) அவர்கள் அனஸே எழுந்து அதைக் கொட்டிவிடு என்றார்கள். அப்படியே கொட்டிவிட்டேன்."** (புஹாரி: 5582)

**"மற்றும் சில அறிவிப்புக்களில் அந்த மதுச் சட்டியை உடைத்துவிடுமாறு கூறியதாகவும் தான் அதன் அடிப்பாகத்தில் அடித்து அதை உடைத்ததாகவும் அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்."**

(புஹாரி: 7253)

ஒரு ஆயத்து அந்த சமூகத்தை அப்படியே புரட்டிப் போட்டது. அவர்கள் மது தடுக்கப்பட முன்னர் தயாரித்த மதுவை விற்று பணமாக்கலாமா? என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்க வில்லை. அப்படியே கொட்டினர். தமது கட்டுப்படும் இயல்பைக் காட்டினர்.

## தொழுகையில் மாறிய கிப்லா:

முஸ்லிம்கள் பைதுல் முகத்தஸை நோக்கியே தொழுதுவந்தனர். அதன் பின்னர்தான் தொழும் போது புனித கஃபாவை முன்னோக்க வேண்டும் என்ற சட்டம் அருளப்பட்டது. இந்த மாற்றம் உண்மையாக இத்தூதரை யார் பின்பற்றுகின்றார்கள் என்பதற்கான சோதனை என அல்லாஹ்வே குர்ஆனில் கூறுகின்றான்.

**"இந்த வசனம் அருளப்பட்ட செய்தி சிலருக்கு அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போதுதான் கிடைத்தது. கஃபாவைப் பின்புறமாகவும் பைதுல் முகத்தஸை முன்னோக்கியும் தொழுது கொண்டிருந்த நபித்தோழர்கள் வசனம் கிடைத்ததும் அப்படியே திரும்பித் தமது கட்டுப் படுதலை வெளிப்படுத்தினர்."**

(புஹாரி: 403, 7251, முஸ்லிம்- 526)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தொழுகையை பைத்துல் முகத்தஸ் நோக்கித் தொழ ஆரம்பித்து விட்டோம். இப்போதுதான் தகவல் வந்தது. இனிவரும் தொழுகைகளைக் க..பாவை நோக்கித் தொழலாம் என்று அவர்கள் கட்டுப் படுதலைப் பிற்போட விரும்பவில்லை. தொழுது கொண்டிருந்த அதே நிலையிலேயே தமது கிப்லாவை மாற்றினர்.

## ஆடையைக் கிழித்து முந்தானை:

ஜாஹிலிய்யாக் காலத்தில் பெண்கள் அரைகுறை ஆடையுடன் வலம் வந்தனர். எனவேதான் குர்ஆன் (33:33) என்ற வசனத்தில் "தபர்ருஜில் ஜாஹிலிய்யதுல் ஊலா" என்று கூறுகின்றான். பின்னர் ஹிஜாப் குறித்த வசனங்கள் அருளப்பட்டன.

**"மேற்படி வசனம் அருளப்பட்டதும் மதீனாப் பெண்களும் முஹாஜிர் பெண்களும் உடனே தமது ஆடையைக் கிழித்து எடுத்து அதனை முந்தானையாக அணிந்து கொண்டனர்."**

அறிவிப்பவர்: ஆயிஷா(ரழி)
ஆதாரம்: புஹாரி- 4758, 4759, 4481, 4480

வசனம் அருளப்பட்டதும் அணிவதற்கு முந்தானை இல்லாத நிலையில் அவர்கள் இதன் பின்னர் வெளியில் வரும் போது இந்தச் சட்டத்தைப் பேணலாம் என்றிருக்கவில்லை. உடனேயே அணிந்திருக்கும் ஆடையில் ஒரு பகுதியைக் கிழித்தெடுத்து அதையே முந்தானையாக்கினர் என்றால் குர்ஆன் சுன்னாவிற்கு உடனேயே கட்டுப்பட வேண்டும் என்பதில் அவர்கள் காட்டிய அக்கறையை அறியலாம்.

## செருப்பைக் கழற்றிய தோழர்கள்.

செருப்பை அணிந்து கொண்டு தொழுவதற்கு இஸ்லாத்தில் அனுமதியுள்ளது. நபி(ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் மதீனாப் பள்ளியில் செருப்பணிந்து தொழுதுள்ளனர். அவர்களது மஸ்ஜித் வெறும் மணல் தரையாகவே இருந்தது.

ஒரு நாள் நபி(ஸல்) அவர்கள் தொழும் போது தமது செருப்புக்கள் இரண்டையும் கழற்றினார்கள். இதைக் கண்ட அனைத்துத் தோழர்களும் தமது செருப்புக்களைக் கழற்றினார்கள். தொழுகை முடிந்ததும் நபி(ஸல்) அவர்கள் நீங்கள் ஏன் செருப்பைக் கழற்றினீர்கள் என்று கேட்டார்கள். நபித்தோழர்களோ அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் கழற்றியதை நாம் கண்டோம். எனவே, நாமும் கழற்றினோம் என்று கூறினர். இது கேட்ட நபி(ஸல்) அவர்கள் எனது ஒரு செருப்பில் அசுத்தம் இருப்பதாக ஜிப்ரீல்(அலை) அவர்கள் கூறினார்கள். எனவே, எனது இரண்டு செருப்புக்களையும் கழற்றினேன். நீங்கள் கழற்ற வேண்டியதில்லை எனக் கூறினார்கள். (பார்க்க: தபரானி: 9829, அஹ்மத்: 3120)

நபி(ஸல்) அவர்கள் செருப்பைக் கழற்றிய போது காரண காரியத்தை அறியாமலேயே நபித்தோழர்களும் நபி(ஸல்) அவர்களை அப்படியே பின்பற்றும் ஆர்வத்தில் தமது செருப்புக்களைக் கழற்றினார்கள்.

## கண்கள் சொரிந்த கண்ணீர்:

"நீங்கள் சிரிக்கின்றீர்களா? அழமாட்டீர்களா?" (53: 60)

**"மேற்படி வசனம் அருளப்பட்டதும் திண்ணைத் தோழர்களின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடும் அளவுக்கு அழுதார்கள். அவர்களின் அழுகை ஓசை கேட்டு அவர்களுடன் நபி(ஸல்) அவர்களும் அழுதார்கள். நபி(ஸல்) அவர்களின் அழுகையைக் கண்டு நாமெல்லாம் அழுதோம்.**

**அப்போது அல்லாஹ்வின் அச்சத்தால் அழுதவர்கள் நரகம் நுழையமாட்டார்கள். தனது தவறில் தொடர்ந்திருப்பவன் சுவனம் நுழைய மாட்டான். நீங்கள் தவறே செய்யாவிட்டால் உங்களைப் போக்கிவிட்டு வேறு ஒரு கூட்டத்தை அல்லாஹ் கொண்டு வருவான். அவர்கள் தவறு செய்வார்கள். பின்னர் தவறுக்காக மன்னிப்புக் கேட்பார்கள். அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என ஆறுதல் கூறினார்கள்."** (ஷுஅபுல் ஈமான்:777, 798)

அழும் விடயத்தில் கூட உடனேயே ஆயத்துக்குக் கட்டுப்படும் உள்ளம் உடையவர்களாக அந்த உத்தமர்கள் இருந்துள்ளதை இதன் மூலம் அறியலாம்.

## தங்கமும் தரம் குறைந்தது:

**"நபித்தோழர்களில் ஒருவர் கையில் தங்க மோதிரம் அணிந்திருப்பதைக் கண்ட நபியவர்கள் அதைக் கழற்றி வீசினார்கள். நபி(ஸல்) அவர்கள் சென்ற பின்னர் உனது மோதிரத்தை எடுத்து (அணியாவிட்டாலும்) பயன்பெறலாமல்லவா? என்று அவரிடம் கேட்ட போது,**

**அல்லாஹ்வின் மீது சத்தியமாக நபி(ஸல்) அவர்கள் வீசியதை நான் ஒரு போதும் எடுக்க மாட்டேன் என அவர் எடுக்க மறுத்துவிட்டார்கள்."**

(முஸ்லிம்: 2090)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஹதீஸிற்கு இமாம் நவவி(ரஹ்) அவர்கள் விளக்கம் கூறும் போது நபி(ஸல்) அவர்களது ஏவல்களை எடுத்து நடப்பதிலும் தடைகளைத் தவிர்ந்து கொள்வதிலும் கூடிய அக்கறை செலுத்துவதற்கு இந்த ஹதீஸில் ஆதாரம் உள்ளது. அத்துடன் இதில் பொடு போக்கை ஏற்படுத்தும் பலவீனமான, போலியான காரணங்களைக் கற்பிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்கும் இது சான்றாக உள்ளது எனக் குறிப்பிடுகின்றார்கள்.

## அவதூறு கூறியவரை அரவணைத்த அபூபக்கர்(ரழி)

"ஆயிஷா (ரழி) அவர்கள் மீது சில முனாபிக்குகள் விபச்சாரக் குற்றம் சுமத்தினர். முனாபிக்குகளின் அவதூறை சில நபித் தோழர்களும் நம்பினர். இவர்களுள் மிஸ்தஹ் இப்னு அதாதா என்பவரும் ஒருவராவார். இவர் அபூபக்கர் (ரழி) அவர்களது உறவினராவார். அபூபக்கர் (ரழி) அவர்கள் தான் இவரது வாழ்வாதாரத்திற்கான பொருளாதாரப் பொறுப்பை ஏற்றிருந்தார். இந்த நிலையிலும் தனது மகள் மீது அவதூறு கூறிய இவர் மீது ஆத்திரம் கொண்ட அபூபக்கர் (ரழி) அவர்கள் இனி இவருக்கு பொருளாதார உதவி செய்வதில்லை என சத்தியம் செய்தார்கள்.

"நெருங்கிய உறவினர், ஏழைகள், அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தோர் ஆகியோருக்கு (எதனையும்) வழங்க மாட்டோம் என்று உங்களில் சிறப்பும் வசதியு முடையவர்கள் சத்தியம் செய்ய வேண்டாம். அவர்கள் மன்னித்து, பொருட்படுத்தாது விட்டு விடட்டும். அல்லாஹ் உங்களுக்கு மன்னிப்பு வழங்குவதை நீங்கள் விரும்ப மாட்டீர்களா? அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையவன்." *(24:22)*

மேற்படி வசனம் அருளப்பட்டதும் அபூபக்கர் (ரழி) அவர்கள் 'ஆம்! அல்லாஹ் என்னை மன்னிக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன் என்று கூறி அவருக்கு தொடர்ந்து உதவி வந்தார்கள்." (புஹாரி: 2661, 4756)

## ரோஷத்தைத் தணித்த இறை வசனம்:

"மஃகல் இப்னு யஸார் (ரழி) அவர்கள் தனது சகோதரி ஜமீலா (ரழி) அவர்களை மண முடித்துக் கொடுத்தார்கள். அவர் ஜமீலாவை தலாக் கூறினார். பின்னர் அவர் தனது தவறுக்காக வருந்தினார். பிரிந்த இருவரும் சேர்ந்து வாழ விரும்பினர். இருப்பினும் மஃகல் ரோஷம் கொண்டவராக, இதற்குப் பின்னர் உனக்கு எனது சகோதரியை ஒரு போதும் மணமுடித்துத் தர மாட்டேன் எனச் சத்தியம் செய்தார்கள். அப்போது பின்வரும் வசனம் அருளப்பட்டது.

"நீங்கள் பெண்களை விவாகரத்து செய்து அவர்கள் தங்கள் (இத்தா)காலக் கெடுவின் எல்லையை நிறைவு செய்து (மீண்டும்) அவர்கள் தமக்குள் நல்ல முறையில் உடன்பட்டுக் கொண்டால் (அப்) பெண்கள் தங்களது கணவன்மார் களை (மறுமுறை) மண முடிப்பதை (பொறுப்புதாரிகளாகிய) நீங்கள் தடுக்க வேண்டாம். உங்களில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொள்பவர் இதைக்கொண்டு உபதேசிக்கப்படுகிறார். இதுதான் உங்களுக்கு மிகத் தூய்மையான தும் பரிசுத்தமானதுமாகும். அல்லாஹ்தான் நன்கறிவான்; நீங்களோ அறியமாட்டீர்கள்." *(2:232)*

இந்த வசனத்தைச் செவியுற்ற முஃமின்கள் எனது இரட்சகனின் வார்த்தையை நான் செவியுற்றேன், கட்டுப்பட்டேன் எனக் கூறி தனது சகோதரியை அவருக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள்."

*(திர்மிதி: 2328, புஹாரி: 4529, 5331)*

## கன்னிப் பெண்ணின் வெட்கத்தை நீக்கிய ஹதீஸ்:

"முகீரா (ரழி) அவர்கள் மறுமணம் முடிக்க எண்ணியிருந்தார். இது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கூறிய போது நீ மணப் பெண்ணைப் பார்த்தாயா? எனக் கேட்டார்கள். அவர் இல்லை என்றதும் பெண்ணைப் பார்க்குமாறு கூறினார்கள். இதனை முகீரா பெண்ணின் பெற்றோர்களிடம் கூறிய போது அவர்கள் தமது பெண்ணைக் காட்ட விரும்பவில்லை. இந்த சம்பாசனையைக் கேட்டுக் கொண்டிருந்த மணப்பெண்,

பார்க்குமாறு நபியவர்கள் கூறியிருந்தால் நீர் பார்க்கலாம். அப்படி இல்லையென்றால் நீ பார்க்கக் கூடாது என்று கூறி தன்னைப் பார்க்க சம்மதித்தார்கள்." (இப்னுமாஜா: 1866)

இந்த நிகழ்வு பெண் பார்த்தல் தொடர்பான சட்டம் கூறப்பட்ட ஆரம்ப சந்தர்ப்பமாகும். நபியவர்கள் பார்க்கச் சொன்னார்கள் என முகீரா கூறியதும் வெட்கத்தை விட்டு நீ என்னைப் பார்க்கலாம் என்று அந்தப் பெண் கூறினாள் என்றால் சுன்னாவுக்குக் கட்டுப்படுவதில் அவர்கள் காட்டிய அக்கறையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்ஷா அல்லாஹ் இதன் தொடர் அடுத்த இதழில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடித்தனம் மிக்க பொதுபலசேனா அமைப்பு இலங்கையை மற்றுமொரு மியன்மாராக மாற்ற நடவடிக்கை.

## அரபு நாடுகளில் எதிரொலி

(இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் பௌத்த கடும்போக்காளர்களின் அடாவடித்தனம் குறித்து அறபு நாடுகளில் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் கண்டனங்கள் வெளியாகியுள்ளன. அந்த வகையில் குவைத்தை மையமாகக் கொண்டு இயங்கும் 'அல் முஜ்தமா' எனும் சர்வதேச சஞ்சிகையில் 14.03.2013 இல் வெளிவந்த கட்டுரையை இங்கு தமிழில் தருகின்றோம்.)

தமிழாக்கம்: A.G.M. ஜெலீல் மதனி (காத்தான்குடி)

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு 1300 ஆண்டுகளுக்கும் மேற்பட்டது. புராதன காலம் தொடுத்தே இந்த நாட்டுக்காக இலங்கை முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புக்களும் தியாகங்களும் எண்ணி முடிக்க இயலாதவை. குறிப்பாக போர்த்துக் கீசர்களின் ஆட்சி இலங்கையில் நடந்த காலத்தில் இரண்டாம் இராஜசிங்க மன்னனை கொல்ல போர்த்துக் கேயர் துரத்தி வந்த வேளை அம் மன்னனை உயிரைக் கொடுத்துக் காப்பாற்றியது ஒரு முஸ்லிம் பெண் என்பது இலங்கை வரலாறு கற்றவருக்குத் தெரியும். அது மட்டுமல்ல, இலங்கையில் முப்பது வருட காலம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தில் முஸ்லிம்கள் அரசுக்குப் பக்க பலமாக செயற்பட்டார்கள். அவர்களும் புலிகளுக்கு ஆதரவளித்திருந்தால் முப்பது வருட யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்குமா? என்பது கேள்விக்குறியே!

இலங்கையில் பயங்கரவாதம் அழிக்கப்பட்டுவிட்டது. யுத்தம் முடிந்துவிட்டது என்ற செய்தியை நாம் கேட்டதும், இனித்தான் இலங்கை மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசித்து நிம்மதிப் பெருமூச்சு விடப் போகின்றார்கள், நாடு முன்னேற அபிவிருத்தி அடையப் போகின்றது என்று எண்ணி மகிழ்ந்தோம். ஆனால், அண்மைக் கால நிகழ்வுகளை ஊன்றிக் கவனிக்கும் போது இந்நாடு மீண்டும் இருளடைந்த பாதாளத்தை நோக்கியே மீண்டும் செல்கின்றதோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

ஆம், பொதுபலசேனா எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் ஒரு அடாவடிக் கோஷ்டி மீண்டும் இனவெறியைத் தூண்ட தூபம் போடுகின்றது. இதன் பின்னணியில் சில அரசியல் சக்திகளின் மறைமுக கரங்களும் சேர்ந்துகொண்டு இனவெறியை தூண்டி விடுவதன் மூலம் நாட்டில் மீண்டும் ஒரு போரை உருவாக்கி அதன் மூலம் தமது சுயநலன்களை நிறைவு செய்யத் துடிக்கின்றன. முப்பது வருட காலமாக இந்த நாட்டில் போர் மேகம் சூழ்ந்திருந்த வேளையில் யுத்தம் முடியக் கூடாது தொடர வேண்டும் என்பதற்காக பல சர்வதேச சக்திகள் செயற்பட்டதை இந்நாட்டு அரசாங்கம் மறந்திருக்காது. அந்தப் போர் மீண்டும் உருவாக வேண்டும் என்ற அத்தீய சக்திகளின் எண்ணத்தின் வெளிப்பாடே இன்றைய இந்த பொதுபலசேனாவின் நடவடிக்கைகள். ஆனால், இம்முறை ஆட்டம் முஸ்லிம்களைக் குறிவைத்து ஆரம்பிக்கப் பட்டுள்ளது. எனவே, பொதுபலசேனா போன்ற கடும்போக்குக் குழுக்களின் திரைமறைவில் சர்வதேச தீய சக்திகள் செயற்படுகின்றன என்பது தெட்டத் தெளிவாகின்றது.

ஏனெனில், இயல்பாகவே பௌத்த மக்களும் மதகுருமாரும் சமாதானத்தை நேசிப்பவர்கள். அவ்வாறே வாழ்ந்து பழக்கப் பட்டவர்கள். வன்முறையும் கடும் போக்கும் அவர்களின் மதத்திலேயே தடுக்கப் பட்டவைகளாய் இருக்கின்றன. இதனால்தான் முப்பது வருட விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் கூட பௌத்த மத குருக்கள் நேரடியாகப் பங்குபற்றவில்லை. வாய் மூடி இங்கு எதுவும் நடக்கவில்லை என்பது போல் தானுண்டு, தன் வேலை என்று வாழ்ந்தார்கள். அப்படியெனில் இவர்களுக்கு இப்போது மட்டும் இவ்வளவு தைரியமும், நாட்டுப் பற்றும் எங்கிருந்து முளைத்தது? (எனவே, இலங்கையில் எப்போது இஸ்ரேலிய தூதரகம் திறக்கப்பட்டதோ அதன் பிற்பாடுதான் இந்த இன சுத்திகரிப்பு-பழிவாங்கல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கின்றன.)

இவர்கள் முதன் முதலாக அனுராதபுரத்தில் சியாரம் ஒன்றைத் தகர்த்து அப்புறப்படுத்தினார்கள். முஸ்லிம்களில் பலரே சியாரத்தை வெறுப்பதால் பெரிய எதிர்ப்பு அப்போது ஏற்படவில்லை. அதன் பின் சிங்கள பகுதி பள்ளிவாயில்கள் சிலதை மூட முயற்சித்தார்கள். தம்புள்ளை நகரிலுள்ள அல் கைரிய்யா பள்ளிவாயலை முற்றுகையிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்ப்பாட்டம் செய்து அத்து மீறி உள்ளே நுழைந்து சேதப்படுத்தினார்கள். அன்று ஜும்ஆ நடாத்த விடாமல் தடுத்தார்கள். பள்ளியை மூடி அடைத்தார்கள். இத்தனையும் பாதுகாப்புத் தரப்பின் கண் முன்னேயே நடந்தேறின. முஸ்லிம்கள் இங்கிருந்து வெளியேற வேண்டும், முஸ்லிம்கள் தேசத் துரோகிகள், எமது நாட்டைப் பிடிக்கத் திட்டமிடுகின்றனர்... என்றெல்லாம் சுவரொட்டிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் வினியோகித்தனர்.

அவ்வாறே முஸ்லிம் மாணவர்கள் சட்டக் கல்லூரிக்கு அதிகம் தெரிவாவதைக் கண்டு பொறாமையால் அதைத் தடுக்க பல்வேறு ஆர்ப்பாட்டங்களைப் பின்புலமாக நின்று நடாத்தினர். தற்போது ஜம்இய்யதுல் உலமா வழங்கும் ஹலால் சான்றிதழுக்கு எதிராக பல்வேறு அரசியல் பலத்தையும் திரட்டி எடுத்துக் கொண்டு மிரட்டி, அச்சுறுத்தி ஹலால் சான்றிதழை ரத்துச் செய்வதில் வெற்றியும் பெற்றுவிட்டனர். அடுத்தகட்ட நடவடிக்கையாக முஸ்லிம் பெண்களின் "ஹிஜாப்-அபாயா" விடயத்தை எடுத்திருப்பதாக பகிரங்கமாகவே அறிக்கை விடுத்திருக்கின்றனர். இத்தனைக்கும் அரசாங்கம் இவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதே மனதைப் புண்ணாக்கும் வேதனைக்குரிய விடயமாகும்.

இவற்றைப் பார்க்கும் போது இவர்களுடன் அரசும் கைகோர்த்து நிற்கின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் இப்படியானதொரு பயங்கரவாதக் கும்பல் இந்நாட்டின் பிரஜைகளை ஒரு இனத்தவருக்கு எதிராக பகிரங்க மாநாடு, கூட்டம், ஆர்ப்பாட்டம்... என்று எவ்வித அரச தரப்பு அனுமதியும் பெறாமல் நடாத்துகின்றது. அதைப் பாதுகாப்புத் தரப்பு பார்த்துக் கொண்டிருக்கின்றது என்றால் இதற்கு என்னதான் அர்த்தம்?

அண்மையில் மஹரகம, கண்டி ஆகிய இடங்களில் நடாத்தப்பட்ட பகிரங்க மாநாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக எடுத்திருக்கும் சில தீர்மானங்களைப் பாருங்கள்.

1. ஹலாலை இலங்கையை விட்டும் அப்புறப்படுத்துவோம்.
2. வெளிநாட்டு மதப் பிரச்சாரகர்களை ஒரு மாதத்திற்குள் வெளியேற்றுவோம்.
3. அறபு நாடுகளுக்கு வேலைக்குச் செல்வதைத் தடுப்போம்.
4. ஜம்இய்யதுல் உலமா சபையைக் கலைப்போம்.

எனவே, முஸ்லிம்களைக் குறிவைத்து நடாத்தப்படும் வன்முறைகளைத் தடுக்க சிறந்த வழி அறபு, முஸ்லிம் நாடுகள் இவ்விடயத்தில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். இந்நாட்டுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும். ஏனெனில், இலங்கை அபிவிருத்திக்காக அறபு நாடுகளே அதிகம் தனது நிதிப் பங்களிப்புக்களை வாரி இறைக்கின்றன. பல இலட்சம் இலங்கையர் அறபு நாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்று இந்நாட்டுக்கு அந்நியச் செலாவணியை அள்ளிக் குவிக்கின்றனர். குவைத் அரசின் அபிவிருத்தி நிதியிலிருந்து மாத்திரம் இலங்கைக்கு 25 பாலங்களை நிர்மாணிப்பதற்காகப் பலநூறு கோடி டொலர்களை குவைத் அரசு உதவியாக வழங்கியுள்ளது. இன்னும் பல நிதியுதவிகளை வழங்க ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. அதே போல் பல அரபு நாடுகள் இலங்கையில் உற்பத்திப் பெருட்களைப் பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாக பெற்றோலியத்தையும், பெற்றோலிய உற்பத்திப் பொருட்களையும் மிகக் குறைந்த விலைக்கு இலங்கைக்கு வழங்குகின்றன. இவ்வாறு இலங்கை அரசு அறபு நாடுகளிலிருந்து பெரும் உதவிகளின் பட்டியல் மிக நீளமானது.

இவையெல்லாம் ஏன் இந்த கடும் போக்காளர்களின் சிந்தனையில் தோன்றவில்லை. இத்தனை உதவிகளையும் முஸ்லிம் நாடுகளில் இருந்து பெறும் அரசு ஏன் இந்த நாட்டு முஸ்லிம்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்காதிருக்கின்றது.

எனவே, அறபு நாடுகள் இலங்கைக்கான உதவிகளை வழங்கும் விடயத்தில் இனி கவனமாக செயற்பட வேண்டும்.

அவ்வாறே இந்த பௌத்த கடும் போக்காளர்கள் வெறும் அம்பேயன்றி எய்தவர்கள் வேறு யாரோ!... அவர்கள் தம்மை வெளிப்படுத்தாமல் திரை மறைவில் செயற்படுகின்றார்கள். எனவே, இவர்கள் இன்று விதைக்கும் வினை நாளை இவர்களுக்கே விபரீதமான பாதிப்புக்களை ஏற்படுத்தும். இவர்களின் இன வன்முறைகளால் முஸ்லிம்களை விட அதிகம் பாதிக்கப்படப் போவது பெரும்பான்மை சிங்களவர்களே! விரைவில் அதை அவர்கள் கண்டு கொள்வார்கள். அந்நாள் வெகு தூரத்தில் இல்லை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயத்துடன் ஒரு IT வலம்

## வைரஸ் தாக்கிய "பென்ட்ரைவ்" இலிருந்து பைல்களை மீட்க சிம்பிள் வழி!

தற்பொழுது தகவல்களை சேமிக்க பெரும்பாலானவர்களால் பயன்படுத்தப்படுவது USB பென்டிரைவ்கள். இதில் முக்கியமான பிரச்சினை வைரஸ் பிரச்சினை. வெவ்வேறான கனனிகளில் உபயோகிப்பதால் வைரஸ்கள் சுலபமாக பென்டிரைவில் புகுந்து உள்ளே இருக்கும்பைல்களை பாதிக்கிறது.

இப்படி பாதிக்கும் பொழுது உங்கள் பென்ட்ரைவில் உள்ளபைல்கள் மறைக்கப்பட்டுவிடும் கணனியில் பென்டிரைவை ஓப்பன் செய்தால் எந்த பைல்களும் இருக்காது. வெற்றிடமாக இருக்கும். ஆனால் properties சென்று பார்த்தால் பைல்கள் இருப்பது போன்றே அளவு காட்டும். காரணம் நம் தகவல்களை வைரஸ்கள் மறைத்து வைத்துவிட்டது. பென்டிரைவில் முக்கியமான தவல்கள் ஏதும் இல்லை எனில் Format செய்து பென்டிரைவை திரும்ப பெறலாம். ஆனால் ஏதேனும் முக்கிய மான தகவல்கள் இருந்தால் எப்படி அந்த பைல்களை பத்திரமாக மீண்டும் கொண்டு வருவது என பார்ப்போம்.

இதற்க்கு நீங்கள் எந்த மென்பொருளையும் உங்கள் கணினியில் Install செய்து உபயோகிக்க வேண்டியதில்லை. உங்கள் கனனியிலேயே சுலபமாக செய்து விடலாம். கீழே உள்ள வழிமுறையின் படி கவனமாக செய்து அந்த பைல்களை மீட்டு எடுங்கள்.

1) முதலில் பென்டிரைவை உங்கள் கணினியில் சொருகி கொள்ளுங்கள்.
2) Start ==> Run ==> CMD==> Enter கொடுக்கவும்.
3) இப்பொழுது பென்ட்ரைவ் எந்த ட்ரைவில் உள்ளது என பாருங்கள். My Computer செல்வதன் மூலம் கண்டறியலாம்.
4) உதாரணமாக E: டிரைவில் பென்ட்ரைவ் இருக்கிறது எனவைத்து கொள்வோம் அதற்கு நீங்கள் E: என கொடுத்து Enter அழுத்தவும்.
5) attrib -h -s -r /s /d *.*vd டைப் செய்யுங்கள் ஒவ்வொருபகுதிக்கும் Space சரியாகக் கொடுக்கவும்.

- நீங்கள் சரியாக கொடுத்துள்ளீர்கள் என உறுதி செய்து கொண்டு Enter அழுத்துங்கள்.
- சில வினாடிகள் பொறுத்திருங்கள். இப்பொழுது உங்கள் பென்ட்ரைவ் சோதித்து பாருங்கள் உங்களுடைய பைல்கள் அனைத்தும் திரும்பவும் வந்திருக்கும்.

## பென்டிரைவில் பாதுகாப்பான Safely Remove வசதி

USB டிரைவ்களை பயன்படுத்தும் போது, அவசரத்தில் Safely Remove கொடுக்காமல் மறந்து விடுகிறோம். இதனால் பென்டிரைவ் போன்ற USB டிரைவ்கள் பழுதடைய வாய்ப்பு அதிகம். Safely Remove கொடுக்காமல், அதே நேரம் பென்டிரைவிற்கு எந்தவித பிரச்னையும் வராமல் தடுக்கலாம். இதற்கு,

1. முதலில் உங்கள் பென்டிரைவ் அல்லது வேறு ஏதேனும் USB Device ஒன்றை உங்கள் கணணியில் செருகவும்.
2. இப்போது ஆல Computer மீது ரைட் கிளிக் செய்து Manage என்பதை கிளிக் செய்யவும். இப்போது புதிய விண்டோ ஒன்று வரும், அதில் இடது புறத்தில் Device Manager என்பதை தெரிவு செய்யவும்.
3. இப்போது உங்கள் கணணியில் உள்ள Device கள் அனைத்தும் அதில் காண்பிக்கப்படும். அதில் Disk Drives -இல் உங்கள் Pen Drive/ USB Device பெயரை கண்டுபிடிக்கவும். அதன் மீது Double Click செய்யவும்.
4. இப்போது வரும் புதிய விண்டோவில் Policies என்w Tab-y; "Quick removal (default)" என்பதை தெரிவு செய்யவும்.

அவ்வளவு தான், இனிமேல் நீங்கள் Safely Remove என்பதை கொடுக்க தேவையில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறிவு

# சுயமாகவே பேஸ்புக்கில் கொமண்ட் எழுதும் வைரஸ் உருவாக்கம்!




சமூக வலைத்தளமான பேஸ்புக்கில், தானாகவே லைக் போட்டு, கமெண்ட் எழுதும் வைரஸ் ஒன்றினை, வைரஸ் எதிர்ப்பு புரோகிராம் எழுதும் நிறுவனத்தினர் கண்டறிந்துள்ளனர்.

நல்ல வேளையாக, இது பிரேசில் நாட்டு பேஸ்புக் அக்கவுண்ட்களில் மட்டுமே, தற்போதைக்கு, இயங்குகிறது. மற்ற நாடுகளிலும், குறிப்பாக ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளிலும் பரவும் வாய்ப்பு உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு ட்ரோஜன் ஹார்ஸ் வைரஸ். இதற்கு "வுசழதயடெ:துளு.`.குநடினிழள" எனப் பெயரிடப்பட்டுள்ளது. குரோம் பிரவுசர் மற்றும் பயர்பாக்ஸ் ஆட் ஆன் புரோகிராம் என்ற போர்வையில் இது கம்ப்யூட்டரின் உள்ளே நுழைகிறது.

இது பாதித்த கம்ப்யூட்டரில், கம்ப்யூட்டர் பயன்படுத்துபவர், பேஸ்புக்கில் லாக் இன் செய்துள்ளாரா எனக் கவனிக்கிறது. லாக் இன் செய்திடும் பட்சத்தில், தான் அனுப்பப்பட்டுள்ள தளத்திலிருந்து, கம்ப்யூட்டரை செட் அப் செய்திடும் பைல் ஒன்றை இறக்கிக் கொள்கிறது.

இதில் பல கட்டளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம், மற்றொரு பக்கத்திற்கான லிங்க் அமைத்தல், பதியப்பட்ட கருத்துக்களை ஷேர் செய்தல், நண்பர்கள் பக்கத்தில் கருத்துக்களை எழுதுதல், ஏற்கனவே எழுதப்பட்டுள்ளவற்றிற்கு கமெண்ட் அமைத்தல், நண்பர்களை குழுவில் சேருமாறு அழைப்பு அனுப்புதல் எனப் பல்வேறு செயல்பாடுகளுக்கான கட்டளைகள் இதில் உள்ளன.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த ட்ரோஜன் வைரஸ், தன்னை அனுப்பியவர்களை அடிக்கடி தொடர்பு கொண்டு, தன்னை அப்டேட் செய்து கொண்டு செயல்படுகிறது. மைக்ரோசாப்ட் நிறுவனம், இது போன்ற செயல்களுக்குப் பலியான, ஒரு பேஸ்புக் பக்கத்தினைத் தொடர்ந்து தன் கண்காணிப்பில் வைத்து இந்த ஆய்வினை நடத்தி, இதனைக் கண்டறிந்தது.

தற்போதைக்கு இந்த ட்ரோஜன் வைரஸ் பிரச்னை, பிரேசில் நாட்டில் மட்டுமே உள்ளது. பிரேசிலியன் மொழியில் மட்டுமே இது சொற்களை அமைக்கிறது. விரைவில் ஆங்கிலத்திலும் இது செயல்படும் வகையில் மாற்றி அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதிலிருந்து தப்பிக்க, தேவையற்ற, நம்பிக்கை கொள்ள முடியாத ஆட் ஆன் புரோகிராம்களை, டவுண்லோட் செய்து அமைக்க வேண்டாம் என மைக்ரோசாப்ட் மற்றும் பிரபல ஆண்ட்டி வைரஸ் நிறுவனங்கள் கேட்டுக் கொண்டுள்ளன.

மேலும், பேஸ்புக் தளத்தினைப் பார்த்துப் பயன்படுத்திய பின்னர், அதிலிருந்து கட்டாயமாக லாக் அவுட் செய்திட வேண்டும் எனவும் மைக்ரோசாப்ட் அறிவுறுத்தியுள்ளது.

## மாணவர்களுக்காக Sky Drive தரும் மேலதிக சேமிப்பு வசதி!

மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட கிளவுட் ஸ்டோரேஜ் எனப்படும் ஒன்லைன் சேமிப்பு வசதியானது மில்லியன் கணக்கான பயனர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் தற்போது 7GB வரையிலான இடவசதி தரப்படுகின்ற போதிலும் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் .

edu என்று முடிவடையும் மின்னஞ்சல் முகவரியை உருவாக்கி அதன் மூலம் Sky Drive வசதியை பயன்படுத்த முனையும் மாணவர்களுக்கு மேலதிகமாக 3GB வசதி தரப்படவுள்ளது.

அதாவது மொத்தமாக 10GB சேமிப்பு வசதியை பெற்றுக்கொள்ள முடியும். எனினும் இந்த மேலதிக சேமிப்பு வசதியானது ஒரு வருட காலத்திற்கே வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி பதில்

**கேள்வி:**

ஸாலிம்(ரலி) அவர்களுக்கு ஸஹ்லா(ரழி) அவர்கள் பால் கொடுத்தார்கள் என்று ஹதீஸ் கூறுகின்றது. இந்த ஹதீஸை மறுப்பவர்கள் பின்வருமாறு வாதிக்கின்றனர். ஒரு பெண்ணின் மார்பகத்தில் பால் வர வேண்டும் என்றால் அவளுக்கு சிறு குழந்தை இருக்க வேண்டும். ஸாலிம்(ரலி) அவர்களுக்கு பால் புகட்டும் போது ஸஹ்லா(ரழி) அவர்களுக்குக் கைக்குழந்தை இருந்ததாக எந்த ஆதாரமும் இல்லை. கைக்குழந்தை இல்லாத போது அவர்கள் எப்படி பால் கொடுத்தார்கள்?

இந்த வாதத்தின் உண்மை நிலை என்ன? இதற்கான தெளிவை உண்மை உதயத்தின் மூலமாக எதிர்பார்க்கின்றேன்.

**பதில்:**

தவ்ஹீத் பேசக்கூடிய இளம் சகோதரர்களது சிந்தனைகள் மிக மோசமாக சிதறடிக்கப்பட்டு வருவதால் இது குறித்து விரிவாகவே விளக்கலாம் என்று நினைக்கின்றேன்.

ஒரு சம்பவத்தைப் புரிந்து கொள்ளும் போது அந்த சம்பவத்திலிருந்து முறையாக சிந்திக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஹதீஸை மறுப்பதற்கு ஏதாவது வாதம் செய்ய வேண்டும் என்ற வழி தவறிய சிந்தனையின் அடிப்படையில் கேள்விகளைத் தொடுப்பது ஹதீஸை அணுகும் முறையல்ல.

குறித்த ஹதீஸில் ஸாலிம் அவர்களுக்குப் பால் கொடுத்தார்கள் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. அப்படியென்றால் அவர்களுக்கு அந்த சந்தர்ப்பத்தில் வேறு குழந்தை இருந்திருக்கின்றது என்பதுதானே அர்த்தம்!

நபி(ஸல்) அவர்கள் பாலூட்டச் சொன்ன போது ஸாலிம் வளர்ந்து வாலிபராகி விட்டாரே என ஸஹ்லா(ரழி) அவர்கள் கேட்கின்றார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஸஹ்லா(ரழி) அவர்களிடம் கைக்குழந்தை இல்லையென்றால் என்னிடத்தில் பால் இல்லாத போது நான் எப்படிப் பால் கொடுப்பது என்றல்லவா கேட்டிருப்பார்கள்?

"நீ பால் கொடு" என்று நபி(ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் என்றால் ஸஹ்லா(ரழி) அவர்கள் பால் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கின்றார்கள் என்பதை நபி(ஸல்) அறிந்துதான் சொல்லியிருக்கிறார்கள் என்று தானே புரிந்து கொள்ள வேண்டும்?

ஸஹ்லா(ரழி) அவர்களுக்கு அப்போது கைக்குழந்தை இருந்ததா? நிரூபிக்க முடியுமா? எனக் கேள்வி எழுப்பி தம்மைப் பகுத்தறிவாளர் களாகவும் உலக மகா மேதைகளாகவும் பறைசாற்ற விரும்புபவர்களின் சிந்தனையில் முழுக்க முழுக்க ஷைத்தானின் ஆதிக்கம் நுழைந்திருப்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

இந்த ஹதீஸை ஆயிஷா(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஆயிஷா(ரழி) அவர்கள் ஸஹ்லா(ரழி) அவர்களது காலத்தில் வாழ்ந்தவர்கள். அவருக்கு அப்போது கைக் குழந்தை இல்லையென்றால் குழந்தை இல்லாமல் எப்படிப் பால் கொடுத்தார்கள் என்ற சிந்தனை ஆயிஷா(ரலி) அவர்களுக்கு வந்திருக்காதா?

இந்த ஹதீஸை வைத்து ஆயிஷா(ரழி) அவர்கள் யாருக்கு வேண்டுமானாலும் பால் புகட்டி மஹ்ரமான உறவுமுறையை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று கருதுகின்றார்கள். நபி(ஸல்) அவர்களது ஏனைய மனைவியர் இது ஸாலிம்(ரலி) அவர்களுக்குக்கு மட்டும் உரிய பிரத்தியேக சட்டம் என்ற கருத்தில் இருக்கின்றனர். அவர்களுக் கிடையில் இது குறித்து வாதப் பிரதிவாதங்கள் கூட இடம் பெற்றுள்ளது.

ஸஹ்லா (ரழி) அவர்கள் ஸாலிம்(ரலி) அவர்களுக்குப் பால் கொடுத்து தாய்-பிள்ளை உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள் என ஆயிஷா(ரலி) அவர்கள் கூறும் போது என்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிஷா இப்படிக் கூறுகின்றீர்கள்? ஸஹ்லா எப்படிப் பால் கொடுத்தார்? அவருக்குத்தான் அப்போது குழந்தையே இருக்கவில்லையே! என்று ஒருவரும் கேள்வி எழுப்பவில்லை என்றால் அவருக்குக் கைக்குழந்தை இருந்துள்ளது என்பதுதானே அர்த்தம்?

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களது முஅத்தாதான் முதலில் தொகுக்கப்பட்ட ஹதீஸ் கிரந்தமாகும். இமாம் மாலிக் ஆரம்ப கால இமாம்களில் ஒருவர்; மதீனாவில் விசித்தவர். அவரது முஅஇத்தாவிலும் இந்த செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. (2247)

ஸஹ்லா ஸாலிமுக்குப் பால் கொடுத்ததாக சொல்லுகின்றோமே ஸஹ்லாவுக்கு அப்போது குழந்தை இருந்ததா? என்ற கேள்வி இமாம் மாலிக் அவர்களுக்கு வரவில்லை.

இவர்கள் மறுக்கும் இந்த ஹதீஸை இமாம்களான புஹாரி, முஸ்லிம், நஸாஈ, இப்னுமாஜா, அஹ்மத், பைஹகி, தபறானி, இப்னு ஸஅத், ஷாபீ போன்ற பலரும் பதிவு செய்துள்ளனர். அவர்களுக்கெல்லாம் இப்படியொரு கேள்வி எழவில்லை. இமாம் புஹாரி போன்றவர்கள் ஹதீஸ் கலையில் மட்டுமன்றி வரலாற்றுக் கலையிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள். ஸஹ்லாவுக்கு வேறு குழந்தைகள் இருக்கவில்லையே! என்ற சிந்தனை அவர்களுக்கு வரவில்லை என்றால் வேறு குழந்தை இருந்தது என்று தான் அர்த்தம்.

ஸஹாபாக்கள், நபி(ﷺ) அவர்களது மனைவியர்கள், நபித்தோழர்கள், இமாம்கள் யாருக்குமே வராத கேள்வி இந்த ஹதீஸை மறுப்பவர்களுக்கு வருகின்றது என்றால் இவகள் தவறான வழியில் சிந்திப்பவர்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. இவர்களது சிந்தனைப் போக்கும் ஹதீஸ்களை அணுகும் முறையும் பிழையானது என்பதைப் புரிய வைக்கத்தான் இந்த விளக்கங்களைக் கூறினோம்.

ஸஹ்லா(ரழி) அவர்களுக்கு அவரது கணவர் அபூஹுதைபா(﵁) அவர்கள் மூலமாக முஹம்மத் என்ற பெயரில் ஒரு குழந்தை இருந்தது என்பது வரலாற்றில் மிகத் தெளிவாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. வரலாற்றை எப்படி மூடி மறைக்கின்றார்கள் என்தைத் தெளிவு படுத்துவதற்காக இது குறித்து விரிவாக இங்கு விளக்கப்படுகின்றது.

ஸஹ்லா(﵁) அவர்கள் தமது கணவர் அபூஹுதைபா(﵁) அவர்களுடன் ஹபஷாவிற்கு ஹிஜ்ரத் சென்றார்கள். அப்போது அங்கு வைத்து ஒரு குழந்தை கிடைத்தது. அபூஹுதைபா, ஸாலிம் இருவரும் யமாமா போரில் ஷஹீதான பின்னர் முஹம்மத் என்ற இவரை உஸ்மான்(﵁) அவர்கள் பொறுப்பெடுத்து வளர்த்தார்கள். இந்த செய்தி பின்வருவன போன்ற இருபதுக்கும் மேற்பட்ட வரலாற்று நூல்களில் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது போன்ற இன்னும் பல நூற்களில்

أسد الغابة

أنساب الأشراف

الجوهرة في نسب النبي وأصحابه العشرة

الدرر في اختصار المغازي والسير

الدرر لابن عبد البر

الروض الأنف

السيرة النبوية لابن كثير

تحقيق الجزء 6 من سبل الهدى والرشاد للإمام محمد الشامي

تهذيب سيرة ابن هشام

جوامع السيرة

سيرة ابن إسحاق

سيرة ابن هشام

معرفة الصحابة لأبي نعيم

البدء والتاريخ

البداية والنهاية

(1) المستدرك - (67/4) 6991

تاريخ الإسلام للإمام الذهبي

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

المعجم الكبير للطبراني

سير أعلام النبلاء

الطبقات الكبرى لابن سعد

ஸஹ்லா(ரழி) அவர்களுக்கு முஹம்மத் என்ற பெயரில் ஒரு கைக்குழந்தை இருந்தது என்ற செய்தி மிகத் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. நபி(ஸல்) அவர்களது காலத்தில் முஹம்மத் எனப் பெயர் சூட்டப்பட்ட குழந்தைகள் பற்றிப் பேசும் போது கூட இவர் குறித்துப் பேசப்படுகின்றது. நபி(ஸல்) அவர்கள் மரணிக்கும் போது இவருக்குப் பதினொரு வயது என்ற கருத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஸைனப்(ரழி) அவர்களை நபி(ஸல்) அவர்கள் மணப்பதற்கு முன்னர்தான் வளர்ப்புக் குழந்தை பற்றிய சட்டம் அருளப்படுகின்றது. ஸைனப்(ரழி) அவர்களை நபி(ஸல்) அவர்கள் ஹி. 3இல் அல்லது 5இல் மணந்தார்கள் என்ற தகவல்களைக் காணலாம். குழந்தைகளை அவர்களது தந்தையர்களுடன் சேர்த்து அழையுங்கள் என்ற வசனம் ஹிஜ்ரத்தின் ஆரம்பப் பகுதியில் அருளப்பட்டதாகும். ஸாலிம்(ரழி) அவர்களுக்குப் பால் கொடுத்த நிகழ்ச்சியும் அதையொட்டி ஹிஜ்ரத்தின் ஆரம்பப் பகுதியில் நடந்ததாகும். எனவே, ஸஹ்லா(ரழி) அவர்களுக்கு ஒரு கைக்குழந்தை இருக்கும் போதுதான் ஸாலிம்(ரழி) அவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்வு நடந்துள்ளதென்பது பல்வேறுபட்ட வரலாற்று நூல்கள் மூலம் உறுதி செய்யப்படுகின்றது. இத்தனை வரலாற்று நூல்களும் பேசக்கூடிய முஹம்மத் பின் அபூஹுதைபா என்ற ஸஹ்லா(ரழி) அவர்களின் குழந்தையின் வரலாற்றை இருட்டடிப்புச் செய்துவிட்டு அப்போது அவர்களுக்கு வேறு குழந்தைகள் இருக்கவில்லை, இருந்தது என்று கூறுபவர்கள் அதற்கான ஆதாரத்தைக் கூற வேண்டும் என்று குதர்க்க வாதம் புரிந்து வந்தனர்.

இவர்கள் தவறான வழியில் இருக்கின்றனர் என்பதை நடுநிலையானவர்கள் புரிந்து கொள்ள இதுவே போதியதாகும். வரட்டுப் பிடிவாதத்துடன் குருட்டு பக்தியுடன்தான் கொள்கை பேசுவோம் என்ற நிலைப்பாட்டில் உள்ளவர்களை எம்மால் ஒன்றும் செய்ய முடியாது!

## வலி நிவாரண மாத்திரைகளை பயன்படுத்துவதால் இருதய நோய் ஏற்படும் வாய்ப்பு மும்மடங்காகுமாம்!



வலி நிவாரண மாத்திரைகளை அதிகளவில் பயன்படுத்துவதன் மூலம் பல்வேறு பக்கவிளைவுகள் ஏற்படுவதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது. அதன்மூலம் இருதய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிவாரண மாத்திரைகளை பயன்படுத்துவதன் மூலம் இருதய நோய் ஏற்படும் வாய்ப்பு மும்மடங்காக அதிகரிப்பதாக குறித்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பல காலங்களாக நீடிக்கின்ற நோய்கள், மற்றும் அதிக வலிகளை ஏற்படுத்துகின்ற நோய்கள் வரும் சந்தர்ப்பத்தில், பலர் வலி நிவாரண மாத்திரைகளை பயன்படுத்துகின்றனர் இதன்போது வைத்தியர்களால் பரிந்துரைக்கப்பட்ட மாத்திரைகளை விட அதிகளவான மாத்திரைகளை உற்கொள்வது உடலுக்கு பாரியளவிலான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள நோய்களின்மூலம் நோவு அல்லது அதிகப்படியான வலிகள் ஏற்படும்போது உடனடியாக வைத்தியரை நாடி சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு மாறான வலி நிவாரண மாத்திரைகளை அதிகளவு உட்கொள்வதன் காரணமாக வாழ்நாள் நோயாளிகளாக மாறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமென குறித்த ஆய்வின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டி இல: 135

01. தனக்கு விருப்பமான பைரூஹா தோட்டமொன்றை தர்மம் செய்த ஸஹாபி யார்?

02. மூஸா(அலை) கல்வி கற்கச் சென்ற பெரியாரின் பெயர் என்ன?

03. 'அல் இனாபா' என்றால் என்ன?

**(இக்கேள்விகளுக்கான விடைகள் இவ்விதழிலேயே இருக்கின்றன)**

**விடைகளைத் தபால் அட்டையில் மாத்திரம் எழுதிப் போட்டிக் கூப்பனையும் அதனுடன் இணைத்து 2013 ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.**

**உதயத்தின் போட்டி இலக்கம் 133 இல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான சரியான விடைகள்.**

01. உஸைர் (அலை)
02. ஹூத் ஹூத்
03. குனூதுன் நவாஸில்

## போட்டி இல. 133

### பரிசு பெறுவோர் விபரம்

**முதலாம் பரிசு**
அப்துர் ரஹ்மான் நிவ் காத்தான்குடி - 03

**இரண்டாம் பரிசு**
சுரையா நவாப் பறகஹதெனிய.

**மூன்றாம் பரிசு**
A.H.F. ஹஸ்னா புத்தளம்

### பாராட்டுப் பெறுவோர்

01. A.A.A. இர்ஷாதா - கெக்கிராவ
02. M.R.M. ரம்ஸி - வெலம்பொட
03. M.N.F. நஸீஹா - பன்னல
04. F. அஸ்மா ரமீஸ் - கொழும்பு 02
05. T.A. ஸைனப் - கந்தளாய்
06. I.M. சுதைஸ் - முள்ளிபொதான
07. I.H.F. பர்வின் - ஹபுகஸ்தலாவ
08. இபாஸா இக்பால் - தெல்தெனிய
09. M.N.F. டில்ஷானா - வெலிகம
10. F. ஹுஸ்னா - கல்-எலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Registered as a News Paper in Sri Lanka in the Department of Post of Sri Lanka Under QD/110/News/2013

இதோ வெளிவந்துவிட்டது

ஜமாஅத்தின் புதிய வெளியீடு

# பெண்களே!

## உங்களுக்குத்தான்




பெண்களுக்கான பல வழிகாட்டல்களுடன்
குழந்தை வளர்ப்பு குறித்து
ஆன்மீக ரீதியிலும்
உளவியல் அடிப்படையிலும்
விரிவாகப் பேசும் இந்நூல்
அனைவரும் படித்துப்
பயன்பெற வேண்டியதாகும்.

**தனிப்பிரதி 150/-**

மொத்தமாகப் பெறுபவர்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 071 8298007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org